புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜனவரி 02, 2014 | புரட்சி 12 | முழக்கம் 51 | விலை: ரூ.3.00

## வினாக்கள்... விடைகள்...!

+ 12 ஆண்டுகளுக்குப் பிறகு சத்தியமூர்த்தி பவனில் காங்கிரஸ் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. **– செய்தி**

அப்படியா? 2004, 2009 நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் பற்றி எல்லாம் விரிவாக அலசியிருப்பாங்க.

+ திருப்பதி, திருமலையில் அடிக்கடி கம்ப்யூட்டர் கோளாறு ஏற்படுவதால், பக்தர்கள் அவதிக்கு உள்ளாகிறார்கள். **– 'தினமலர்' செய்தி**

இதை 'ஏழுமலையான்' கவனத்துக்குக் கொண்டு செல்லலாம் என்றால் அதற்கும் 'மின்னஞ்சல்' வேலை செய்ய வேண்டுமே! என்னதான் செய்வது?

+ உ.பி.யில் 'ராம ராஜ்யம்' அமைய வேண்டும். **– மோடி**

அமைக்கலாம்! தேர்தல் ஆணையத்தில் 'ஸ்ரீராமன்' கட்சியை பதிவு செய்து விட்டீர்களா?

+ எனக்காக வைக்கப்படும் பேனர்களை விழா முடிந்ததும் உடனே அகற்றச் சொல்லி விட்டேன். **– அதிகாரிகள் கூட்டத்தில் ஜெயலலிதா**

சரிங்க மேடம். இதையும் ஒரு பேனரில் எழுதி, பேனர்களோடு பேனர்களாக வைத்து விடலாம்.

+ ஆம் ஆத்மி கட்சித் தலைவரான கேத்ரிவால் என்ற சாதாரண மனிதரை முதல்வராக்கியது காங்கிரஸ். **– அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் பெருமிதம்**

காங்கிரஸ் தனிமைப்பட்டு நிற்கிறது என்று கூறிய ப. சிதம்பரத்துக்கு, இதுதான், சரியான பதிலடி! இப்படி எல்லா மாநிலத்துலயும் பிறகட்சிக் காரர்களையே முதல்வராக்கிடுங்க. காங்கிரசை தனிப் படுத்தவே முடியாது!

+ இந்து கடவுள்களை அவதூறாகப் பேசியதாக காவல்துறை இயக்குநர் அலுவலகத்தில் இந்து அமைப்புகள் புகார். **– செய்தி**

இதை கடவுள்களிடம் தானே முறையிட வேண்டும்? கடவுளை நம்பாமல் காவல் துறைக்குப் போய் இந்துக் கடவுள்களை நீங்களே அவமதிக்கலாமா?

+ காங்கிரஸ் கட்சி, பிரதமர் வேட்பாளர் யார் என்பதை உடனே அறிவிக்க வேண்டும். **– ப. சிதம்பரம்**

என்ன புரியாம பேசுறீங்க... கட்சியே அதற்கு ஆள் தேடிக் கொண்டிருக்கும்போது, உங்கள் தலைமீதே திருப்பிப் போட்டுவிட்டால், அப்புறம் என்ன செய்வீங்க? யோசிச்சுப் பேசுங்க சார்.

+ டெல்லி முதல்வர் கெஜ்ரிவால், மெட்ரோ ரயிலில் ஏறி வந்து பதவியேற்றார். **– செய்தி**

போச்சு. எங்க நாட்டுல இனி பதவியேற்பு நடக்கிற இடத்துக்கே தனியாக சிறப்பு ரயில் பாதை அமைச்சு, அதுல, ஏறி வந்து, பதவி ஏற்க ஆரம்பிச்சுடுவாங்கலே...

+ இலட்சிய தி.மு.க.வை கலைத்துவிட்டு, டி. ராஜேந்தர் தி.மு.க.வில் சேர்ந்தார். **– செய்தி**

இலட்சியத்தை நீக்கிக் கொண்ட இலட்சியவாதியே, வருக! வருக!

## ஜெயலலிதா ஆட்சியின் அடக்குமுறை தர்பார்

# 2 மாதங்களுக்கு மேலாக சிறையில் வாடும் கழகத் தோழர்கள்

ஜெயலலிதாவின் அடக்குமுறை ஆட்சியில் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட தோழர்களை கைது செய்து, இரண்டு மாதங்கள் உருண்டோடி விட்டன. சேலம் சிறையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர்கள் கிருஷ்ணன், அருண் குமார், அம்பிகாபதி ஆகியோர் அடைக்கப்பட்டுள்ளனர். நவம்பர் 2 ஆம் தேதி விடியற்காலை தோழர் கொளத்தூர் மணி, அவரது இல்லத்தில் கைது செய்யப்பட்டார். அக்டோபர் 30 ஆம் தேதி மற்ற தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.



அக்டோபர் 29 ஆம் தேதி சென்னையில் தோழர்கள் உமாபதி, இராவணன், மாரிமுத்து, மனோகரன் ஆகியோர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதங்களாகவும் தீர்மானங்களாகவும் வலியுறுத்திய கோரிக்கையை கழகத் தோழர்கள் வலியுறுத்தினால் அது தேசப் பாதுகாப்பு என்ற குற்றமாகி விடுகிறது.

இது ஜெயலலிதா ஆட்சியின் இரட்டை வேடம்!

ஆட்சிகள் மாறினாலும் தொடர்ந்து அடக்குமுறைச் சட்டங்களுக்கு பெரியார் இயக்கத் தோழர்கள் பலிகடாவாகிறார்கள்!

கடந்த நவம்பரில் உயர்நீதிமன்றத்தில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண் ஆகியோர் மனு தாக்கல் செய்தனர். நீதிமன்றம் வழக்கு விசாரணையை 6 வாரம் தள்ளிப் போட்டுள்ளது.

இடைக்கால பிணை கோரியும், தேசிய பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்யக் கோரியும் ஜனவரி 2 ஆம் தேதி கழக வழக்கறிஞர்கள் மனுதாக்கல் செய்வதற்கு ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

## தோழர்களின் மக்கள் சந்திப்பு இயக்கம் வெற்றி நடை போடுகிறது

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், மக்கள் சந்திப்புத் திட்டத்தின் கீழ் முனைப்போடு மக்களை சந்தித்து, கழகத்தின் செயல்பாடுகளை விளக்கும் துண்டறிக்கைகளை வழங்கி, 10 ரூபாய் நன்கொடை திரட்டும் இயக்கத்தை நடத்தி வருகிறார்கள்.

ஈரோட்டில் தோழர் சிவானந்தம் 600க்கும் அதிகமான மக்களை சந்தித்துள்ளார். மக்கள் ஆதரவு தருவதாகவும், கொடுக்கப்பட்ட இலக்கைவிட அதிகமாக மக்களை சந்திப்போம் என்றும் தெரிவித்துள்ளார். முதல் தவணையாக ரூ.5000, பொருளாளரிடம் கொடுத்துள்ளார்.

பவானியில் தோழர் வேல்முருகன், மக்கள் சந்திப்பு இயக்கத்தை தொடர்ச்சியாக செய்து வருகின்றார். தி.க. தலைவர் வீரமணி தாக்கப்பட்டபோது, கண்டனம் தெரிவித்த திராவிடர் விடுதலைக் கழகத்தின் அணுகுமுறையை பாராட்டியதோடு உண்மையான பெரியாரியக்கம் என தெரிவித்து தோழர்கள் நன்கொடை அளித்தனர்.

கோபி கோட்டாம்பாளைய தோழர் கார்த்திக், திருப்பூர் பேருந்து நிலையத்தில் 1 மணி நேரத்தில் 100 பேரை சந்தித்து முடித்தார். மேலும் நன்கொடை ரசீது புத்தகம் கேட்டு பொறுப்பாளர்களிடம் தொலைபேசியில் பேசினார்.

திருவாரூரில் காளிதாஸ், செந்தமிழன், முருகன் ஆகிய தோழர்கள் மக்களை சந்தித்து வருகிறார்கள். மக்கள் பேரதாரவு தருகிறார்கள். ஆயிரக்கணக்கில் நன்கொடை கேட்கும் காலத்தில் ரூ.10 நன்கொடை என இயக்கம் நடத்துவதை மக்கள் வியப்புடன் பார்த்தனர். பாராட்டினர். தாராளமாக நன்கொடை அளித்தனர்.


கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

## மயிலாடுதுறையில் கழக சார்பில் 'உயிர்வலி' ஆவணப்படம் திரையீடு

மயிலாடுதுறை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 'உயிர்வலி' ஆவணப்படம் திரையிடப்படும் நிகழ்வு 30.12.2013 திங்கள் மாலை 6.30 மணியளவில் புத்தகச் சோலை மேல் தளத்தில் உள்ள பெரியார் அரங்கில் சிறப்புடன் நடந்தது. கழக மாவட்டத் தலைவர் மா.மகாலிங்கம் தலைமை தாங்கினார்.

டி.பன்னீர்செல்வம் (ம.தி.மு.க.), வழக்கறிஞர் வேலு. குபேந்திரன் (வி.சி.), சுப்பு மகேசு (தமிழர் உரிமை இயக்கம்), வழக்கறிஞர் ஜெ. சங்கர் (கிழக்கு கடல் மக்கள் பாதுகாப்பு இயக்கம்), தனவேந்திரன் (ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்), எஸ். சுந்தர் (உழைக்கும் விவசாயிகள் இயக்கம்), ந. கலிய பெருமாள் (திருக்குறள் பேரவை) ஆகியோர் உரையைத் தொடர்ந்து, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆவணப்படம் குறித்தும், பேரறிவாளன் உள்ளிட்ட தோழர்கள் மீதான வழக்குகளின், உச்சநீதிமன்ற விசாரணைகள் குறித்தும், ராஜீவ் கொலை வழக்கில் முறையான விசாரணைகள் நடத்தப்படாமை குறித்தும், அரிதிலும் அரிதான வழக்குகளை தீர்மானிப்பதில் நீதிமன்றங்களில் நடக்கும் குழப்பங்கள் குறித்தும் விரிவாக விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து ஆவணப் படம் திரையிடப்பட்டது. கழகத் தோழர்களும் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உணர்வாளர்களும் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்தனர்.



# தூற்றலுக்கும் ஆத்திரத்துக்கும் ஆளானேன்

## பெரியார்

*பெரியார் தனது எதிர்நீச்சல் பயணம் குறித்து செய்துள்ள சுயமதிப்பீடு இது. வாழப்போவது இன்னும் சிலகாலம்தான் என்று எழுதும் பெரியார், அதற்குப் பிறகு 45 ஆண்டுகாலம் சமுதாயத்துக்காகவே உழைத்திருக்கிறார்.*

“பொதுவாக நமது பிரசங்கத்தினாலும், ‘குடி அரசி’னாலும் நான் செய்து வந்த பிரச்சாரத்தில் அரசியல் இயக்கங்கள் என்பவைகளைக் கண்டித்தேன். அரசியல் தலைவர் என்பவர்களைக் கண்டித்தேன். மதம் என்பதைக் கண்டித்தேன். மதத் தலவர்கள் என்பவரைக் கண்டித்தேன். மதச் சடங்கு என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன். குருக்கள் என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன். கோவில் என்பதைக் கண்டித்திருக்கிறேன். சாமி என்பதைக் கண்டித்திருக்கிறேன். சாத்திரம் என்பதைக் கண்டித்திருக்கிறேன். வேதம் என்று சொல்வதைக் கண்டித்திருக்கிறேன். பார்ப்பனீயம் என்பதைக் கண்டித்திருக்கிறேன். சாதி என்பதைக் கண்டித்திருக்கிறேன். அரசாங்கம் என்பதைக் கண்டித்திருக்கிறேன். உத்தியோகம் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன். நீதி ஸ்தலம் என்பதைக் கண்டித்திருக்கிறேன். நியாயாதிபதி என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன். நிர்வாக ஸ்தலங்கள் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன். ஜனப் பிரதிநிதித்துவம் என்பதைக் கண்டித்திருக்கிறேன். தேர்தல் என்பதைக் கண்டித்திருக்கிறேன். கல்வி சுயராச்சியம் என்பதைக் கண்டித்திருக்கிறேன். ஸ்ரீமான்கள் கல்யாண சுந்தர முதலியார், வரதராசுலு நாயுடு, இராசகோபாலாச்சாரியார் முதலிய ஒரே துறையில் வேலை செய்துவந்த நண்பர்களைக் கண்டித்திருக்கிறேன். இன்னும் என்னென்னவற்றையோ, யார் யாரையோ கண்டித்திருக்கிறேன். கோபம் வரும்படி வைதுமிருக்கிறேன்.

எதைக் கண்டித்திருக்கிறேன். எதைக் கண்டிக்கவில்லை என்பது எனக்கு ஞாபகத்திற்கு வரமாட்டேன் என்கிறது. இன்னமும் ஏதாவது எழுதலாமென்று பேனாவை எடுத்தாலும், பேசலாமென்று வாயைத் திறந்தாலும், கண்டிக்கவும், வையவும், துக்கப்படவுமான நிலைமை ஏற்படுகிறதே ஒழிய, வேறில்லை. கண்டிக்கத்தகாத இயக்கமோ, திட்டமோ, அபிப்பிராயமோ என் கண்களுக்குப் படமாட்டேன் என்கிறது.

இவைகளின்றி எனது வார்த்தைகளும், எழுத்துகளும், செய்கைகளும் தேசத் துரோகம் என்றும், வகுப்புத் துவேஷம் என்றும், பிராமண துவேஷம் என்றும், மான நஷ்டமென்றும், அவதூறு என்றும், ராஜ துவேஷம் என்றும், நாத்திகம் என்றும், மதத் தூஷணை என்றும் சிலர் சொல்லவும், ஆத்திரப்படவும் ஆளானேன். அரசியல் தலைவர்கள், தேசாபிமானிகள், தேச பக்தர்கள் என்பவர்கள் என்னை வையவும், என்னைத் தண்டித்து ஜெயிலில் வைக்கும்படி அரசாங்கத்தைக் கெஞ்சவும் ஆளானேன். இந்த இன்பமற்ற காரியங்களை நான் ஏன் செய்ய வேண்டும்? சிலருக்காவது மனவருத்தத்தையும் அதிருப்தியையும் கொடுக்கத்தக்க காரியத்தை ஏன் செய்ய வேண்டும்? என்று நானே யோசிப்பதுண்டு. சிற்சில சமயங்களில் யாரோ, எப்படியோ போகட்டும், நாம் ஏன் இக்கவலையும் இவ்வளவு தொல்லையும் அடைய வேண்டும்?

“நமக்கென்ன? இதனால் ஜீவனமா? பணம், புகழ், கீர்த்தி, சம்பாதனையா? ஏன் நமக்கு இத்தனை எதிரிகள்? ஒரு பத்திரிகையாவது உதவி உண்டா? இமயமலை –வெயிலில் காய்கின்றது என்று குடை பிடிப்பதுபோல இருக்கின்றது என்பதாக நினைத்து விலகிவிடலாம் என்று யோசிப்பதுண்டு. ஆனால், விலகுவதில்தான் என்ன லாபம்? ஏறக்குறைய நமது ஆயுட்காலமும் தீர்ந்துவிட்டது. இனி நாலோ அய்ந்தோ அல்லது அதிகமிருந்தால் பத்து வயதுக் காலமோ இருக்கலாம். இந்தக் கொஞ்ச காலத்தை ஏன் நமது மனசாட்சிக்கு விட்டுவிடக் கூடாது. விலகித்தான் என்ன காரியம் செய்யப் போகிறோம்? என்பதாகக் கருதி மறுபடியும் இதிலே உழன்று கொண்டிருக்கின்றோமே அல்லாமல் வேறில்லை.

**‘குடிஅரசு’ தலையங்கம் 1.5.1927**

### சென்னை கூட்டத்தில் விடுதலை இராசேந்திரன் பேச்சு

# மண்டேலா-பெரியார் சந்தித்த போராட்டக் களங்கள்

*கறுப்பினப் போராளி நெல்சன் மண்டேலா, பெரியார் நினைவு நாள் பொதுக்கூட்டம், மயிலைப் பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மந்தைவெளியில் 27.12.2013 அன்று நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ஜான், மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகர், வழக்கறிஞர் துரை, அருண், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினர்.*

கறுப்பர் இனத்தின் மீதான நிற ஒதுக்கல் என்ற அடிமைத்தனத்துக்கு எதிராக போராடி, 27 ஆண்டுகள் சிறையிலடைக்கப்பட்டு, உலக நாடுகள் தந்த அழுத்தத்தின் காரணமாக, விடுதலைப் பெற்று, வெள்ளை நிறவெறி அரசின் இனஒதுக்கல் கொள்கைக்கு முற்றுப் புள்ளி வைத்த மண்டேலாவின் போராட்ட வாழ்க்கையை விடுதலை இராசேந்திரன் சுட்டிக் காட்டினார் ரிவோலியா. நீதிமன்றத்தில் மண்டேலாவின் பிரகடனம், எந்த இனமும் மற்றொரு இனத்துக்கு அடிமையாவதை எதிர்த்தது. கறுப்பர், வெள்ளையர் என்ற இரு பிரிவினரும் சம உரிமைகளோடு வாழக்கூடிய ஒரு ஜனநாயக தாராள சுதந்திரக் கொள்கையையே அவர் வலியுறுத்தினார்.

வெள்ளை நிறவெறி ஆட்சி திணித்த இன ஒதுக்கல் கொள்கைகளை உலக நாடுகளும், அய்.நா.வும் நிராகரித்ததோடு, தென்னாப்பிரிக்க வெள்ளை நிறவெறி ஆட்சியுடன் உறவுகளையும் துண்டித்துக் கொண்டன. இந்தப் போராட்டத்தில் கறுப்பின மக்கள் மண்டேலாவை ஆதரித்தார்கள். சிறையிலிருந்து விடுதலையான மண்டேலா, 94 ஆம் ஆண்டிலிருந்து 99 ஆம் ஆண்டு வரை அந்நாட்டின் அதிபராக இருந்தார். அதற்குப் பிறகு, அவர் அரசியலிலிருந்து விலகிக் கொண்டார்.

பெரியார், பார்ப்பனியம் உருவாக்கிய ஜாதி அமைப்புக்கு எதிராகப் போராடியபோது, ஜாதியமைப்பில் பாதிக்கப்பட்ட மக்கள், கறுப்பர் இன மக்களைப்போல் பெரியாரை ஆதரிக்கவில்லை. மாறாக, பார்ப்பனியத்தில் மூழ்கிக் கிடந்த மக்கள், பெரியார் கருத்துகளுக்கு எதிராகவே இருந்தனர். எதிர்ப்புகளைப் புறந்தள்ளி, எதிர் நீச்சலில் கருத்துகளைப் பரப்பினார் பெரியார். ‘இன ஒதுக்கல்’ என்ற கோட்பாட்டில் கறுப்பர்களுக்கு தனி பள்ளி, தனி வழிபாட்டு இடம், தனி வாழ்விடம் என்று முற்றாக வெள்ளையர்களிடமிருந்து நிறத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டார்கள். அதே நேரத்தில் கறுப்பர்கள், வெள்ளையர்களுக்கு ‘அடிமை சேவகம்’ செய்தாக வேண்டும். அதுவே தர்மம் என்று கட்டாயப்படுத்தப்படவில்லை. அதற்கான ஆதாரங்கள், அவர்கள் மதநூல்களிலிருந்தும் எடுத்துக் காட்டப்படவில்லை. ஆனால், இங்கு பிறப்பின் அடிப்படையில் ஜாதியால் ஒதுக்கப்பட்ட மக்கள் பார்ப்பனர், உயர்ஜாதியினருக்கான சேவகர்களாக, அடிமைத் தொழில் செய்பவர்களாக கட்டாயப்படுத்தப்பட்டதோடு, மதம், கடவுள், நம்பிக்கை, சடங்கு, பழக்கம், சாஸ்திரம் என்பவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தி, அதை சமுதாயத்தில் நிலைநிறுத்தினார்கள்.

இங்கே பெரியாரை, தேசவிரோதி, மத விரோதி என்று பார்ப்பன ஏடுகள் எழுதின; பேசின. அங்கே மண்டேலா ‘பயங்கரவாதி’ பட்டியலில் சேர்க்கப்பட்டார். தென்னாப்பிரிக்க தேசிய காங்கிரசில் இளைஞர் அணியை உருவாக்கி, ‘தேசத்தின் ஈட்டி’ என்று பெயர் சூட்டி, ஆயுதப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்தார் மண்டேலோ. பிறகு அமைதி வழிக்குத் திரும்பினார். அமெரிக்க உளவுத் துறை, மண்டேலாவை பயங்கரவாதிகள் பட்டியலிலே வைத்திருந்தது. விடுதலைப் பெற்று, அதிபரான மண்டேலாவுக்கு 2002ஆம் ஆண்டில் அமெரிக்கா, அதன் மிக உயரிய விருதான அமெரிக்க அதிபருக்கான சுதந்திர விருதை வழங்கியபோதும், அதற்குப் பிறகு அமெரிக்க நாடாளுமன்றத்தில் அவர் 2 முறை பேசிய போதும், மண்டேலாவின் பெயர், அமெரிக்காவில் பயங்கரவாதிகள் பட்டியலில்தான் இருந்தது. அதற்குப் பிறகு 2008இல் தான் 6 ஆண்டுகள் கழித்துதான் அவர் பெயர் அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டது. வரலாற்றில் இப்படித்தான் பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்பட்டவர்கள் விடுதலை வீரர்களாக ஏற்கப்பட்டுள்ளனர்.

இன ஒதுக்கல் என்ற அடிப்படையிலும் ‘பாகுபடுத்தலுக்கும்’ (Discrimiation) எதிராக அய்.நா.வில் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஜாதியமைப்பின் கீழ் தீண்டாமையும் ஒரு ‘பாகுபாடுதான்’ என்பதை அய்.நா. ஏற்க வேண்டும் என்று இந்தியாவில் ஜாதி எதிர்ப்பு அமைப்புகள் 2001இல் டர்பனில் நடந்த இனவெறிக்கு எதிரான மாநாட்டில் வலியுறுத்தின. அதை இந்தியா எதிர்த்தது. இப்போது பிரிட்டன், தீண்டாமையும் இன ஒதுக்கல்தான் என்று சட்டம் இயற்றியுள்ளதோடு, அய்ரோப்பிய ஒன்றியமும் கடந்த அக்டோபர் 10 ஆம் தேதி இதே அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஆனால், ஜாதி முறையை உருவாக்கிய இந்தியப் பார்ப்பனியம், இந்தியாவில் இதை ஏற்க மறுக்கிறது என்று விளக்கிப் பேசினார், விடுதலை இராசேந்திரன்.

## கழகத் தலைவர் கைதைக் கண்டித்து ஆதித் தமிழர்பேரவை ஆர்ப்பாட்டம்

*தூத்துக்குடி மாவட்ட ஆதித் தமிழர் பேரவையின் சார்பில் 23.12.2013 அன்று மாலை 4 மணியளவில் தூத்துக்குடி பழைய மாநகராட்சி முன்பு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் கழகத் தோழர்கள் மீது போடப்பட்டுள்ள தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தியும், திண்டுக்கல் மாவட்டம் கரியாப்பட்டி, அருந்ததியர் மக்கள் மீது நடந்த சாதி வெறி தாக்குதலைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு ஆதித் தமிழர் பேரவையின் மாவட்டச் செயலாளர் ம.மு.சண்முகவேல் தலைமை வகித்தார். பேரவையின் மாநில துணைப் பொதுச் செயலாளர் க. கண்ணன் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் சொ.சு. தமிழினியன், மனித உரிமை பாதுகாப்பு மையம் வழக்குரைஞர் இராமச்சந்திரன், மனிதநேய மக்கள் கட்சி ஆசாத், புரட்சி பாரதம் முத்துபாண்டி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் குபேந்திரன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், பேரவையின் மாநில கொள்கைப் பரப்புச் செயலாளர் சு.க. சங்கர் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தை மாவடடத் துணைத் தலைவர் அருந்ததி அரசு ஒருங்கிணைத்தார். மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, மாவட்டச் செயலாளர் க.மதன், மாவட்ட பொருளாளர் ரவிசங்கர், துணைத் தலைவர் வே.பால்ராசு, மாநகரச் செயலாளர் பால். அறிவழகன், மாநகரத் தலைவர் சா.த.பிரபாகரன், ஆழ்வை ஒன்றியச் செயலாளர் இரா. உதயக்குமார், நகர பொருளாளர் அமிர்தராசு, செ. செல்லத்துரை, பேரவை வடக்கு மாவட்டச் செயலாளர் திலீபன் மற்றும் ஆதித் தமிழர் பேரவை, திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கொளத்தூர் மணி கைதை கண்டித்தும், கரியப்பட்டி வன்கொடுமையைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பினர்.*

## நம்மாழ்வார் முடிவெய்தினார்

வேளாண் துறையில் பன்னாட்டு ஊடுருவலை எதிர்த்தும், சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும் அரசுப் பதவிகளை உதறிவிட்டு, மக்களோடு மக்களாக இணைந்து போராடிய நம்மாழ்வார் (75) 30.12.2013 திங்கள் கிழமை அன்று முடிவெய்தினார்.

செயற்கை உரங்களற்ற இயற்கை விவசாயத்தை மக்களிடையே பரவச் செய்வதில் அவர் முனைப்புடன் செயல்பட்டார். கிராமப் புத்துருவாக்கம், கிராம வாழ்க்கை போன்ற கருத்துகளில் நமக்கு மாறுபாடு உண்டு என்றாலும், அவரது எளிமையும், அர்ப்பணிப்பு உணர்வும் போற்றத் தகுந்தது. வேளாண் துறைகளையும் கடந்து ஈழத் தமிழர்களுக்கும் மனித உரிமைக்கும் குரல் கொடுத்து வந்தவர் நம்மாழ்வார்.


திராவிடர் விடுதலைக் கழகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## திருச்சியில் கழகம் நடத்திய பெரியார் பயிலரங்கம்

# பார்ப்பனியம் – உலகமயமாக்கல் உறவுகள்

திருச்சி மண்டல திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக திருவெறும்பூர் தி.மு.க. தொழிற்சங்கக் கட்டிடத்தில் 29.12.2013 அன்று ஒரு நாள் பெரியார் பயிலரங்கம் சிறப்புடன் நடந்தது. மண்டல அமைப்புச் செயலாளர் புதியவன் வரவேற்புரையாற்ற, மாவட்ட கழக அமைப்பாளர் குணாராஜ் அறிமுக உரையாற்றினார். திருச்சி, பெரம்பலூர் பகுதியிலிருந்து 75 இளைஞர்கள் பயிற்சியில் பங்கேற்று, கேள்விகளை எழுப்பி, உரிய விளக்கங்களைப் பெற்றனர். முனைவர் ஜீவா, ‘உலக மயமாக்கல்’ என்ற தலைப்பிலும், எழுத்தாளர் மதிமாறன், ‘பெரியார்-அம்பேத்கர்’ என்ற தலைப்பிலும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ‘பெரியார் இயக்கம் எதிர்நோக்கும் சவால்கள்’ என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.




முனைவர் ஜீவா உரையின் சுருக்கம்:

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் என்று உலகமெங்கும் பரவிவரும் கொள்கை, இந்தியாவில் சமஸ்கிருதமயமாக்கலையும் சேர்த்துக் கொண்டு மக்களை சுரண்டி வருகிறது. 1991 ஆம் ஆண்டு நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது, இந்தியா ‘உலகமயமாக்கல்’ என்ற வலைக்குள் சிக்கியது. டங்கல் திட்டத்தில் இந்தியா கையெழுத்திட்டது. அதன்படி, அன்னிய நாட்டு உற்பத்திகளை இங்கே தாராளமாக விற்கலாம். ஆனால், இந்தியாவின் உற்பத்தி, வெளிநாட்டில் விற்பதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. வாடகை வீட்டுக்காரன், சொந்த வீட்டுக்காரனுக்கு நிபந்தனை விதிப்பது போல்தான்! அத்துடன், வெளிநாட்டு உற்பத்திப் பொருள்கள் எல்லாமே ‘தரம்’ மிக்கவை என்ற மூடநம்பிக்கையும் சேர்ந்து கொண்டது. இதன் வளர்ச்சிப் போக்கில், இந்தியாவை அன்னிய நாடுகள் மிரட்டத் தொடங்கிவிட்டன. ஒரு குடும்பம், அன்பினால் கட்டுண்டதாக இருக்கலாம். ஆனால், அதிகாரத்தால் கட்டுண்டு இருப்பதை பெரியார் எதிர்த்தார். எதையும் பயன்படுத்திவிட்டு தூக்கி எறி என்ற கோட்டுபாடுதான், உலகமயமாக்களின் அடிப்படையாகும். அவ்வப்போது கிடைக்கக்கூடிய தங்களின் லாபத்தையும் சுரண்டலையும் மட்டுமே அன்னிய மூலதனம் குறி வைத்தது. சமூகத்தின் பாதிப்புகளைப் பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. இது மனுசாஸ்திரம் கட்டமைத்த சிந்தனைதான். பார்ப்பனிய மேலாதிக்கம் ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டு மனுசாஸ்திரத்தை எழுதி, அதை பார்ப்பனர்கள் சமுதாயத்தின் சட்டமாக்கி விட்டார்கள். அதேபோல்தான் வளர்ந்த நாடுகள், தங்களை மேலும் வளமாக்கிக் கொள்ள வளரும் ஏழை நாடுகளை இந்த உலகமயமாக்கல் கொள்கை வழியாக சுரண்டி வருகிறார்கள்.

உலகமயமாக்கல் கொண்டு வந்த மற்றொரு ஆபத்து ‘சிறப்பு பொருளாதார மண்டலம்’ ஆகும். முரசொலி மாறன், மத்திய அமைச்சராக இருந்த போது கொண்டுவந்த திட்டம், சிறப்புப் பொருளாதார மண்டலம், நாட்டின் சட்டங்களிலிருந்து விடுவிக்கப் பெற்ற மண்டலமாக்கப்பட்டு, தொழிலாளர் சட்டங்கள் எதுவும் பொருந்தாது என்று அறிவித்ததோடு, தொழில் நிறுவனங்கள் செய்யும் முறைகேடுகளை தட்டிக் கேட்கும் தொழிலாளர்களின் சுயமரியாதையையும் பறித்தது.

சுற்றுச் சூழலை பாதிக்கக்கூடிய நஞ்சை, விஷவாயுவை கக்கக்கூடிய ஆபத்தான தொழிற்சாலைகளுக்கு இங்கே கதவு திறந்து விடப்பட்டது.

கூடங்குளம் மின்நிலையமும் அப்படித்தான் வந்தது. மக்களின் வாழ்வாதாரத்துக்கு, சுற்றுச் சூழலுக்கு ஆபத்துக்களை உருவாக்கும் திட்டங்களை சில விஞ்ஞானிகளைக் கொண்டு நியாயம் கற்பிக்கத் தொடங்கினார்கள். விஞ்ஞானத்தின் வளர்ச்சி என்றார்கள். இது விஞ்ஞானிகள் பரப்பி வரும் மூடநம்பிக்கை. விஞ்ஞானமும் அதன் வளர்ச்சியும் யாருக்கானது? அதனால் சமூகத்துக்குக் கிடைக்கும் பயன் என்ன என்பதே சரியான பெரியாரியல் பார்வையாக இருக்க முடியும்.

இந்த நாட்டில் பார்ப்பனர்கள் உருவாக்கிய சாஸ்திரங்களும், சட்டங்களும்தான் மக்களுக்கான ‘தர்மம்’ என்று கட்டமைத்து, ஒடுக்கப்பட்ட மக்களை பார்ப்பனியத்துக்கு சேவை செய்ய வைத்ததுதான் வரலாறாக இருந்து வந்திருக்கிறது. இதை எதிர்த்துப் போராடிய பெரியாரை, ‘பிரிட்டிஷ் ஆட்சியின் கைக்கூலி’ என்று பார்ப்பனர்கள் பேசினார்கள், எழுதினார்கள். இன்று வரை பேசி வருகிறார்கள். அதே பார்ப்பனர்கள்தான், இன்று நாட்டைச் சுரண்ட வந்திருக்கும் அன்னிய தொழில் நிறு வனங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் கைக்கூலி களாக செயல்படுகிறார்கள்.

பார்ப்பன சக்திகள், பிரதமர் பதவிக்கு முன்னிலைப்படுத்தும் நரேந்திரமோடி யார்? அவர் பன்னாட்டு நிறுவனத்தின் முகவர். அந்த நிறுவனங்கள்தான் பார்ப்பனர்களோடு இணைந்து, இந்தியாவின் அரசியல், பொருளாதார அதிகாரத்தை மோடியிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று திட்டமிட்டு களமிறங்கியுள்ளன.

இந்த சக்திகள், இந்துத்துவாவையும் அணி

## முனைவர் ஜீவா விளக்கம்

சேர்த்துக் கொண்டிருக்கின்றன. வரலாறு முழுதும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு துரோகம் செய்த பார்ப்பனர்கள் காட்டிய வழியில், இப்போது பன்னாட்டு நிறுவனங்களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடுகளை மறுக்கிறார்கள்.

இந்த சமுதாயத்திலிருந்து கல்வி பெற்று, முன்னேறி, திறமைகளை வளர்த்துக் கொண்ட இளைஞர்கள், பன்னாட்டு நிறுவனங்களில் நுழைந்து விட முடியாது. அவர்கள் நடத்தும் நேர்முகத் தேர்வில் எல்லாவற்றுக்கும் சரியான விடை தந்தாலும்கூட, அவர்களின் சமூகப் பின்னணியையே முக்கியமாகக் கருதிப் பார்க்கின்றன. விவசாயக் கூலியாகப் பிறந்தவரின் மகன் என்னதான் கல்வித் தேர்ச்சிப் பெற்றிருந்தாலும் ஒரு பெரிய நிறுவனத்தை நிர்வகிக்கும் அனுபவத்தைப் பெற்றிருக்க மாட்டார் என்று கூறி, அவர்களை புறந்தள்ளுகிறார்கள். இந்தச் செய்தியை ‘இந்தியா டுடே’ பத்திரிகை ஒரு முறை வெளியிட்டது.

சுரண்டலுக்கு ஏற்ற, சமூக அமைப்பு ஜாதிய சமூக அமைப்புதான். அதில்தான் மக்கள் ஒற்றுமை சிதைந்து நிற்கும். ஓரணியில் திரண்டு போராட மாட்டார்கள் என்று முடிவுக்கு வந்த பார்ப்பனிய பன்னாட்டு இந்துத்துவ சக்திகள் திட்டமிட்டு ஜாதியத்தைக் காப்பாற்றவும், அதற்காக ஜாதிய மோதல்களை உருவாக்கவும் விரும்புகிறார்கள். 2002 இல் மத அடிப்படையில் இஸ்லாமியர்களை இனப்படுகொலை செய்த மோடி தான், இப்போது பிரதமர் பதவிக்கு கூர்தீட்டப்படுகிறார். உலக மயமும், பார்ப்பனியமும் சந்திக்கும் புள்ளி, ஜாதியமைப்பைக் கூர்மைப்படுத்தும் இடம் தான். அதற்காக ‘இந்துத்துவா கருத்தாக்கம் கட்டமைக்கப்படுகிறது.

உலக வங்கியிடம் கையேந்தி நிற்கும் இந்தியா, அது விதிக்கும் நிபந்தனைகளை அப்படியே ஏற்றுக் கொள்கிறது. உர மான்யம், மருத்துவம், கல்வி போன்ற மக்கள் அடிப்படைத் தேவைகளுக்கான செலவுகளை நிறுத்தச் சொல்வது யார்? உலக வங்கிதான். நாடு திவாலாகும்; நிலைவரும்போது, பார்ப்பனர்கள் அமெரிக்காவுக்கும், அய்ரோப்பாவுக்கும் ஓடி விடுவார்கள். ஆனால், அப்போது உழைப்பால் இந்த நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கும் மக்கள், நிலம், நீர், சுற்றுச் சூழல் ஆபத்துகளால் சூழப்பட்டு, இந்த மண்ணிலேயே பாதிக்கப்பட்டவர்களாக வாழ வேண்டியிருக்கும். இது பார்ப்பானின் தேசமல்ல; எனவே அதுபற்றி அவர்களுக்கு கவலையும் இல்லை.

சென்னை நகரத்தின் கொசுக்கள், கொசு எதிர்ப்பு-அழிப்பு மருந்துகள், தடுப்பு முறைகள் அத்தனையையும் எதிர்கொண்டு தங்களை அழிய விடாமல் பாதுகாத்துக் கொள்வதுபோல் பார்ப்பனியம் தனது நெருக்கடியைத் தவிர்த்துக் கொள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கு கதவு திறந்துவிட்டு, அதன் உயர் அதிகாரப் பொறுப்பிலும் தன்னை அமர்த்திக் கொண்டுவிட்டது. இதைச் சந்திப்பதற்கு பெரியாரியம்தான் இன்று நமக்கான ஆயுதமாக திகழ்கிறது.

இந்த நிலையில் இங்கே, தமிழ் தேசியம் பேசும் சில அமைப்புகள், பெரியாரை புறக்கணிக்கத் துடிக்கின்றன. ‘கொக்கோகோலா’ சுரண்டலைவிட, அதில் தமிழில் எழுதினால் போதும் என்று நினைக்கிறார்கள்.

நம்மைச் சுற்றி நிற்கும் பிரச்சினைகளை நாம் எப்படிப் பார்க்கிறோம் என்பது முக்கியம். சுற்றுச் சூழல் பிரச்சினையானாலும், சமூகப் பிரச்சினையானாலும் அதற்கான தத்துவக் காரணங்கள், நடைமுறை காரணங்கள், தற்காலிகத் தீர்வுகள், நிரந்தரத் தீர்வுகள் அனைத்தையும் ஆய்வுக்குட்படுத்தி, அந்தப் பிரச்சிகளை சமூகப் பார்வையில் எப்படி அணுகுவது என்பதுதான் பகுத்தறிவு!

திராவிடர் விடுதலைக் கழகம் இந்தப் பார்வையில் செயல்படத் தொடங்கியிருக்கிறது. பார்ப்பனியத்தின் ஜாதி, தீண்டாமை, இந்துமத எதிர்ப்பு என்ற கொள்கைகளோடு திராவிடர் விடுதலைக் கழகம் , தனது செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ளாமல், பன்னாட்டு உலகமயமாக்கல் சுரண்டலையும் எதிர்க்கத் தொடங்கியிருப்பதுதான் பார்ப்பன மேலாதிக்கத்துக்கு அதன் சுரண்டலுக்கு தரும் சரியான நெருக்கடியாகும். பெரியாரியத்தின் அடுத்தக் கட்ட நகர்தலை தீவிரப்படுத்தும்போது, அது பார்ப்பனியத்துக்கு கடும் சவாலாகவே இருக்கும். இதைப் புரிந்து, பெரியாரியலை வளர்த்தெடுக்கும் பார்வையைக் கொண்டிருக்கும் ஒரே அமைப்பு திராவிடர் விடுதலைக் கழகம் தான் என்று நான் உறதியாகக் கூறுவேன். பெரியார் இந்த நாட்டின் மக்கள் விடுதலைக் கண்ணோட்டத்தில் இயல்பான தமிழ் தேசியத்தை முன் வைத்தார். ஆனால், இதைப் புறந்தள்ளிவிட்டு, மொழியை மட்டுமே முன்னிறுத்தும் இறக்குமதி தமிழ் தேசியத்தைப் பேசும் சில அமைப்புகள், பெரியாரை விமர்சிக்கவும், அவரை மக்களின் எதிரியாகவும் சித்திரிக்க முயலுகின்றன. இந்த முயற்சிகள் பார்ப்பனிய ஜாதி சமூக கட்டமைப்பைத் தகர்ப்பதற்குப் பயன்படப் போவது இல்லை, என்றார் முனைவர் ஜீவா.

**நமது செய்தியாளர்**

### நன்கொடை

திருச்சி திருவெறும்பூரில் நடந்த பயிலரங்கத்தில் கழக ஆதரவாளர் சு. இரவிச் சந்திரன், கழக ஏட்டின் வளர்ச்சிக்கு பொதுச் செயலாளரிடம் ரூ.10,000 நன்கொடை வழங்கினார்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

DATE OF PUBLICATION 02.01.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பெரியார் : தொடரப்பட வேண்டிய பயணம்

*‘தி இந்து’ தமிழ் நாளேடு, பெரியார் நினைவு நாளன்று திருத்தங்களுடன் வெளியிட்ட பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய கட்டுரையின் முழு வடிவம் இங்கே வெளியிடப்படுகிறது.*

பெரியாரின் பொது வாழ்க்கை எதிர் நீச்சலிலே தொடங்கியது. காந்தியின் தீண்டாமை, மதுவிலக்கு, கதர் பரப்புதல் போன்ற சமூக சீர்திருத்தக் கொள்கைகளே அவரை காங்கிரசுக்குள் இழுத்தது. அவர் காங்கிரசில் இருந்தது 5 ஆண்டுகாலம் தான். இரண்டு முறை மாநில தலைவர், இரண்டு முறை மாநில செயலாளர். அந்த 5 ஆண்டுகாலமும் வைக்கத்தில் தீண்டாமை எதிர்ப்பு; காங்கிரஸ் கட்சியே நடத்திய சேரன்மாதேவி குருகுலத்தில் பார்ப்பனக் குழந்தைகளுக்கு தனி இடத்தில் சாப்பாடு போட்டதற்கு எதிர்ப்பு; ‘வகுப்புவாரி பிரதிநிதித்துவம்’ என்ற அனைத்துப் பிரிவு மக்களுக்கும் கல்வி, வேலை வாய்ப்பைப் பகிர்ந்து அளிக்கும் ‘வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை’ காங்கிரஸ் கொள்கையாக ஏற்க வேண்டும் என்ற போராட்டம் - என்று போராட்டம் தான்!

மாகாண தலைவர், செயலாளர் பதவி கட்சியில் கிடைத்ததற்காக அவர் திருப்தி அடைந்துவிடவில்லை. 29 கவுரவ பதவிகளை உதறிவிட்டு காங்கிரசில் சேர்ந்த பெரியார், அனைவருக்கும் சமவாய்ப்புக் கொள்கையை ஏற்காத காங்கிரசி லிருந்தும் பதவிகளை உதறி வெளியேறவே செய்தார். அவர் தொடங்கிய சுயமரியாதை இயக்கமும் சரி, காங்கிரசில் இருந்த போதே தொடங்கிய ‘குடிஅரசு’ பத்திரிகையும் சரி, கடும் எதிர்ப்புகளின் ஊடாகவே பயணித்தது.

தனக்குத் தகுதி இருக்கிறதோ இல்லையோ, வேறு எவரும் செய்ய முன் வராத தொண்டினை, தானே மேலே தூக்கிப் போட்டுக் கொண்டு, தொண்டாற்றக் கிளம்பியிருக்கிறேன் என்று கூறிய பெரியார், தமிழர் சமுதாயத்தை மானமும், அறிவும் உள்ள சமுதாயமாக மாற்றுவதே தனது குறிக்கோள் என்றார். அவர் உருவாக்கிய சுயமரியாதை இயக்கமும், வலியுறுத்திய வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் தமிழர்களின் ‘மானம்-அறிவு’ மீட்டுருப்புக்கான கோட்பாடுகளே யாகும்.

உலகில் எங்குமே இல்லாத ஜாதியமைப்பு இந்த சமுதாயத்தில்தான் நிலவியது. இந்தக் கொடூரமான அமைப்பு மனிதர்களை பிறவியின் அடிப்படையில் அடிமைப்படுத்தியது. 1901 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை இவ்வாறு கூறியது:

“ஒரு மனிதனின் வாழ்க்கையை, வேலையை, இருப்பிடத்தை, சமூக அந்தஸ்தை, உணவை, பெயரை, உடையை, ஜாதியே தீர்மானிக்கிறது.”

அன்றைய சென்னை மாகாணத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கங்களின் எழுச்சி ஒரு பக்கம். காங்கிரஸ் இந்து மகாசபை மறுபக்கம். காங்கிரஸ் கட்சி மாநாடுகளிலேயே “பிராமணர்களுக்கு தனி சாப்பாடு, தனி இடம் உண்டு” என்ற விளம்பரங்கள் வெளி வந்தன. 1901 ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில், தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள், வர்ண தர்மத்தின் அடிப்படையில் தீண்டாமையை பின்பற்றியதை காந்தியே, தனது சுயசரிதையில் வேதனையோடு குறிப்பிடுகிறார்:

“தமிழர்களின் சமையல் கூடம் மற்றவர்களின் சமையல் கூடத்துக்குத் தொலைவில் தனியாக இருந்தது. தாங்கள் சாப்பிடுவதைப் பிறர் பார்த்துவிட்டால் தோஷம் என்று தமிழ்ப் பிரதிநிதிகள் கருதினார்கள். இது வர்ண தர்மத்தின் சீர்கேடாகவே எனக்குத் தோன்றிற்று”.

பார்ப்பனர்களிடமிருந்து இந்த ‘ஒதுக்கி வைத்தல்’ பிற சமூகங்களிடமும் பரவியது.

“பிராமணிய தாக்கமானது பிராமணரல்லாதாரின் சமூக, மத மற்றும் கலாச்சார வாழ்வில் பெருமளவு உணரப்பட்டது. இதர ‘பிராமணரல்லாத’ சமூகங்களும் சமஸ்கிருத மயமாக்கும் போக்கில் இழுத்துச் செல்லப்பட்டன. இதன் விளைவாக அவர்கள் கலப்புத் திருமணங்களையும் சமபந்தி போஜனத்தையும் கடைபிடிக்க வில்லை. அது அவர்கள் அந்தஸ்தை சமூகத்தில் தாழ்த்திவிடும் என்று அவர்கள் கருதினர்” என்கிறார், சுயமரியாதை இயக்கம் குறித்து ஆய்வு செய்த முனைவர் பி.எஸ். சந்திரபாபு!

இந்த சமூகப் பின்னணியில், எந்த மக்களின் சுயமரியாதையை மீட்டெடுக்க பெரியார் குரல் கொடுத்தாரோ, அவர்களிடமிருந்தே கடும் எதிர்ப்புகளை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தனது பணி, இமயமலை வெய்யிலில் காய்கிறதே என்று குடைபிடிப்பவன் பணி போல ஆகிவிட்டது என்றே பெரியாரே எழுதுகிறார்.

பெரியார் எதிர்ப்பாளர்கள், கடுமையாக விமர்சிக்கும் அவரது கடவுள் மறுப்பு கொள்கை, கடவுள் நம்பிக்கையாளர்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக, ‘மனித சமத்துவம்’ என்பதிலிருந்து உருவானது.

ஜாதியும், ஆச்சாரமும், மதம், கடவுள் எனும் மரத்தை சுற்றிக் கொண்டிருப்பதால், ஜாதியை மரத்திலிருந்து பிரித்தெடுக்க முயலுகிறேன். அது முடியாதபோது சேர்த்தே எதிர்க்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது என்று கூறும் பெரியார், இப்படி எல்லாவற்றையும் நாம் சேர்த்து எதிர்க்கும்போது, “உண்மையில் ஏதாவது சத்து இருந்தால் அழியாது” என்று கூறுகிறார். உண்மையில் பெரியார், கடவுள் நம்பிக்கையுள்ள பெரும்பான்மை சமூகத்துக்காகவே இறுதி வரை உழைத்தார்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற இடஒதுக்கீட்டுக் கொள்கையானாலும், ஜாதி, தீண்டாமைக்கு எதிரான போராட்டமானாலும், பெண்களின் உரிமைகளானாலும், கடவுள் நம்பிக்கைக் கொண்ட பெரும்பான்மை மக்களுக்காகவே அவர் குரல் ஒலித்தது. அதேபோல், இந்து மதத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் உரிமைகளுக்காக, போராடி, இந்தியாவுக்கே வழிகாட்டிய மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றினார். ஆனாலும் பெரியார், எந்த மக்களின் உரிமைக்காகப் பேசினாரோ, போராடினாரோ, அவர்களிடமிருந்து தனிமைப்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

தான் ஏற்றுக்கொண்ட லட்சியத்தை நோக்கி, பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு நிலைப்பாடுகளை பெரியார் எடுத்துள்ளார். அவர் முன் வைத்த கருத்துகளை வரிக்கு வரி அடிக்கோடிட்டு அப்படியே ‘பிரதியாக’ எடுத்துப் பேசி பெரியாரை விமர்சிப்பது தவறான அணுகுமுறையாகவே இருக்கும். ஒளிவு மறைவின்றி தொலைநோக்கோடு பல்வேறு சிந்தனைகளை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். காலம்காலமாக பழமையில் ஊறிப் போன மக்களை விழிப்படையச் செய்வதற்கு கடும் வைத்திய முறையே தேவைப்படுகிறது என்று கூறிய பெரியார், அதே நோக்கத்தில் பேசினார்; எழுதினார்.

மற்றவர்கள் பாராட்டுவதற்கோ, திருப்திப்படுத்துவதற்கோ, எந்த ஒரு கருத்தையும் முன் வைக்காத தலைவர் என்பதுதான், அவரது தனித்துவம்.

எவ்வளவோ உயர்ந்த மரபுகளை விட்டுச் சென்றிருக்கிறார் பெரியார். பொது வாழ்க்கைக்கு வந்தவர்கள், ஆடம்பரம், பகட்டுக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். தனக்குப் பரிசாக வழங்கப்பட்ட ‘பெட்ரோல் காரை’க் கூடப் பயன்படுத்த விரும்பாத பெரியார், ‘டீசல்’ என்ஜினாக மாற்றி, அது பழுதாகி, பிறகு ஒரு ‘அம்பாசிடரில்’ பயணிக்க நேர்ந்ததுதான், அவரது மரணத்தையே விரைவுபடுத்தி விட்டது. குறித்த நேரத்தில் கூட்டத்துக்குப் போக வேண்டும்; எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒப்புக் கொண்ட நிகழ்ச்சியை தள்ளி வைக்கக்கூடாது; பொது மக்கள் தரும் நிதியை நாணயமாக, சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்பதெல்லாம் அவர் தனக்குத் தானே விதித்துக் கொண்ட நெறிகள்!

பெரியார்-மணியம்மை திருமணத்தில் அதற்கு ஆலோசனை வழங்கியதே ராஜாஜிதான் என்ற குற்றச்சாட்டு அவர்மீது வீசப்பட்டது. அதற்கெல்லாம் எந்த மறுப்பையும் அவர் வெளியிடவில்லை. பெரியார் மறைவுக்குப் பிறகு அவரது கடித ஆவணங்களைப் பார்த்தபோது தான் ராஜாஜி இத் திருமண ஏற்பாடு வேண்டாம் என்று எழுதிய கடிதம் கிடைத்தது. தன்மீது எழுந்த குற்றச்சாட்டுக்குப் பதிலாக தனது நண்பர், தனிப்பட்ட முறையில் தனக்கு எழுதிய கடிதத்தைப் பயன்படுத்த இறுதி வரை அவர் தயாராக இல்லை.

பெரியாரின் திராவிடர் இயக்கம் வழி வந்ததாகக் கூறும் திராவிட அரசியல் கட்சிகள் பெரியார் அடிப்படை லட்சியத்திலிருந்து மாறுபட்டவையேயாகும். பெரியாரின் இடஒதுக்கீடு கொள்கையைத் தவிர அவரது பகுத்தறிவு, பெண்ணுரிமை, மத எதிர்ப்புக் கொள்கைகளிலிருந்து இந்தக் கட்சிகள் விலகியே நிற்கின்றன.

தமிழகத்தில் திராவிட கட்சிகளின் ஆட்சி தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு இன்னும் எவ்வளவோ செய்திருக்க வேண்டும் என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. ஆனாலும், இந்தியாவில் ஒப்பீட்டளவில், கல்வி, மருத்துவம், சமூக நலத் திட்டங்கள், நிர்வாகக் கட்டமைப்புப் போன்றவற்றில் தமிழகம் முன்னிலையிலேயே இருக்கிறது என்பதும் உண்மை.

இறுதி மூச்சு அடங்கும் வரை பெரியார் மக்களை சந்தித்துப் பேசிக் கொண்டே இருந்தார். அவர் வாழ்ந்த காலம் 94 ஆண்டுகள், 3 மாதங்கள், 7 நாட்கள். சுற்றுப் பயணம் செய்த நாள்கள் 8200. பயணம் செய்த தூரம் - 8,20,000 மைல்கள். பூமியின் சுற்றளவைப்போல் 33 மடங்கு. கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் 10,700. பெரியார் பேசிய நேரம் - 21,400 மணிகள். அத்தனைச் சொற்பொழிவையும் ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்திருந்தால், 2 ஆண்டுகள், 5 மாதங்கள், 11 நாள்கள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கும்.

பெரியாரின் தொண்டு சமுதாயத்தில் உருவாக்கிய தாக்கத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. தமிழகத்தில் மதப் பகையைக் கட்டுக்குள் கொண்டு வந்தது; பெண் கல்வியை மக்கள் ஏற்கச் செய்தது; நாடாளுமன்றம் போகாமலே முதல் அரசியல் சட்டத் திருத்தத்துக்கு வழி வகுத்து; இடஒதுக்கீட்டுக் கொள்கையை உறுதி செய்தது; பகுத்தறிவு இயக்கத்தை பரவலாக்கியது சுயமரியாதைத் திருமண முறையை, எழுத்து சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியதுஎன்று பட்டியல் போட முடியும். ஆனால், பெரியார் எட்ட விரும்பிய இலக்கை அடைவதற்கு வெகுதூரம் கடக்க வேண்டியுள்ளது.

‘உலகமயமாக்கல்’ சூழலில் அவரது சிந்தனைகள் மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. ஜாதி-தீண்டாமை ஒடுக்குமுறைகளும், பெண் களுக்கு மறுக்கப்படும் உரிமைகளும் பல்வேறு வடிவங்களில் சமூகத்தின் அவலங் களாக கண்முன் நிற்கின்றன. அவை பெரியாரின் போராட்டக் களங்களே ஆகும்! பெரியார் முடிந்துவிட்ட சகாப்தம் அல்ல; தொடரப்பட வேண்டிய பயணம்! ✦

**பெரியார் 2014 — ஜாதி ஒழிப்பு மலர்’**

**ஜனவரி 5இல் விற்பனைக்குக் கிடைக்கும்**

கருத்துப் பெட்டகமாக வெளிவந்துள்ளது. தோழர்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் பயன்பெற வேண்டிய மலர்.
192 பக்கங்கள் – நன்கொடை : ரூ.200/–

**தொடர்புக்கு :** தலைமைக் கழகம், 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை–600 004.
பேசி : 044–24980745 / 9444115133

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 3rd January 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜனவரி 09, 2014 | புரட்சி 12 | முழக்கம் 52 | விலை: ரூ.3.00

### பல நூறு மேடைகளில் முழங்கிய பகுத்தறிவுக் குரல் ஓய்ந்தது

# திருவாரூர் தங்கராசு விடை பெற்றார்



பெரியார் கொள்கைகளை மேடைகளிலும் கலை வடிவங்களிலும் அரை நூற்றாண்டுக்கு மேலாக மக்களிடம் கொண்டு செல்வதையே தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு செயல்பட்ட திருவாரூர் தங்கராசு 5.1.2014 பிற்பகல் 3.45 மணியளவில் சென்னை ராஜா அண்ணா மலைபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் முடிவெய்தினார். நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழாமல் மரணத்தை சந்திக்கும் வரை வழமையாகவே இருந்தார். குடும்பத் துடன் உரையாடிக் கொண்டிருந்தவர், கழிப்பறைக்குச் சென்றார். அங்கேயே சாய்ந்துவிட்டார். அவரது மரணமும் சுயமரியாதையுடனேயே நிகழ்ந்துவிட்டது.

6 ஆம் தேதி பிற்பகல் 3 மணியளவில் ராஜா அண்ணாமலைபுரத்திலிருந்த அவரது இல்லத்திலிருந்து பெரியார் இயக்கத் தோழர்கள் அணி வகுப்புடன் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. பெசன்ட் நகரிலுள்ள மின் மயத்தில் உடல் வீரவணக்க முழக்கங்களுடன் எரி யூட்டப்பட்டது. முன்னதாக, ராஜா அண்ணாமலை புரத்திலுள்ள அவரது இல்ல வாயிலில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் செகதீசன் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், திராவிட இயக்க ஆய்வாளர் திருநாவுக்கரசு, கவிஞர் செ.வை.ர. சிகாமணி, த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், வழக்கறிஞர் துரைசாமி, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சி நிறுவனர் வே.ஆனைமுத்து, திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திருச்சி சவுத்தரராஜன், சிற்பி ராசன் உள்ளிட்ட பலரும் இரங்கல் உரையாற்றினர். திருவாரூர் தங்கராசு அவர்களின் குடும்பத்தின் சார்பில் பேரன் தமிழரசன் இறுதியாகப் பேசினார்.

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, துணைத் தலைவர் கலி. பூங்குன்றன், 5 ஆம் தேதி திருவாரூர் தங்கராசு உடலுக்கு மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினர். திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களும் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்களும் இறுதி நிகழ்வுக்கு திரண்டு வந்திருந்தனர். கலைஞர் வை.கோ., மருத்துவர் இராமதாசு ஆகியோர் இரங்கல் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

திராவிடர் விடுதலைக் கழக சார்பில் விடுதலை இராசேந்திரன் இரங்கல் கூட்டத்தில் பேசுகையில், கடந்த தலைமுறைகளில் பெரியார் இயக்கத் தோழர்களின் நெஞ்சங்களில் நிலைத்துவிட்ட பெயர் திருவாரூர் தங்கராசு. பெரியார் இயக்கத்தின் எதிர்ப்பாளர்களால் விவாதிக்கப்பட்ட பெயரும் திருவாரூர் தங்கராசு. பெரியாருக்கு அடுத்த நிலையில் தமிழகம் முழுதும் கூட்டங்களில் பேசியவர். மேடையையும் பார்வையாளர்களையும் தனது முழுமையான ஆளுகையின் கீழ் கொண்டு வரக்கூடிய ஆற்றல் மிக்க பேச்சாளர், சொல் வீச்சு, ஒப்பனைகள் இல்லாமல் பெரியார் இயக்கத்துக்கே உரிய கருத்துகளின் உரையாடல்களையும், சொல்லாடல்களையும், விவாதங்களாகவும், வினாக்களாகவும், மறுப்புரைகளாகவும் பார்ப்பன வேத, இதிகாச, புராணங்களைக் கட்டுடைத்துக் காட்டிய தனித்துவம் கொண்டது அவரது மேடைப் பேச்சு.

பெரியார் தொண்டர்கள் புகழையும் விளம்பரத்தையும் நாடக் கூடாது என்று அவர் கூறுவார். மேடைவிட்டு இறங்கியவுடன் தனது உரையை பாராட்டுவதற்கு வருவோரிடம், அவர் முகம் கொடுத்துப் பேச மாட்டார். அவர் எழுதி, நடிகவேள் ராதா அவர்களால் நடிக்கப்பட்ட இரத்தக் கண்ணீர் நாடகம், பிறகு திரைப்படமானது. ஒரே நாடகம் அதிக எண்ணிக்கையில் மேடை ஏற்றப்பட்ட பெருமை இரத்தக் கண்ணீருக்கு மட்டுமே உரியது. பெற்ற மனம், தங்கத்துரை போன்ற திரைப்படங்களுக்கும் உரையாடல்களை எழுதினார். எல்லாவற்றையும்விட நடிகவேள் இராதா அவர்கள் நடித்த 'இராமாயணம்' நாடகம், திருவாரூர் தங்கராசு அவர்களால் தீட்டப்பட்டது ஆகும். நாடெங்கும் தடைக்குள்ளாக்கப்பட்ட அந்த நாடகத்தை கடும் எதிர்ப்புகளுக்கிடையே மேடைகளில் நடித்தார் எம்.ஆர். இராதா. மேடை நாடகத்தின் பிரதிகளை காவல் துறையிடம் காட்டி முன் அனுமதி பெற்றுத்தான் நடத்த வேண்டும் என்று பக்தவத்சலம் முதல்வராக இருந்த போது ஒரு சட்டத் திருத்தமே கொண்டுவரப்பட்டது. அதற்குக் காரணமே நடிகவேள் எம்.ஆர்.இராதா நடித்த திருவாரூர் தங்கராசு தீட்டிய இரத்தக் கண்ணீர், இராமாயண நாடகங்களே ஆகும். பார்ப்பனியத்தை மட்டுமல்ல, அதற்கு நிகராக சைவத்தையும் கடுமையாக தோலுரித்தவர் திருவாரூர் தங்கராசு.

மயிலாடுதுறையில் 1971 இல் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் அவர் எழுதிய இராமாயண நாடகத்தில் அவரே இராவணன் பாத்திரம் ஏற்று நடித்ததையும் பெரியார் நள்ளிரவு வரை விழித்திருந்து நாடகத்தைப் பார்த்ததையும் இங்கே தோழர்கள் பலரும் சுட்டிக் காட்டினார்கள். 1971 இல் சேலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு ஊர்வலத்தின்மீது அன்றைய ஆர்.எஸ்.எஸ்ஸான ஜன சங்கத்தினர் சிலர் கறுப்புக் கொடி காட்டி செருப்பு வீசியபோது கையில் நீண்ட தடியை ஏந்தி, எதிரிகளை சந்திக்க ஓடியவர்களில் ஒருவராக திருவாரூர் தங்கராசும் இருந்தார். இளைஞனாக நான் அன்று அவரை பார்த்த காட்சி, என் கண் முன் நிற்கிறது. 'பகுத்தறிவு' எனும் வார ஏட்டை பல ஆண்டுகாலம் நடத்தினார். அதில் கேள்விகளுக்கு நடிகவேள் எம்.ஆர்.இராதா விடையளிப்பார்.

பல்லாயிரம் மேடைகளில் பேசி கொள்கைகளைப் பரப்பிடும் திரைப்படம், நாடகம் போன்ற கலைப் படைப்புகளை உருவாக்கி, சுமார் 65 ஆண்டுகால நீண்ட பொது வாழ்க்கைக்கு ஒப்படைத்துக் கொண்ட ஒரு 'கருப்புச் சட்டைக்காரர்'. எளிமையாக, ஊடக வெளிச்சம் விளம்பரங்கள் இல்லாமல், அந்தப் புகழ் மின்மினுப்பில் மயங்கிடாமல் கொள்கை அடையாளத்தோடு வாழும் உன்னத வாழ்க்கை முறை பெரியார் தொண்டர்களுக்கே உரித்தான தனித்துவம். அந்தப் பெருமையோடு விடை பெற்றிருக்கிறார் திருவாரூர் தங்கராசு. பெரியார் இயக்கம் எந்தப் பெயரில் இருந்தாலும் அது குறித்த நிறைகுறைகள், விமர்சனங்கள் இருந்தாலும் பெரியார் இயக்கத்தில் வந்து சேர்ந்துவிட்ட தோழர்கள் ஒவ்வொருவரும் இந்தக் கொள்கைப் பிடிப்பிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியவே முடியாது. கடலில் வாழும் மீன் கரையில் தூக்கிப் போட்டால் உயிர் வாழ முடியாது. பெரியாரியலில் மூழ்கிய தோழர்களின் கொள்கை உணர்வுகளும் அப்படித்தான். 'இயக்கம்' என்ற எல்லைகளைக் கடந்தது பெரியாரியம். அது சமூக மாற்றத்துக்கான தத்துவம் மட்டுமல்ல, வாழ்க்கை முறையும்கூட. கொள்கை உறுதி, நேர்மை, தன்னலமற்ற

(4 ஆம் பக்கம்)

## 17 வயதில் தொடங்கிய பொது வாழ்க்கை

பிறந்த நாள்: 6.4.1927; பிறந்த இடம் : நாகப்பட்டினம்; தி.க.வில் சேர்ந்தபோது வயது 17. அப்போதிலிருந்து திருவாரூர் வாசம். ரத்தக் கண்ணீர் நாடகம் எழுதிய போது வயது 19. இளமையில் செய்யும் தவறுகள், முதுமையில் எப்படி வாட்டும் என்பதே கதைக் கரு.

இராமாயண ஆராய்ச்சி செய்து, வால்மீகி இராமாயணம் தொடங்கி, வடமொழியிலுள்ள பல்வேறு இராமாயண கதைகளையும் ஆய்வு செய்து, மலையாள இராமாயணம், கம்பராமாயணம் உள்பட ஆய்ந்து தெளிந்து எழுதிய நூல் இராமாயணம். அரசாங்கம் இந்நூலை தடைசெய்தபோது எம்.ஆர்.இராதா 'இராமாயணம்' என்ற பெயரில் பட்டி தொட்டி எங்கும் இந்நாடகத்தை அரங்கேற்ற, பெரும் புரட்சி செய்த நாடகம் அது. இரத்தக் கண்ணீர், பெற்ற மனம், தங்கதுரை என்ற மூன்று படங்களுக்கு கதை, வசனம், திரைக்கதை எழுதியவர்.

இவரது பெரிய புராண ஆராய்ச்சி நூல் பல்வேறு பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து இவருடன் உரையாடி இந்நூலைப் பற்றி ஆய்வு செய்துள்ளனர்.

சிக்கல் சிங்காரவேலன், நண்பரின் மனைவி, சாய் பாபா லீலைகள் உள்பட பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளார்.

இவருக்கு காந்தா என்ற அன்புக்குரிய துணைவியாரும், மலர்க்கொடி சுகுமாரன், மண்டோதரி பிரசாத் என்ற மகள்களும், புகழேந்தி-கயல்விழி என்ற மகன் மருமகளும் உள்ளனர்.

விவரம் தெரிந்த நாளிலிருந்து தந்தை பெரியார் அவர்களின் அணுக்கத் தொண்டரான இவர் தமது 88 ஆவது வயதில், அமைதியாக தன் இறுதி மூச்சை இல்லத்திலேயே முடித்துக்கொண்டவர். 5.1.2014 மாலை 3.45 வரை தம் கொள்கையிலிருந்து வழுவாத சிங்கமாக வாழ்ந்தார் என்பதுதான் இவர் பெருமை.

**(மலர்க்கொடி சுகுமாரன்- திருவாரூர் தங்கராசு அவர்களின் மூத்த மகள்)**

## "பெரியாருக்கே சேரும்!"

"எனக்கு அளிக்கப்பட்ட பெருமை, சிறப்பு அனைத்தும் பெரியார் ஒருவருக்குத் தான் சேரும். பெரியாரின் கருத்துகளைத் தான் நான் அவரது எளிய தொண்டன் என்ற முறையில், என்னால் இயன்ற அளவில் பரப்பி வந்திருக்கிறேன். எனது பணியைப் பாராட்டி விழா எடுக்கும்போது, அரசு அலுவலர்கள், பணி ஓய்வு பெறும் போது விழா எடுப்பதுபோல், ஒரு வேளை, உனது பணி போதும் என்று கூறி விழா எடுக்கிறார்களோ என்றுகூட தோன்று கிறது" என்று குறிப்பிட்டபோது, அருகில் இருந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'அப்படி நாங்கள் கருதவில்லை' என்று கூறவே, 'மகிழ்ச்சி எனது பணி தொடர வேண்டும் என்றே விரும்புகிறார்கள்' என்று திருவாரூர் தங்கராசு கூறினார். அதை ஆதரிக்கும் வகையில் கூட்டத்தினர் பலத்த கரவொலி எழுப்பினர்.

**– ஜூன் 14, 2008இல் சென்னையில் நடந்த விருது வழங்கும் விழாவில் திருவாரூர் தங்கராசு**

# ஈரோட்டில் மேம்பாலம் கோரி கைது செய்யப்பட்ட தோழர்கள் விடுதலை

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகில் மேம்பாலம் கட்டினால் அருகே உள்ள பெரிய மாரியம்மன் கோயிலை விட உயரமாக அமையும். கோயில் மேலே பாலம் சென்றால், அது 'சாமி குத்தமாகி'விடும் என்று சில அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். உடனே மாவட்ட நிர்வாகம் அருகிலுள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள அரசுக்கு சொந்தமான இடத்தைக் கோயிலுக்குத் தர முன் வந்தது. ஆனால், போராட்டக்காரர்கள் அதை ஏற்க மறுத்தனர்.

ஈரோட்டின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மேம்பாலம் அவசியம் என்று முற்போக்கு இயக்கங்களும் பெரியார் இயக்கங்களும் குரல் கொடுத்தன. மேம்பாலம் கூடாது என்று கூறியவர்கள் பெரிய மாரியம்மன் கோயில் நில மீட்பு இயக்கம் என்ற பெயரில் உண்ணாவிரதம் இருந்தனர். அதன் அருகில் மேம்பாலம் தேவை என்ற கோரிக்கையோடு தோழர்கள் "உண்ணும் போராட்ட"த்தில் ஈடுபட்டனர். அதன் தொடர்ச்சியாக 22 தோழர்கள் கடந்த ஜூன் 2010 இல் கைது செய்யப்பட்டு, கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். முற்போக்கு இயக்கங்களின் போராட்டத்திற்கு தனது ஆதரவை அளித்து வழக்காடி வரும் மூத்த வழக்கறிஞர் ப. பா. மோகன் தோழர்களுக்காக வாதாடினார். ஒரு வார சிறை தண்டனைக்குப் பிறகு தோழர்கள் பிணையில் வெளி வந்தனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக நடந்து வந்த வழக்கில் 2.1.2014 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. தோழர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் ஊர்வலமாகச் சென்று பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். பவானியில் உள்ள மூத்த வழக்கறிஞர் ப.பா. மோகன் அலுவலகத்திற்குச் சென்று அவருக்கு கைத்தறி



ஆடை அணிவித்து மரியாதை செய்தனர். தோழர்கள் விடுதலையாகப் பெரும் பங்காற்றிய இளைய வழக்கறிஞர் சந்திரசேகருக்கும் கைத்தறி ஆடை அணிவித்து சிறப்புச் செய்யப்பட்டது.

விடுதலை செய்யப்பட்ட தோழர்களின் பெயர்கள் :

திராவிடர் விடுதலைக் கழகப் பொருளாளர் ப.இரத்தின சாமி, ஈரோடு மண்டலச் செயலாளர் இராம. இளங் கோவன், வடக்கு மாவட்ட அமைப்பாளர் அர்ச்சுணன், நாமக்கல் மாவட்டப் பொருளாளர் மாதுராசு, அருளானந்தம், ராஜேந்திரன், ஈரோடு நகரச் செயலாளர் சிவானந்தம், ஈரோடு நகரத் தலைவர் திருமுருகன், ஈரோடு மாவட்ட அமைப்பாளர் சுப்ரமணி, பவானி நகரத் தலைவர் வேணுகோபால், பழனிச்சாமி, தந்தை பெரியார் திராவிடர் கழக ஈரோடு மாவட்டச் செயலாளர் குமரகுருபரன், திருமூர்த்தி, க. பிரபு, ப. பிரபு, அனிஷ்மாகன், விவேக், முருகானந்தம், துரை, சித்திக் பாஷா, பேரறிவாளன், லெமூரியன், ரவிக்குமார்.

# சேலத்தில் திருவாரூர் தங்கராசுக்கு வீரவணக்கம்

6/1/2014 திங்கள் கிழமை மாலை 5 மணியளவில் சேலம் பெரியார் சிலை அருகில், மறைந்த பெரியார் பெருந்தொண்டர் திருவாரூர் தங்கராசுவுக்கு வீரவணக்கம் தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில் பெரியார் பெருந்தொண்டர் அம்மாபேட்டை இராமசாமி, கழக மாவட்டச் செயலாளர் டேவிட், மாநகரத் தலைவர் மூனாங்கரடு சரவணன், மாநகர அமைப்பாளர் மோபாலு, தீபா, குமார், கழக மாநகரப் பொருப்பாளர் பூபதி, தந்தை பெரியார் கழக மாவட்ட செயலாளர் கு. தங்கராசு, ம.தி.மு.க. வழக்குரைஞர் ஆனந்தராஜ், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மக்கள் விடுதலை அமைப்பைச் சார்ந்த மணிமாறன் முதலானோர் கலந்து கொண்டனர்.

# கரியம்பட்டி ஜாதி வெறி தாக்குதலைக் கண்டித்து சங்கராபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்

விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 28.12.2013 அன்று சனிக்கிழமை மாலை 3 மணி யளவில் திண்டுக்கல் மாவட்ட கரியம்பட்டி கிராமத்தில் இந்து ஜாதி வெறியர்கள் அதே ஊரை சார்ந்த அருந்ததியர் மக்கள் மீதும் எட்டு வீடுகளுக்கு தீ வைத்து பல வீடுகள் அடித்து நொறுக்கியதை கண்டித்து சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நவப்பிள்ளை தலைமை தாங்கினார். விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட பொறுப்பாளர் தலித் சந்திரன், க. ராமர், கே. சக்கரடிசு, பெரியார் குமார், ந. அய்யனார் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் பெரியார் வெங்கட், சி. ஆசைதம்பி, விவசாய விடுதலை முன்னணி இராமலிங்கம், அன்பு உள்பட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும், தாக்குதல் நடத்திய ஜாதி இந்து வெறியர்களை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

# சென்னையில் பெரியார் சிலைக்கு மாலை

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் அண்ணா சாலையிலுள்ள பெரியார் சிலைக்கு 24.12.13 அன்று காலை 10 மணிக்கு மாலை அணிவிக்கப்பட்டது. களப்பணியில் உயிர்நீத்த தோழர்கள் கண்ணன், குமார் ஆகியோர் நினைவாக இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தில் வீர வணக்கம் செலுத்தப்பட்டது. தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகர், மாவட்டத் தலைவர் விஜான், பொருளாளர் வேழவேந்தன், விழுப்புரம் அய்யனார், தஞ்சை சிவசுப்பிரமணி மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடியில்**

பெரியாரின் நினைவு நாளான டிசம்பர் 24 ஆம் நாள் தூத்துக்குடி தென்பாகம் காவல் நிலையம் முன்புள்ள பெரியார் சிலைக்கு தூத்துக்குடி மாவட்ட கழகத்தின் சார்பில் மாலை அணிவிக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்ட கழகப் பொருளாளர் ரவி சங்கர், பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். நிகழ்வில் கழகப்



பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், மாநகரத் தலைவர் சா.த.பிரபாகரன், மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, மாநகரச் செயலாளர் பால். அறிவழகன், மாவட்டச் செயலாளர் க. மதன், மாவட்டத் துணைத் தலைவர் வே. பால்ராசு, செ. செல்லத்துரை, சூரங்குடி சரவணன் மற்றும் கழகத் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## தமிழக அரசை கண்டிக்கிறோம்

ஆசிரியர்கள் தேர்வில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட வர்களுக்காக சமூக நீதியை புதை குழிக்கு அனுப்பிய அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இப்போது புதிய தலைமைச் செயலகக் கட்டிடத்தில் அமைக்க விருக்கும் உயர்தர மருத்துவமனை யின் மருத்துவருக்கான தேர்விலும் இட ஒதுக்கீட்டைப் புறக்கணித் துள்ளது வன்மையான கண்டனத் துக்கு உரியது.

இதற்காக வெளியிடப்பட்ட அரசு அறிவிப்பில் மருத்துவர் தேர்வில் இடஒதுக்கீடு முறை மறுக்கப்பட் டுள்ளது. 'சூப்பர் ஸ்பெஷாலிட்டி' என்ற பெயரில் மருத்துவமனை தொடங்கப்படுவதால் இடஒதுக் கீட்டின் கீழ் தேர்வு செய்யப்படும் மருத்துவர்கள் இதற்கு தகுதியானவர் களாக மாட்டார்கள் என்று அரசு கருதுவது பார்ப்பனியக் கண் ணோட்டமேயாகும்.

இடஒதுக்கீடு தகுதி திறமைக்கு எதிரானது என்று பார்ப்பனர்கள் கூறும் கருத்தை ஜெயலலிதா ஆட்சியும் வழி மொழிகிறது.

'சமூக நீதிகாத்த வீராங்கனை' என்ற விருது பெற்ற முதல்வர் ஜெயலலிதா, இப்போது சமூக நீதியைப் புறக்கணிக்கும் வீராங்கனையாகி வருகிறாரா என்று கேட்க விரும்புகிறோம்.

இடஒதுக்கீட்டுக் கொள்கையை படிப்படியாகக் கைவிடுவதற்கான முயற்சியின் தொடக்கப் புள்ளி யாகவே நாம் இதைப் பார்க்கிறோம். தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சி இயக்கங்களால் ஒருமித்து ஏற்கப் பட்ட சமூக நீதிக் கொள்கையை கைவிடும் முயற்சி மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். அதேபோல்,

தில்லை நடராசன் கோயிலை மீண்டும் பார்ப்பன தீட்சதர்களிடம் ஒப்படைப்பதில் இந்த அரசு ஆர்வம் காட்டியதால் அது தொடர்பான உச்சநீதிமன்ற வழக்கில் சிறப்பு வழக்கறிஞரை நியமித்து வாதாடாமல் தவிர்த்தது.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கோயில் முறைகேடுகள் நடந்ததைத் தொடர்ந்து நிர்வாகத்தைக் கவனிக்க சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்ட போது, தீட்சதப் பார்ப்பனர்கள் ஜெய லலிதாவிடம் முறையிட்டனர்.

அப்போது, தாம் ஆட்சிக்கு வந்த பிறகு, இதை சரி செய்வதாக ஜெயலலிதா உறுதி கூறினார். அதைத்தான் இப்போது சிறப்பு வழக்கறிஞரை வைத்து வாதாடாமல், ஒதுங்கியதன் மூலம் செய்து காட்டியுள்ளார். தீட்சதர்களுக்காக வாதாடிய சுப்ரமணியசாமி, தமிழக அரசைப் பாராட்டி யிருக்கிறார்.

மீண்டும் தில்லை நடராசன் கோயில் நிர்வாகம், தீட்சதப் பார்ப்பனர்களிடம் உச்ச நீதிமன்றம் ஒப்படைத்துவிட்டது.

பார்ப்பனர்களின் பாராட்டுதல் களுக்காக ஆட்சியாளரின் பாதை திசை மாறுகிறது.

தமிழ்நாட்டின் பெரும் பான்மை பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த ஆட்சி சமூகநீதியை புதைப்பதற்கு வாக்களிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்பு கிறோம்.

நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கவிருப்பதை மறந்து விட வேண்டாம்.

# கிருஷ்ணகிரி கூட்டத்தில் கலவரம்

*2008, ஜூன் 14 அன்று சென்னையில் கழகத்தின் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு அவர்களின் 60 ஆண்டு இலட்சியத் தொண்டைப் பெருமையுடன் நினைவு கூரும் பாராட்டு விழா நடத்தப்பட்டது. அப்போதைய பெரியார் திராவிடர் கழகம் நடத்திய விழாவில், 'பெரியாரியல் பேரொளி' எனும் விருது வழங்கப்பட்டது. விருதுக்கான நினைவுப் பரிசை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் ஆர். நல்லக்கண்ணு, துணைத் தலைவராக இருந்த ஆனூர் செகதீசன் ஆகியோர் வழங்கினர். அப்போது நிகழ்வில் உரையாற்றிய தோழர் நல்லக்கண்ணு, முடிவெய்திய சுயமரியாதை வீரரும் திருவாரூர் தங்கராசு அவர்களின் உற்ற தோழருமான திருச்சி வீ.அ. பழனி ஆகியோர் நிகழ்த்திய உரையை மீண்டும் வெளியிடுகிறோம்.*

மூத்த பெரியார் தொண்டர் திருச்சி வீ.அ. பழனி பேசுகையில் திருவாரூர் தங்கராசு அவர்களின் பல்வேறு கொள்கைத் தொண்டுகளை நினைவு கூர்ந்தார். பெரியாரை எதிர்த்த பார்ப்பனர்களுக்கு சரியான பதிலடியை தந்தது. "ஈ.வெ.ரா. இறப்பதென்றோ" எனும் தலைப்பில் திருவாரூர் தங்கராசு அவர்கள், ஒரு வெளியீட்டைக் கொண்டு வந்தபோது திராவிடர் கழகத் தோழர்களே அத் தலைப்பைக் கண்டு முதலில் ஆத்திரமடைந்து, பிறகு தெளிவு பெற்றனர். 1947 ஆம் ஆண்டு முதல் நான் அவருடன் இணைந்து செயல்பட்டுள்ளேன். அவரது கொள்கை உறுதி எத்தகையது என்பது எனக்குத் தெரியும் அவர் 'நவீன லீலா' என்ற நாடகத்தை எழுதி நடித்தார். நானும் அந்த நாடகத்தில் நடித்தேன். கழகத் தோழர் லால்குடி முத்துச் செழியன் போன்றவர்கள் எல்லாம் அதில் நடித்தார்கள். மறைந்த டார்பிடோ ஏ.பி.ஜனார்த் தனம் அவர்கள் நடத்தி வந்த 'தோழன்' பத்திரிகைக்கு நிதி திரட்டுவதற்காக தஞ்சை நகரில் அந்த நாடகத்தை நடத்தினோம். சின்னாளப்பட்டியில், நாகர் கோயிலில், நன்னிலத்தில் கழக வளர்ச்சிக்கு நிதி திரட்ட திருவாரூர் தங்கராசு அவர்கள் இந்த நாடகத்தை நடத்தினார்.



கிருஷ்ணகிரியில் திருவாரூர் தங்கராசு அவர்கள் பேசும்போது கூட்டத்தில் பெரும் கலவரத்தை உருவாக்கி தாக்கினார்கள். சலசலப்புக்கு அஞ்சாமல், திருவாரூர் தங்கராசு துணிவுடன் எதிர்கொண்டார். அப்போது அரசு வழக்கு தொடர்ந்தது. வழக்கு நடத்துவதற்காக, பெரியார் பணம் தர முன் வந்தபோது, அதை திருவாரூர் தங்கராசு வாங்க மறுத்துவிட்டார். வழக்கறிஞர் இல்லாமல், தானே நீதிமன்றத்தில் வாதாடி, வழக்கில் வெற்றி பெற்றார். நடிகவேள் நடத்திய தூக்குமேடை நாடகத்தில், திருவாரூர் தங்கராசு அவர்களே வேடமேற்று நடித்தார். கி.ஆ.பெ.விசுவநாதன் தலைமையில் ரத்தக் கண்ணீர் நாடகம் அரங்கேற்றமானது. ஆரம்பத்தில், ரத்தக் கண்ணீர் நாடகத்திலேயே அதை எழுதிய திருவாரூர் தங்கராசு, நடிகவேள் ராதாவுடன் நடித்து வந்தார். 1970 ஆம் ஆண்டில் மயிலாடுதுறையில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் இராமாயணம் நாடகம் நடந்தது. அதில் திருவாரூர் தங்கராசு இராவணன் வேடமிட்டு நடித்தார். நான் ராமன் வேடமிட்டு நடித்தேன். எனது மகன் இந்திரஜித் வேடத்தில் நடித்தார். நாடகத்தை பெரியார் இரவு வெகுநேரம் விழித்திருந்து பார்த்தார். நாடகத்தைப் பாரத்துக் கொண்டிருந்தபோது பாதியிலேயே நேரமாகிவிட்டது புறப்படலாம் என்று அவருடனிருந்த "சிலர்" கூறியபோது பெரியார், போக மறுத்து இறுதி வரை நாடகத்தைப் பார்த்து, நாடகம் முடிந்தவுடன், நாடகத்தை பாராட்டி உரையாற்றினர்.

பெரியார் நாடகத்துக்கு தலைமை ஏற்று நிகழ்த்திய அந்த உரை முதலில் 'விடுதலை' நாளேட்டில் வெளியிடப் படவில்லை. ஏன் அதை வெளியிடவில்லை என்று பெரியாரே கேட்ட பிறகுதான், அது வெளியிடப்பட்டது. கீழப்பாவூர், உள்ளிக்கோட்டை, மன்னார்குடியில் நடந்த ராமாயணம் நாடகங்களில் திருவாரூர் தங்கராசு, ராவணன் வேடமிட்டு நடித்துள்ளார். எனவே, சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராக மட்டுமின்றி, நாடக நடிகராகவும் இருந்து பெரியார் கொள்கைகளைப் பரப்பியவர் திருவாரூர் தங்கராசு. இந்த விழாவில் நான் பங்கேற்றதற்காக பெருமைப் படுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

### பன்முகத் திறமையாளர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லக்கண்ணு, திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு ஆடை போர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வாழ்த்துகளை தெரிவித்து உரையாற்றினார். "தமிழகம் முழுதும் சுற்றி சுற்றி பகுத்தறிவுப் பிரச்சாரத்தை மக்கள் மன்றத்துக்கு எடுத்துச் சென்ற தன்னலமற்ற தியாகி திருவாரூர் தங்கராசு அவர்களின் பாராட்டு விழாவில் கலந்து கொள்வது கடமையாகும். சிலர் பேச்சாளர்களாக இருப்பார்கள்; சிலர் எழுத்தாளர்களாக இருப்பார்கள். ஆனால் நல்ல பேச்சாளர், நல்ல எழுத்தாளர் என்பதோடு, நல்ல நாடக ஆசிரியர் என்ற பன்முகச் சிறப்பு கொண்டவர் திருவாரூர் தங்கராசு. தன்னுடைய ஆற்றல்களையெல்லாம் அவர் வணிக நோக்கிற்காக பயன்படுத்தாமல் சமுதாயத்துக்காகப் பயன்படுத்தினார். இத்தகைய சுயநலமற்று வாழ்நாள் முழுதும் சமூகத்துக்கு உழைப்பவர்களுக்கு பாராட்டு விழாக்கள் நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். அத்தகைய விழாவை எடுத்துள்ள பெரியார் திராவிடர் கழகத்தை நான் பாராட்டுகிறேன். திருவாரூர் தங்கராசு அவர்களுடன் எங்களுக்கு நெருக்கமான உறவும், மரியாதையும் உண்டு. தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் பிரச்சினைக்காக தொடர்ந்து போராடி வருவது எங்கள் இயக்கம். இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக அனைத்துக் கட்சி கூட்டங்கள் நடக்கும் போது, திருவாரூர் தங்கராசு அவர்கள் தொழி லாளர்கள், விவசாயிகள் உரிமைகளை அழுத்தமாக எடுத்துக் கூறி, எங்களுக்கு வலிமை சேர்த்துத் தருவார். அந்த வகையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு அவரிடம் நெருக்கம் உண்டு.

அவர் எழுதி நடிகவேள் எம்.ஆர். ராதா நடித்த ரத்தக் கண்ணீர் நாடகம் - தமிழகம் முழுதும் 3000-த்துக்கும் அதிகமாக மேடை ஏற்றப்பட் டுள்ளது. இவ்வளவு அதிக எண்ணிக்கையில் மேடை ஏற்றப்பட்ட நாடகம் ரத்தக் கண்ணீர் மட்டும் தான்.

இந்த நாடகம் அரங்கேற்றப்பட்ட காலத்தில் அதைப் பார்க்க எங்களுக்கு வாய்ப்பில்லை. அப்போது கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டு, நாங்கள் தலைமறைவாக இருந்த காலம். பிறகு - அது திரைப்படமாக வந்தபோது தான், நான் அதைப் பார்த்தேன். அந்த நாடகத்தில் கூறப்பட்ட கருத்துகள், இப்போதும் சமூகத்துக்கு தேவையான கருத்துகளே யாகும். இப்போதும் அந்த நாடகத்தை மேடை ஏற்ற முடியும். இன்றைக்கு சமுதாயத்துக்கு தேவையான கருத்துகளை இணைத்துக் கொண்டு, அந்த நாடகத்தை நடத்த முடியும். காலத்தின் தேவைக்கேற்ப நடத்தக்கூடிய யுக்திகளுடன், அந்த நாடகம் எழுதப்பட்டிருப்பது அதன் தனிச் சிறப்பாகும் என்றார் ஆர். நல்லக்கண்ணு.

### "கீமாயணம்" அல்ல!

நடிகவேள் எம்.ஆர். இராதா நடித்த 'இரத்தக் கண்ணீர்' படத்தின் கதை வசனத்தை எழுதியவர் - மூத்த பெரியார் தொண்டர் திருவாரூர் தங்கராசு ஆவார். தமிழ்நாட்டில் ஒரே நாடகம் ஆயிரத்துக்கும் அதிகமாக மேடையேற்றப்பட்டது ரத்தக் கண்ணீர்தான். காலங்களைக் கடந்து நிற்கும் காவியமாக கருதப்படும் இரத்தக் கண்ணீர், இன்றைக்கும் - தமிழ்நாட்டில் ஏதேனும் ஒரு திரையரங்கில் ஓடிக் கொண்டிருக்கும் இந்த நாடகத்தை 'கீமாயணம்' என்று - அன்று தமிழக கல்வியமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம் சட்டசபையில் பேசியவுடன், பெரியார், சி. சுப்பிர மணியத்தைக் கண்டித்து அறிக்கை விடுத்தார். மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு அவர்கள் எழுதிய கருத்தாழ மிக்க உரையாடல்களை நடிகவேள் தனது தனித்துவமான நடிப்புத் திறமையால் மக்களிடம் கொண்டு போய் சேர்த்தார்.

**– கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையிலிருந்து**

---

## சிறப்பு வினாக்கள்... விடைகள்...!

+ தில்லை தீட்சதர் கோயில் நிர்வாகத்தில் அரசு தலையிட முடியாது. **– உச்சநீதிமன்றம்**

*சரி; அப்படியானால், அரசு நிறு வனமான நீதிமன்றம் தலையிடு வதும், வழக்கை விசாரித்து, தீர்ப்பு வழங்குவதும் நியாயமா?*

+ திருநாவுக்கரசர், திருஞானசம் பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற சைவக் குரவர்கள் பாடல் பெற்ற திருத்தலம் தில்லை. **– செய்தி**

*அது அந்தக் காலம். இப்போது தீட்சதர்கள் மட்டுமே பாடலாம்; ஓதுவார்கள் நுழைந்தால் அடி, உதை!*

+ பொது தீட்சதர்கள் சபைக்கு தலைவரே, தில்லை நடராசன் தான். **– தீட்சதர்கள் வாதம்**

*தலைவர் பதவி வேண்டாம்; பொரு ளாளர் பதவியைக் கொடுத்து விடுங்கள்; உண்டியல் பணம், நகைகள் திருட்டுப் போனால் தீட்சதர்களை நோக்கி எவனும் கேள்வி கேட்க முடியாது?*

+ அறநிலையத் துறை சட்டத்தின் கீழ் தில்லை நடராஜன் கோயில் வராது. **– உச்சநீதிமன்றம்**

*அதேபோல், இந்திய அரசியல் சட்டம், இந்திய கிரிமினல் சட்டத்தின் கீழ் தீட்சதர்களும் வர மாட்டார்கள் என்பதையும் இப்போதே உறுதி செய்து விடுங்கள்.*

+ ஒரு வேளை நிர்வாகத் தவறு களுக்காக அரசு தலையிட்டால், அந்தத் தவறைத் திருத்திய உடனேயே நிர்வாகத்தை மீண்டும் தீட்சதர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும். **– உச்சநீதிமன்றம்**

*ஆமாம்! உடனடியாக தீட்சதர் களிடம் ஒப்படைக்காமல், அரசே, நிர்வாகத்தைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டால், தீட்சதர்கள் தவறு செய்வதற்கான உரிமைகளைப் பறித்த 'பாவத்துக்கு' உள்ளாக நேரிடும்!*

+ தீட்சதர்கள் பட்டாசு வெடித்து வெற்றியைக் கொண்டாடி னார்கள். **– செய்தி**

*நன்றி மறந்த செயல். தீர்ப்புக்கு உதவிய தமிழக ஆட்சியாளர்களை வெற்றிக் கொண்டாட்டத்தில் சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கி விடலாமா?*

+ நாங்கள் நடராசருக்கு செய்த உண்மையான பூஜைக்கு அவர் எங்களுக்கு தந்த பரிசு இந்தத் தீர்ப்பு. **தீட்சதர்கள் பேட்டி**

*நடராசன், பரிசை நேரடியாகவே கொடுத்திருக்கலாம். உயர்நீதி மன்றத்தில் பரிசை தடுத்து வைத்து, உச்சநீதிமன்றம் வரை இழுத் தடித்து வழங்கியிருக்க வேண் டாமே!*

+ தில்லை நடராசன் கோயிலே தீட்சதர்களின் சொத்துதான். **–பார்ப்பன சங்கத் தலைவர் நாராயணன்**

*அப்படிப் போடுங்க! அடுத்து தில்லை நடராசன் வாழும் ஊரே, தீட்சதர்களின் சொத்து என்று பட்டா கேட்டு போராடுங்க!*

DATE OF PUBLICATION 08.01.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## ‘சித்திரை’யில் தொடங்குவது அறிவியலுக்கு எதிரானது

# பஞ்சாங்கத்தைப் புறந்தள்ளிய ‘மேனக்ஷா’ குழு

*தமிழக முதல்வர் ஜெயலலிதா மீண்டும் ‘சித்திரை’ தான் தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவித்திருப்பது, அவரது பார்ப்பனிய இந்துத்துவ ஈடுபாட்டைத்தான் வெளிப்படுத்துகிறது. திராவிடர் விடுதலைக் கழகம் இந்த மாற்றத்தை வன்மையாக எதிர்க்கிறது.*

*சித்திரை தான் தமிழ்ப் புத்தாண்டு என்பது அறிவியலுக்கு எதிரானது.*

தமிழர் கொண்டாடிய தை புத்தாண்டு, சித்திரைக்கு மாறியது எப்படி? குப்தர் வம்சத்தில் வந்த இரண்டாம் சந்திர குப்தன் தனது பெயரை விக்கிரமாதித் தன் என்று மாற்றிக் கொண்டு - தனது பெயரால் ‘விக்கிரம சகம்’ என்ற ஆண்டு முறையை உருவாக்கிக் கொண்டான். வானவியலை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த ஆரியபட்டருக்கு எதிராக வானவியலில் - சாதகம், சோதிடத்தைப் புகுத்தும் முயற்சிகள் அவனது காலத்தில் மேற் கொள்ளப்பட்டன. எனவே வானியல் சிந்தனை யாளர் ஆரியபட்டர் புறக்கணிக்கப்பட்டு, பழமையில் ஊறியவரான மிகிரர் உயர்த்திப் பிடிக்கப்பட்டார். அப்படி விக்கிரமாதித்தன் உருவாக்கிய ‘விக்கிரம சகம்’ எனும் ஆண்டு முறையில் சித்திரை முதல் நாளே ஆண்டின் முதல் நாளாக்கப்பட்டது. ‘விக்கிரம சகம்’ 60 ஆண்டுகளை வரை யறுத்தது. ‘பிரபவ’ ஆண்டில் தொடங்கி ‘அட்சய’ ஆண்டில் முடியும். இவைகளில் ஒரு பெயர்கூட தமிழ் இல்லை. 60 ஆண்டு களுக்கும் வடமொழிப் பெயர்கள்தான். ஆனால், தமிழர்கள் தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடிக் கொண்டிருக் கிறார்கள் என்பதுதான் வேடிக்கை - வேதனை.

இந்த 60 ஆண்டுகளையும் கடவு ளோடு தொடர்புபடுத்தி, ஆபாசம் வழியும் கதைகளையும் உருவாக்கி விட்டார்கள். நாரதரும், கிருஷ்ணனும் உறவு கொண்டு (இருவரும் ஆண்கள்) பெற்ற குழந்தைகளே ‘பிரபவ முதல் அட்சய முடிய 60 ஆண்டுகள்’ என்று தமிழ்க் கலை களஞ்சியமான ‘அபிதான சிந்தாமணி’ கூறுகிறது. இதற்கு புராண ஆதாரங்கள் வேறு உள்ளன. இந்த 60 ஆண்டுகளுக்கு மேல் 61வது ஆண்டைக் குறிக்கப் பெயர் இல்லை. மீண்டும் ‘பிரபவத்திலிருந்து தான் தொடங்க வேண்டும்’ நடைமுறைக் கும் அறிவுக்கும் ஒவ்வாத குழப்பங்களும், மூடநம்பிக்கைகளும் இதில் அடங்கிக் கிடக்கின்றன.

இந்த நிலையில் தான் - தமிழ் அறிஞர்கள் 1921-ம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந் தார்கள். மூன்று முக்கிய முடிவுகளை அவர்கள் அப்போது எடுத்தார்கள்.

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது.
2. அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது.
3. திருவள்ளுவர் காலம் கி.மு. 31 (வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 31-ஐக் கூட்டினால் திருவள்ளு வர் ஆண்டு) திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை இறுதி மாதம் மார்கழி. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள். கிழமைகள் வழக்கில் உள்ளவை என்று முடிவெ டுத்தார்கள். இப்படி முடிவெடுத்த வர்கள் தமிழகத்தின் மூத்த தமிழ் அறிஞர்கள் மறைமலை அடிகள், திரு.வி.க., சுப்பிரமணியப் பிள்ளை, சச்சிதானந்தப் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோம. சுந்தர பாரதியார், கி.ஆ.பெ. விசுவ நாதம் ஆகியோர் ஆவர்.

அதன் பிறகு 1939 ஆம் ஆண்டு திருச்சியில் ‘அகில இந்திய தமிழர் மாநாடு’ சோமசுந்தர பாரதியார் தலைமை யில் கூடியது. அதில் தந்தை பெரியார், கரந்தை தமிழ்ச்சங்கத் தலைவர் உமா மகேசுவரனார், பேராசிரியர் கா. சுப்பிர மணியம், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திரு.வி.க., மறைமலையடிகளார், பி.டி. இராஜன், ஆற்காடு இராமசாமி முதலியார், புரட்சி கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி உட்படப் பலரும் பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் பறைசாற்றியது.

1971-ல் அன்றைய தி.மு.க. ஆட்சி, திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்றது. இம்முறையையோ 1971 முதல் அரசு நாட் குறிப்பிலும், 1972 முதல் அரசிதழிலும், 1981 முதல் அரசின் அனைத்து அலுவல் களிலும் பின்பற்றி வருகிறது.

1969-ம் ஆண்டு தி.மு.க. ஆட்சி பொங்கல் திரு நாளுக்கு அடுத்த நாளை திருவள்ளுவர் நாள் என்று ஏற்று அரசு விடுமுறை அளித்து ஆணை பிறப் பித்தது. எனவே தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு ஆகும். இடையில் வந்து புகுந்த சித்திரை - தமிழர் மீது புகுத்தப்பட்ட பண்பாட்டுத் திணிப்பாகும்.

### இந்து காலண்டரின் ஓட்டைகள்

அந்தக் காலத்திலேயே இந்து மதத்தின் முன் னோர்கள் - வானவியலைக் கணித்து, நாட்காட்டியை உருவாக்கியுள்ளதாக பழம் பெருமையை, பார்ப் பனர்களும் இந்துப் பழமைவாதிகளும் பீற்றிக் கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்த இந்து காலண்டரின் ஓட்டைகள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

இந்து காலண்டரின் அபத்தம் குறித்து ‘பிரன்ட் லைன்’ இதழில் பீமன் நாத் என்ற வானவியல் விஞ்ஞானி எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்:

கையில் கட்டியுள்ள கடிகாரம், காலை 8 மணியை காட்டுவதற்கு பதிலாக - இரவு 12 மணியை தொடர்ந்து காட்டிக் கொண்டிருந்தால் அதை நாம் கையில் கட்டிக் கொண்டு, இதுதான் சரியான நேரம் என்று ஊரில் கூறிக் கொண்டிருந்தால் - ஊர் மக்கள் என்ன சொல்வார்கள்? பைத்தியம் பிடித்து விட்டதா என்று கேட்பார்கள். எனது கடிகாரத்தின் நேரம் இரவு 12 மணி தான் என்று காலை 8 மணிக்கு ஒருவன் கூறிக் கொண்டே இருப்பதைப் போல்தான் இந்து காலண்டரான பஞ்சாங்கத்தின் கதையும் இருக்கிறது.

இந்து சோதிடர்களின் விஞ்ஞான அடிப்படை யில்லாத தவறான கணிப்புகளால் ஊகத்தால் உருவாக்கப்பட்ட வானவியல் அடிப்படைகள். மிக மோசமான நேரத்தைக் காட்டிக் கொண்டிருக் கின்றன. பருவ காலங்களை வேகம் வேகமாக - கடந்த 60 ஆண்டுகளில் பாய்ச்சல் வேகத்தில் கடந்து போய் விட்டது. ‘இந்து’க்கள் கணித்த நேரம், இதன் விளைவாக - இப்போது 24 நாட்கள் இடைவெளியில் இந்து காலண்டரான பஞ்சாங்கம், தேங்கிப் போய் நிற்கிறது. அதாவது உலகம் முழுதும் ஆகஸ்டு 1 ஆம் தேதி என்றால், இப்போது, பஞ்சாங்கப்படி, ஆகஸ்டு 25 அய் காட்டிக் கொண்டு நிற்கிறது. இந்த பஞ்சாங்கம் - சரியான வழிகாட்டியல்ல என்பதால் 1955 ஆம் ஆண்டு நேரு பிரதமராக இருந்தபோது, இந்திய அரசு மேக்னக் ஷா என்ற புகழ்பெற்ற விஞ்ஞானியின் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. இந்து பஞ்சாங்க காலண்டரை விரிவாக ஆராய்ந்த குழு, தனது அறிக்கையில் “இந்து காலண்டர் என்பது - மனிதர்கள் தங்கள் சிந்தனையின் கற்பனையில் உருவாக்கப்பட்டதால், அதில் ஏராளமான மூட நம்பிக்கைகளையும், அரை உண்மைகளையும் இடைக்காலத்தில் இணைத்துவிட்டார்கள். இதில் பல குளறுபடிகளும், குழப்பங்களும் உள்ளன. இந்தக் குறைகளை துணிவோடு எடுத்துக்காட்டி மாற்றங் களைக் கொண்டுவர - எவருக்கும் துணிவில்லை. 23 நாட்கள் இடைவெளியில் இந்து பஞ்சாங்கம் போய்க் கொண்டிருக்கிறது. கடந்த 1400 ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்ட கால இடைவெளி நீண்டு 23 நாட்களாக வந்து நிற்கிறது” என்று கமிட்டி தனது பரிந்துரையில் சுட்டிக் காட்டியதுடன், “தவறுகளும் - மூடநம்பிக்கைகளும் நிறைந்த ‘களஞ்சியத்தை’ நாம் இந்து வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டு வாழப் பயிற்றுவிக்கப்பட்டு விட்ட தால், அதை மாற்ற முடியாத புனிதமாக்கி - பாது காத்து வருகிறோம்” என்றும் சுட்டிக்காட்டியது. விஞ்ஞானிகள் குழு - புதிய தேசிய காலண்டர் முறையையும் உருவாக்கியது. ஆனால் - பார்ப்பனர் களும், பழமைவாதிகளும், சோதிடர்களும், இந்த மாற்றத்தை ஏற்காமல், கிடப்பில் போட்டுவிட்டனர்.

உண்மையில் சூரியன் உச்சிக்கு வரும் நாளான - தமிழர் திருநாள் - பொங்கல் நாள் என்று கொண் டாடப்படும் நாள் டிசம்பர் 22 ஆம் தேதியே ஆகும். ஆனால், தவறான கணிப்புகளால் அது ஜனவரி 14 அல்லது 15 ஆம் தேதிக்கு தள்ளப்பட்டுவிட்டது.

1955 இல் 23 நாட்களாக இருந்து, இப்போது 24 நாட்கள் அதிகரித்துள்ள தவறான இடைவெளியில் தான் நாள், நட்சத்திரம், நல்ல நேரம், எதிர்காலம் எல்லாமுமே கணிக்கப்பட்டு வருகிறது. இந்த அடிப்படையிலே சோதிட “மேதைகள்” பத்திரிகைகளில் சோதிடக் கணிப்புகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் படித்தவர்கள் முதல் பாமரர் வரை படித்து நம்பிக் கொண்டிருக்கிறார்கள்! வெட்கக் கேட்டைப் பார்த்தீர்களா?

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மறுப்பு, புகழ் வெறுப்பு போன்ற உயரிய மரபுகளை விட்டுச் சென்றிருக் கிறது, நமது மூத்த பெரியார் தலை முறை! அத்தகைய அழுத்தமான அடை யாளங்களில் ஒருவரான திருவாரூர் தங்கராசு விடைபெற்று விட்டார்.

சுயமரியாதை இயக்கமும், குடி அரசும் வாழ்வியலுக்கான பல சொல் லாக்கங்களை உருவாக்கியது. ‘கால மானார்’, ‘விண்ணுலகம் சென்றார்’, ‘மறைந்தார்’ என்ற வழமையிலிருந்து மரணத்துக்கான சொற் களுக்கு மாற்றாக, பெரியார் முன் வைத்த சொல் ‘முடிவெய்தினார்’. ஆம், திருவாரூர் தங்கராசு முடிவெய்து விட்டார். அவர் காட்டிச் சென்ற கலை வழியிலான, மேடை வழியிலான கருத்துப் பரப்பு களின் வடிவங்களை மேலும் வளர்த் தெடுத்து, மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க உறுதி ஏற்போம் என்றார் விடுதலை இராசேந்திரன்.

### மக்கள் சந்திப்புத் திட்டம் : நெமிலி திலீபன் ரூ.6000 வழங்கினார்


மக்கள் சந்திப்புத் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்தில் மக்களைச் சந்தித்து நன்கொடை திரட்டி வரு கிறார் தோழர் திலீபன். ரூ.10 வீதம் திரட் டப்பட்ட நன்கொடை ரூ.6000-த்தை சந்திக்க வந்த கழகப் பொருளாளர், பரப்புரை செயலாளர், செயலவைத் தலைவரிடம் கையளித்தார்.

**தோழர்களுக்கு இனிய தமிழர் திருநாள் தமிழர் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 9th January 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜனவரி 16, 2014 | புரட்சி 13 | முழக்கம் 01 | விலை: ரூ.3.00


# காவல்துறை தடைகளைத் தகர்த்து நடந்த தமிழர் திருநாள் விழா





சென்னை திருவல்லிக்கேணி பகுதியில் 14 ஆம் ஆண்டு தமிழர் திருநாள்-தைப் புத்தாண்டு விழா, ஜனவரி 12 ஆம் தேதி காவல்துறை தடையைத் தகர்த்து எழுச்சியுடன் நடைபெற்றது. அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களையும் கொண்டுள்ள பொங்கல் விழாக் குழு, இந்த விழாவை நடத்தி வருகிறது.

கடந்த காலங்களில் பெரியார் திராவிடர் கழகமும், கடந்த இரண்டு ஆண்டுகளாக திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களும் முன்னின்று விழாவுக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

விழாவுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போது, கடந்த 10 ஆம் தேதி காலை காவல் துறை உதவி ஆணையர் (மயிலைப் பகுதி) விழா நடத்துவதற்கு அனுமதி மறுத்து எழுத்துப்பூர்வமாக தெரிவித்தார். அன்று நீதிமன்றத்தின் கடைசி வேலை நாள். அதற்குப் பிறகு பொங்கல் விடுமுறை. எனவே, விழாவை நடத்த விடாமல் தடுத்து விடலாம் என்று காவல்துறை திட்டமிட்டது. உடனே கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை அருண் அவசர அவசரமாக மனுக்களை தயாரித்து, அவசர வழக்காக எடுக்குமாறு நீதிபதி வி.தனபாலன் முன் கோரிக்கை வைத்தனர். நீதிபதி மனுவை விசாரணைக்கு ஏற்று, காவல்துறை அனுமதி மறுப்பை ரத்து செய்தார்.

நீதிமன்ற அனுமதி ஆணையுடன் 12 ஆம் தேதி தமிழர் திருநாள் விழா, கலை நிகழ்ச்சிகள், கொண்டாட்டங்கள் தொடங்கின. மாலை 6 மணியளவில் கும்மிடிப்பூண்டி அம்பேத்கர் கிராமிய பெண்கள் கலைக் குழு வழங்கும் பறை இசை, நடனம், பாடல்களுடன் நிகழ்ச்சி தொடங்கியது. பகுதி சிறுவர், சிறுமியர், பங்கேற்ற நடனங்களும், மாற்றுடைப் போட்டி நிகழ்ச்சி களும் நடந்தன.

விழாவின் சிறப்பு விருந்தினராக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி பங்கேற்று போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி, சிறப்புரை நிகழ்த்தினார். தமிழர்களின் புத்தாண்டு தைப் புத்தாண்டுதான் என்றும், பெரியார் பிறந்த தமிழகத்தில் சாதி, தீண்டாமை ஒடுக்கு முறைகள், பெண்கள் மீதான வன்முறைகள், மூடநம்பிக்கைகள் பெருகி வருவதைத் தடுக்க, தீவிரமாக செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் உரையாற்றினார்.

தொடர்ந்து, திருவல்லிக்கேணி பகுதி கழகச் செயலாளர் அருண் நடத்தி வரும் சுபராகம் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடந்தது. கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள், தோழியர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் நடனமாடினர். விழாவையொட்டி அயன்புரம் கழகத் தோழர் வேலு முயற்சி எடுத்து, தமிழர் உணவுத் திருவிழா விழாக்குழு சார்பில் ஏற்பாடு செய்திருந்தார். மாட்டுக்கறி பிரியாணி, மாட்டு வால் சூப், வாத்து இறைச்சி உள்ளிட்ட உணவு வகைகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டன.

அனுமதி பெற்றுத் தந்த வழக்கறிஞர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. கலைஞர்களுக்கு, விருந்தினர்களுக்கு ஆடைகள் போர்த்தப்பட்டு, கழகத்தின் காலண்டர், புரட்சிப் பெரியார் முழக்கம் வெளியிட்ட ஜாதி ஒழிப்பு மலர், சிறப்பு பரிசுகளாக வழங்கப்பட்டன. 10.15 மணியளவில் நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன.

**– நமது செய்தியாளர்**

## வினாக்கள்... விடைகள்...!

+ நான்கு மாநில தேர்தல் முடிவுகள் காங்கிரசை எழுப்புவதற்கான அலாரமா? காங்கிரசை அப்படி எழுப்பிவிடத்தான் முடியுமா? **– அமர்த்தியாசென்**

இதற்கு நீங்களே விடை கூறிவிட்டால், மற்றொரு நோபல் பரிசை தட்டிக்கொண்டு போய் விடலாம், சார்.

+ பிணையில் விடுதலையான லாலுபிரசாத், சாமி தரிசனத்துக்குப் போனபோது, ஒரு போலீஸ் அதிகாரி, லாலு கால்களைக் கழுவினார். ஜார்கண்ட் அரசு விசாரணைக்கு உத்தரவு. **– செய்தி**

அதெல்லாம் சுத்தமாகத்தான் கழுவி இருப்பார். நம்புங்கள். இதற்கெல்லாம் விசாரணையா?

+ நம்மால் என்ன செய்ய முடியுமோ அதைத்தான் தேர்தல் பிரச்சாரத்தின் போது கூற வேண்டும். **– மன்மோகன்சிங்**

“பொருளாதார நெருக்கடி தற்காலிகமானது தான்; விரைவில் சரியாகி விடும்” என்ற நம்மால் செய்ய முடிந்த கொள்கையை அப்படியே சரியாகச் சொல்லணும்! ஆமாம்.

+ இறை நம்பிக்கைதான் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கும்! **– ஜெயலலிதா பேச்சு**

அதனால என்னங்க பயன்? இறை நம்பிக்கை எதிர்க்கட்சிகளையே இல்லாமல் ஒழிக்குமா? அதைச் சொல்லுங்க.

+ மகாராஷ்டிரா காங்கிரஸ் ஆட்சி வீட்டுவசதி வாரிய ஊழல் விசாரணை அறிக்கையை நிராகரித்ததற்கு ராகுல் எதிர்ப்பு. **– செய்தி**

இப்படியே போனால், ஒரு நாள் காங்கிரஸ் காரர்கள் எல்லாம் சேர்ந்து, ராகுலை நிராகரிக்கப் போறாங்க, பாருங்க.

+ ஊழல் இல்லாத ஆட்சி அமைப்போம். **– கெஜ்ரிவால் சூளுரை**

இதெல்லாம் ஒரு சூளுரையா? ஊழல் வழக்குகளை எதிர்கொண்டு சந்திக்கக்கூடிய ஆட்சியை அமைப்போம் என்று வீரத்தோடு சூளுரைங்க சார்...!

+ இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத் தினால் 65,000 நெசவாளர்களுக்கு இந்த அரசில் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.**–முதல்வர் ஜெயலலிதா**

இந்த அரசில் ‘இலவசமாக’ கிடைக்கக்கூடிய ஒரே வேலைவாய்ப்பு, இந்த இலவசத் திட்டங்கள் வழியாக மட்டும்தான் என்பதையும் சேர்த்துக் கொள்ளுங்கள் மேடம்!

+ இந்தியா திரும்பினார், தூதரக அதிகாரி தேவயானி. **– செய்தி**

அப்பாடா! இனி கவலை வேண்டாம். சாப்பாடு மட்டும் போட்டாலே போதும்! இந்தியாவில் வீட்டு வேலைக்கு ஊதியம் இல்லாமல் ஆட்கள் கிடைப்பார்கள்.

+ டெல்லியில் ஆட்சியமைத்துள்ள ‘ஆம் ஆத்மி’ கட்சி குறித்து கலைஞர், ஜெயலலிதா, மவுனம். **– செய்தி**

வேறு என்ன செய்வதாம்? ‘ஊழலுக்கு எதிரான மக்கள் தீர்ப்பு’ என்று கருத்து தெரிவிக்கவா முடியும்?



## கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழக்கு: ஜன. 20இல் விசாரணைக்கு வருகிறது

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் கழகத் தோழர்கள் இரண்டரை மாதங்களுக்கு மேலாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சேலம், சென்னை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ரத்துச் செய்யக் கோரும் வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 6 வாரங்கள் வழக்கை உயர்நீதிமன்றம் தள்ளிப் போட்டது. இந்த நிலையில் ஜனவரி 20 ஆம் தேதி கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீதான தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நீதிபதிகள் ராஜேசுவரன், பி.என். பிரகாசு ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன் விசாரணைக்கு வருகிறது. கழகத் தலைவர் சார்பில் உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஆர். வைகை, நீதிமன்றத்தில் ஆஜராகிறார். கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை, அருண் ஆகியோர் வழக்குக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

# சன் தொலைக்காட்சி வீரபாண்டியனுக்கு பா.ஜ.க. மிரட்டல்

மதவாத அரசியல் குறித்துக் கருத்துக் கூறிய ஊடகவியலாளர் சன் தொலைக்காட்சி வீர பாண்டியன் மீது பா.ஜ.க. தொடுத்துள்ள தாக்குதல் தொடர்பாக அரசியல் தலைவர்களும் ஊடகவிய லாளர்களும் சமூகச் செயல்பாட்டாளர்களும் கண்டித்து ஜன. 7 அன்று வெளியிட்ட கூட்டறிக்கை:

மதவாதத்திற்கு எதிராகப் பேசியதால் சன் தொலைக்காட்சியின் அரசியல் விமர்சகர் வீரபாண்டியனை பணியிலிருந்து நீக்க வேண்டு மென மதவாத சக்திகள் வலியுறுத்தியுள்ளதை மதச் சார்பின்மை மீது நம்பிக்கைக் கொண்டுள்ள இந்த கூட்டறிக்கையில் கையொப்பம் ஈட்டுள்ள நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சென்னையில் சில வாரங்களுக்கு முன்பு மனித உரிமை அமைப்பு ஒன்றின் சார்பில், முசாபர் நகரில் சிறுபான்மையினர் மீதான வன்முறை குறித்த உண்மை அறியும் குழு அறிக்கை ஒன்று வெளி யிட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட வீரபாண்டியன் பா.ஜ.க. மீது சில விமர்சனங்களை முன் வைத்துப் பேசியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பா.ஜ.க. வின் மாநில அலுவலகச் செயலாளர் கி.சர்வோத்தமன், சன் தொலைக்காட்சிக் குழும மேலாண் இயக்குநருக்கு டிசம்பர் 23 அன்று கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் வீரபாண்டியன் பேச்சு இரு பிரிவினருக்கு இடையே மோதலை ஏற்படுத்துவதாகவும், வீரபாண்டியன் தொலைக்காட்சியில் நடத்தும் நிகழ்ச்சிகள் நடுநிலையோடு இருக்காது எனவும் கூறி, அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார்.

'அவர் முன்னின்று நடத்தும் விவாத நிகழ்ச்சி களில் பா.ஜ.க. சார்பில் யாரும் கலந்து கொள்ள மாட்டோம்' என்றும் தெரிவித்துள்ளார். சென்னை பெருநகர காவல் ஆணையரிடமும் அவர் மீது நடவடிக்கை எடுக்க புகார் மனு அளித்துள்ளதாக தெரிய வருகிறது.

இதன் பின்னர், கடந்த வாரம் சனிக்கிழமை முதல் அவர் நடத்தும் நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட வில்லை. இந்த அணுகுமுறை ஜனநாயகத்தின் மீது அக்கறைக் கொண்டோராகிய எங்களுக்கு மிகுந்த வேதனையும், கவலையும் அளிக்கிறது.

ஊடகங்களில் ஒரு ஊடகவியலாளர் நடு நிலையாக இருந்து கருத்துரைக்க வேண்டுமென் பதுதான் அறம். அதனாலேயே அவருக்குச் சொந்த கருத்தோ அல்லது அரசியல் பார்வையோ இருக்கக் கூடாது என்பது தவறானது. இதர குடிமக்களுக் குள்ள அனைத்து அரசியல் உரிமைகளும் ஊடக வியலாளர்களுக்கும் உண்டு.

பல்வேறு வகையில் அனைத்துத் தரப்பு மக்களின் கருத்துக்களுக்கும் இடமளித்து வரும் சன் தொலைக்காட்சி நிர்வாகம், வீரபாண்டியன் நடத்தும் அரசியல் விவாத நிகழ்ச்சி தொடர ஆவன செய்து, கருத்துரிமை, பேச்சுரிமைக்கு தொடர்ந்து மதிப்பளித்திட வேண்டும் என கேட்டுக் கொள் கிறோம்.

இந்திய அரசியல் சட்டம் வகுத்துள்ள மதச் சார்பின்மைக்கு அச்சுறுத்தல் விடுத்து செயல்பட்டு வரும் மதவாதக் கட்சிகள் இதுபோன்ற ஊடக வியலாளர்களுக்கு நேரடி அச்சுறுத்தல்கள் விடுப்பதை அனைத்து அச்சு மற்றும் காட்சி ஊடகத்தினர் கண்டிக்க முன்வர வேண்டுமென வலியுறுத்துகிறோம். இவ்வாறு அந்த கூட்டறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கையில் கழக சார்பில் பொதுச் செய லாளர் விடுதலை இராசேந்திரன் கையெழுத்திட் டுள்ளார். மேலும், ஞான தேசிகன், எம்.பி., (காங்.), மத்திய அமைச்சர் இ.எம். சுதர்சன் நாச்சியப்பன், தா.பாண்டியன் (சி.பி.ஐ.), தொல். திருமாவளவன் (விசிக), கி.வீரமணி (தி.க.), எம்.எச். ஜவாஹி ருல்லா, எம்.எல்.ஏ. (மமக), கே.எம். காதர் முகைதீன், எம்.பி. (முஸ்லிம் லீக்), சீமான் (நாம் தமிழர்), சுப. வீரபாண்டியன், தமுஎக மாநிலத் தலைவர் ச. தமிழ்ச் செல்வன், கவிக்கோ அப்துல் ரஹ்மான், பேராசிரியர் அ. மார்க்ஸ், கவிஞர் மனுஷ்ய புத்திரன், ஜே.எஸ். ரிபாயி (தமுமுக), பேராயர்கள் எஸ்றா. சற்குணம், தேவ சகாயம், பத்திரிகை யாளர்கள் அ. குமரேசன், ஞாநி, டி.எஸ்.எஸ்.மணி உள்ளிட்ட பலரும் கையெழுத்திட்டுள்ளனர்.

# பார்ப்பனர்களும் வஞ்சிக்கப்படும் விவசாயமும்

*விவசாயத் துறை இந்தியாவில் நலிவடைவதற்குக் காரணம் அதில் ஈடுபட்டுள்ளவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், பார்ப்பனர்கள் விவசாயம் செய்வதை 'மனு சாஸ்திரம்' தடை போட்டுள்ளது. சாஸ்திரத்தை மீறி விவசாயம் செய்த இரண்டு "பிராமணர்களை" குடந்தையில் மூத்த சங்கராச்சாரி, ஜாதி நீக்கம் செய்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. விவசாயம் என்ற அறிவியலின் வளர்ச்சியை சமூகப் பார்வையில் முன் வைக்கும் இக்கட்டுரையை எழுதியவர் சமூக ஆய்வாளர் காஞ்சா அய்லையா.*

நமக்கு உணவு தரும் உழவுத் தொழிலுக்கு நன்றி சொல்லும் திருநாள்தான் பொங்கல் பண்டிகை. மனிதனின் ஆதித் தொழில்களில் ஒன்றான விவசாயம் எப்படித் தோன்றியது?

ஆதிகாலத்தில் மனிதர்கள் விலங்குகளை வேட்டையாடியும், காய், கனி போன்றவற்றைச் சேகரித்தும் சாப்பிட்டு வாழ்ந்து வந்தனர். பிறகு காட்டு விலங்குகள் சிலவற்றை வீட்டு விலங்குகளாகப் பழக்கி மேய்க்க ஆரம்பித்தார்கள். ஒரே இடத்தில் குழுக்களாக வாழத் தொடங்கிய மனிதர்கள், தங்களைச் சுற்றியிருந்த நிலத்திலிருந்தே உணவைப் பெற முயற்சித்தனர். அந்த முயற்சிதான், மனித இனம் பெரிய அளவில் முன்னேற உதவியது.

ஆனால், அப்போது நிலம் வயலாக மாற்றப்பட் டிருக்கவில்லை. உழுவதற்கும் விதைப்பதற்கும் நிலத்தைப் பண்படுத்த வேண்டியிருந்தது. நிலங்களில் மரங்களும் பாறைகளுமே இருந்தன. பள்ளத் தாக்குகள், குன்றுகள் என்று ஏற்றத்தாழ்வான நில அமைப்பும் இருந்தது. மனிதர்கள் மரங்களை வெட்ட வேண்டியிருந்தது. ஏற்றத் தாழ்வான பகுதிகளைச் சமப்படுத்த வேண்டியிருந்தது.

மனிதர்கள் தங்கள் கடுமையான உழைப்பால் நிலத்தைப் பண்படுத்தினர். இப்படி மண்ணைப் பண்படுத்தி, உணவு உற்பத்தி செய்யும் முறையே விவசாயம். ஆதிகால விவசாயிகள் இயற்கையாக விளைந்த ஆயிரக்கணக்கான தாவர வகைகளில் இருந்து விவசாயத்துக்கு ஏற்றவற்றைக் கண்டறிந்து, அவற்றைக் கவனமாகப் பயிர் செய்து பெருக்கினர்.

இந்த வேலைகளைச் செய்வதற்கு மனித உழைப்பு மட்டுமல்லாமல், புத்திசாலித்தனமும் அறிவைப் பயன் படுத்தும் திறமையும் வேண்டியிருந்தது. விவசாயத்தை எளிமைப்படுத்தத் தேவையான கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் அவர்கள் உருவாக்க வேண்டியிருந்தது.

நிலத்திலிருந்து உணவுப் பயிர்களை விளை விக்கும் அறிவியல்தான் விவசாயம் என்று அறியப்படு கிறது. உலகில் அனைத்து நாகரிகங்களிலும் விவசாயத் துக்குப் பின்னரே எழுத்து கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது. விவசாயத்தின் வளர்ச்சி இயற்கையாக நடந்த ஒன்றல்ல; மற்ற அறிவியல் தொழில் நுட்பங்களைப் போல விவசாயமும் மனிதர்களின் கண்டுபிடிப்புதான்.

கி.மு. 2000க்கும் கி.மு.3000க்கும் இடையே விவ சாயத்தையும் வீட்டு விலங்கு வளர்ப்பையும் சார்ந்து வாழ்ந்த மனிதர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. முதலில் விவசாயத்துக்குத் தேவையான கருவிகளைக் கல்லால் உருவாக்கினர். மரத்தாலும் தோலாலும் செய்யப்பட்ட கருவிகள் பின்னர் உருவாகின. அதற்குப் பிறகு இரும்பாலும் மற்ற உலோகங் களாலும் விவசாயக் கருவிகள் செய்யப்பட்டன.

விவசாயத்துக்கு இந்தியாவில் நீண்ட வரலாறு உண்டு.

மேய்ப்பவர்கள் விலங்குகளைப் பழக்கி வளர்க்கத் தொடங்கியபோது இறைச்சியும் பாலும் பால் சார்ந்த உணவுப் பொருள்களும், தோல் மற்றும் கம்பளி போன்ற மற்றப் பயன்பாட்டு பொருள்களும் கிடைத்தன. அதே நேரத்தில் காளைகளும் எருமைகளும் உழவுக்கும் வண்டி இழுக்கவும் பழக்கப்படுத்தப்பட்டன.

ஐரோப்பாவில் குதிரைகளைக் கொண்டு உழுதனர். இந்தியர்களோ இந்தக் கடினமான வேலைக்கு மாடுகளைப் பழக்கினர். வண்டி இழுக்க ஐரோப்பாவில் குதிரைகளும் இந்தியாவில் மாடுகளும் உதவின. குதிரைகள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டபோது அவை போர்க்களங்களில் பயன்படுத்தப்பட்டன.

இறக்குமதியான குதிரைகள் மீது சவாரி செய்த படைவீரர்களும் தேரோட்டிகளும் இன்றும் புகழப்படுகின்றனர். ஆனால், மாடுகளை நுகத்தில் பூட்டி உழுத உழவர்களுக்கு இன்றைக்கு மதிப்பில்லை. நிலத்தை உழுது உணவு தந்த சாதியினரும் சமூகக் குழுக்களும் 'சூத்திரர்' என்று அழைக்கப்பட்டுச் சமுதாயத்தின் அடித்தட்டுக்குத் தள்ளப்பட்டனர். பண்டிதர்கள் (பார்ப்பனர்கள்) எனப்பட்டவர்கள் விவசாய வேலையை அறிவிலிகள் செய்யும் தொழிலாகக் கருதினர். பயிர்களை உணவாக மாற்றியவர்களுக்கு, அவர்களது மனசில் மரியாதை இல்லை. நிலத்திலிருந்து உணவு தயாரிக்கிற உழைப்பையும் அது சார்ந்த திறன்களையும் மதிக்காத மதமும் தத்துவமும் ஒரு சமூகத்தின் அறிவியல் மனப்பான்மையை அழித்துவிடும்.

### யாகத்தில் கொல்லப்பட்ட மாடுகள்

தொடக்கத்தில் விவசாய வேலைகள் அனைத்தையுமே மனிதர்களே முழுமையாகச் செய்து வந்தனர். கவுதம புத்தர் வாழ்ந்த காலத்தில் விலங்குகள் விவசாய வேலைகளுக்குப் பழக்கப்பட்டன. இது விவசாயத்தில் புரட்சியை ஏற்படுத்தியது. அதே நேரம், கி.மு. ஆறாம் மற்றும் ஏழாம் நூற்றாண்டுகளில் வேத யாகச் சாலைகளில் ஆயிரக்கணக்கான மாடுகள் கொல்லப்பட்டன. பவுத்தர்களின் ஆதரவுடன் இந்த யாகப் பலிகளை விவசாயிகள் எதிர்த்தனர். மாடுகளை விவசாய வேலைகளுக்குப் பயன்படுத்துவதையும் பால் பொருள்களின் உற்பத்திக்காக வளர்ப்பதையும் பவுத்த மதம் ஊக்குவித்தது.

இன்று விவசாயம் ஓர் அறிவியலாக அறியப்பட்டுப் பல்கலைக் கழகங்களில் பாடமாக இருக்கிறது. ஆனால் விவசாயிக்கு காலங்காலமாக நிலத்தை எப்போது, எப்படிப் பண்படுத்துவது என்று தெரிந்திருந்தது. கட்டாந்தரையில் மாடுகளை ஏரில் பூட்டி உழுவதற்குக் கடுமையான பயிற்சி தேவை. பல தலைமுறைகளாக விவசாயிகள் தங்கள் சந்ததிகளுக்கு இதுபோன்ற திறமைகளைப் பயிற்றுவித்து வந்தனர்.

**அதே நேரம் அந்த விவசாயிகளின் குழந்தை களுக்குப் பள்ளிகளில் படிக்கப் பல நூற்றாண்டு களாக அனுமதி மறுக்கப்பட்டது. அவர்களுக்கு எண்ணும் எழுத்தும் தடை செய்யப்பட்டன. விவசாய வேலைகளில் பெற்றோர் தந்த பயிற்சி மட்டுமே அவர்களுக்குக் கல்வியாக இருந்தது. விவசாயி களுக்கு எழுதவோ, படிக்கவோ முடியாததால் அவர்களது பாரம்பரிய அறிவு, அறிவாக மதிக்கப்படவில்லை.**

வயலை உழுவதற்கு அறிவும் திட்டமிடும் திறனும் தேவை. கடலை விதைக்கும்போது ஆழ உழுத சால் (furrow) அவசியம் என்று விவசாயிகளுக்குத் தெரியும். பச்சைப் பயிற்றுக்கு அவ்வளவு ஆழமான சால் தேவையில்லை. அதேபோல, பருவத்துக்கு உகந்த பயிர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிர் செய்ய வேண்டும்.

விவசாயிக்குத் தன் நிலத்தில் உள்ள மண்ணின் தன்மை தெரியும். தான் பழக்கும் விலங்குகளின் இயல்பு தெரியும். உடலும் மனமும் சார்ந்த திறன்களை விவசாயம் ஒருசேரப் பயன்படுத்துகிறது. சொல்லப்போனால், எல்லா உடல் உழைப்புக்கும் மூளை உழைப்பும் அவசியம் தேவை. ஆனால், மூளை உழைப்புக்கு உடல் உழைப்புத் தேவையில்லை.

விவசாயிகள் பல்வேறு பயிர்களைக் கவனமாகப் பயிரிட்டு, அறுவடை செய்திருக்கவில்லை என்றால் நாம் எல்லோரும் பட்டினி கிடந்திருப்போம். விவசாயிகளும் அவர்களுடன் வயல் வேலை செய்பவர்களும் சமூகத்தில் உணவுப் பற்றாக்குறை வராமல் பார்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் இன்றைக்குப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அறியப்படுகிறார்கள். இவர்களும், தலித்துகளும், பழங்குடியினரும்தான் நிலத்தைப் பண்படுத்தி நமக்கு உணவளிப்பவர்கள். அவர்களுடைய உழைப்பில் விளைந்த உணவைச் சாப்பிட்டுவிட்டு, அவர்களை மதிக்காமல் இருப்பது எப்படி நியாயம் ஆகும்? ✦

'புரட்சிப் பெரியார் முழக்கம்'

ஆண்டுக்கட்டணம்

ரூ.200

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 9941613535

# நடராசன் ‘நர்த்தன தாண்டவத்தின்’ கதை

***தில்லை நடராசன் கோயில் நிர்வாக உரிமையை தீட்சதப் பார்ப்பனர்களிடம் மீண்டும் ஒப்படைத்து விட்டது உயர்நீதிமன்றம். தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சியும் இதற்கு மறைமுகமாக உதவியிருக்கிறது. தமிழ்நாட்டில் அரசு கட்டுப்பாட்டின்கீழ் அனைத்துக் கோயில் களும் கொண்டு வரப்பட்டாலும், தில்லை நடராசன் கோயில் நிர்வாகம், வழிபாடு இரண்டையும் பார்ப்பனர்களிடமிருந்து பறி போய்விடக் கூடாது என்று துடிக்கிறார்கள். 2014 ஆம் ஆண்டிலேயே இந்த நிலை என்றால், கடந்த நூற்றாண்டுகளில் பார்ப்பனர்களின் ‘கோரத் தாண்டவம்’ எப்படி இருந்திருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை. இந்த நிலையில் தில்லை நடராசன் கோயில், பெண்ணடிமை – வர்ணாஸ்ரமத் திமிரின் கோட்டையாகவும், சைவ வைணவ மோதல் களமாகவும் இருந்து வந்துள்ளதற்கான வரலாற்றுத் தகவல்களை இங்கு வெளியிடுகிறோம்.***

***சைவத்தின் பெருமை பேசும் தில்லை நடராசன், தன்னுடன் போட்டிக்கு வந்த பெண் தெய்வத்தை எப்படி சூழ்ச்சியில் வெற்றி பெற்றான் என்பதைக் கூறுகிறார் அக்னி ஹோத்திரம் இராமானுஜ தாத்தாச்சாரி.***

சிதம்பரம் நடராஜ பெருமானை எல்லாரும் அறிந்திருப்பீர்கள். உங்களில் சில பேர் அவரது ஆலயத்துக்கு சென்று தரிசனமும் செய்திருப்பீர்கள். இந்த ஸ்தலத்துக்கு விசேஷமே சிவபெருமானான நடராஜ பெருமானின் நர்த்தனம்தான்.

ஒருநாள்... மிகப் பழைய காலத்தின் அழகான நாள்... சிதம்பரத்தில் ஒரு போட்டி நடனப் போட்டி... கலந்து கொள்பவர்கள் யார், யார்? பரமசிவன், தில்லை காளி.

யாரிந்த தில்லை காளி? சிவபெருமானுடன் நடனப் போட்டி போட வந்தவள். மிகச் சிறந்த நர்த்தன நாட்டியக்காரி. இயற்கையிலேயே ஆண்களைவிட பெண்கள்தான் நடன அசைவுகளிலும், இசைத் துடிப்புகளிலும் அழகாக இழைவார்கள்.

புருஷர்கள் ஆடும்போது ஏற்படும் ரசனையைவிட ஸ்தீரிகள் நர்த்தனமாடும்போது அதிகபட்ச அழகு மிளிரும். இது இயற்கையின் ஏற்பாடு. அதிலும்... தில்லை காளி நடனப் பயிற்சி பெற்றவள். பின் சொல்ல வேண்டுமா? அவளது சலங்கை ஒலி கேட்டு காற்றே ஆடிப் போகும். அவளது நடனத்துக்குப் போட்டியாக ஆட வருபவர்களே ஆடிப் போய்விடுவார்கள்.

இப்படிப்பட்ட தில்லை காளிதான் சிவபெருமானின் நடனப்போட்டிக்கு வந்தாள். ஏற்பாடுகள் நடந்தன. இரண்டு மேடைகள் எதிரெதிரே. அதில் தான் சிவபெருமானும் காளியும் நடனமாட வேண்டும். கூட்டம் கூடியிருக்கிறது. ஆட்டம் தொடங்க இருக்கிறது. போட்டியில் யார் ஜெயிப்பார்கள் என கூடியிருந்தவர்களிடையே ஒரு கிசுகிசு பேச்சு நுழைந்து நெளிந்து கொண்டிருந்தது. தொடங்கியாகிவிட்டது. தனது ஆர்ப்பாட்டமான அசைவுகளோடு ஆட ஆரம்பித்தாள் காளி. அவளது பாதங்கள் சலங்கைகளை ஒலியாடு சுருதி சேர்த்தன. காளியின் கை விரல்கள் காற்றில் நடனச் சித்திரங்கள் தீட்டின.

மறுபக்கம் சிவன் தனது தாண்டவத்தை ஆரம்பித் தார். சிவனின் தாண்டவத்தை ஐந்து வகையாக அவரது அடியார்கள் போற்றுவர். அற்புத தாண்டவம், அநவாத தாண்டவம், ஆனந்த தாண்டவம், பிரளய தாண்டவம், சங்கார தாண்டவம். இங்கே சிவன் ஆடியது, ஆனந்த தாண்டவம்.

காளியின் நடன அசைவுகளும் நர்த்தன நுட்பங் களும் பார்ப்பவர்களை வசீகரித்தன. சிவனின் தாண்ட வம் காளியின் தாண்டவம் முன்பு தோற்றுவிடும் நிலைமை... பார்த்தார் சிவபெருமான். ஒரு பெண்ணிடம் நான் தோற்பதா? அவள் கால்கள் செய்யும் நடனம் அவருக் குள் கலவரம் செய்தது. ‘ஆஹா... சிவபெருமானை தில்லை காளி ஜெயித்து விட்டாளே’ என குரல்கள் கிளம்பப் போகிற நேரம்... இனியும் இவளை ஆடவிடக் கூடாது என முடிவு கட்டிய சிவன்... தன் இடதுகாலை சற்றே தூக்கினார். நடனத்தின் ஒரு வகைதான் என நினைத்து ஈடு கொடுத்து ஆடிக் கொண்டிருந்தாள் காளி. சிவனின் இடதுகால் இன்னும் எழும்பியது. ஆமாம்... இன்னும் உயரமானது. கொஞ்சம் கொஞ்சமாக இடது காலை விலக்கி எடுத்துச் சென்ற சிவபெருமானின் திட்டம் பலித்தது. வலதுகாலை ஊன்றி இடதுகாலை உயர விலக்கிக் கொண்டே போக... சபையே ஒரு கணம் அதிர்ந்தது. ஏன்? வேண்டுமென்றே சிவனின் சிஷ்டம் (அதாவது ஆணுறுப்பு) வெளியே தெரியும்படியானது. இதற்காகத்தான் இடதுகாலை விலக்கி தூக்கி யிருக்கிறார் சிவன்.

வெற்றியின் விளிம்பில் நடனமாடிக் கொண் டிருந்த தில்லை காளி, இக்காட்சியை பார்க்க வேண்டிய கட்டாயம் நேர்ந்து விட்டது. பொட்டென அவளது நர்த்தனம் நின்றது. தலைகுனிந்தாள். தனக்கு முன் ஒரு ஆண் இப்படிப்பட்ட கோலத்தில் நிற்பதை எந்தவொரு பெண் பார்த்துக் கொண்டே தன் வேலையை தொடருவாள்? காளியின் நர்த்தனம் நின்றதா? நிறுத்தப்பட்டது. ஆனால், சிவபெருமான்... தொடர்ந்து தாண்டவ மாடிக் கொண்டே இருந்தார். ஆக... சிவன் ஜெயித்தார் என்றாகிவிட்டது.

வலதுகாலை ஊன்றி இடது காலை தூக்கி சிஷ்டத்தை வெளிக்கொண்டுவந்து... ஜெயித்து விட்டார். இதுதான் சிதம்பர ரகசியமோ என்னவோ? ‘இப்படி’ ஜெயித்த பிறகுதான் சிவனுக்கு நடராஜன் என்னும் நாமமே உண்டானது. இதற்கு நடனத்தில் ராஜா என்று அர்த்தம். இதை நானாக சொல்ல வில்லை. “நடராஜ மகாத்மியம்” என்னும் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக் கிறது. அதாவது சிதம்பரம் சொல்லும் செய்தி என்ன?

ஆணிடம் பெண் போட்டி போடக் கூடாது. அப்படியே திமிராக போட்டி போட்டாலும் ஜெயித்துவிடக் கூடாது. அவளை தோற்கடிக்க ஆண் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

தோற்றவள் காளி. காளி... ஆகமத்துக்கு அப்பாற்பட்ட காவல் தெய்வம். இங்கேதான் முக்கியமான இன்னொன்றை கவனிக்க வேண்டும். “Siva is a high Class God. But Kali is a low class rural God” என்று காளி ஒதுக்கப்பட்டாள். எங்கே?

இன்னமும் நீங்கள் சிதம்பரம் நடராஜர் கோயிலுக்குப் போய் தில்லை காளி எங்கே என்று கேளுங்கள். கோயிலுக்கு வெளியே வடக்கு நோக்கி கை காட்டுவார்கள். கிட்டத்தட்ட 1 கிலோ மீட்டர் தூரத்தில் சிதம்பரத்தின் எல்லையில் ஒரு சின்ன கோயிலுக்குள் கோபமாக உட்கார்ந்திருப்பாள் காளி.

‘அதாவது ஆணுக்கு பெண் போட்டி போட முடியாது. போட்டியிட்டால் இப்படித்தான் விரட்டப்படுவாள்’ என்று நமக்கு நடராஜர் மூலம் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறாள் காளி. இன்னும் சிதம்பரம் கோயிலில் அர்ச்சனையில் ஈடுபடும் தீட்சிதர்கள் அக்காளியை திரும்பிக்கூட பார்ப்பதில்லை. இவ்வாறு தெய்வங்களுக்கிடை யிலேயே ஆண்-பெண் பேதம் போற்றி வளர்க்கப்பட் டிருக்கிறது. அதோடு வர்க்க பேதமும் பின்பற்றப்பட் டிருக்கின்றன - என்று எழுதியுள்ளார் அக்னி ஹோத்திரம் ராமானுஜ தாத்தாச்சாரி.

(நன்றி: ‘இந்து மதம் எங்கே போகிறது?’ நக்கீரன் வெளியீடு)

## ‘தேவாரம்’ பாடல்களை அழிக்க தில்லை தீட்சதர்கள் நடத்திய சதி

சிதம்பரம் கோயில் சைவ சமயக் குரவர் நால்வராலும் பாடல் பெற்றத் தலம். பாடல்கள் என்றால் தேவாரப் பாடல்கள்தான். அவை வெறும் பாடல்கள் அல்ல. சைவர்களுக்குத் தமிழ் மறை! அந்தப் பாடல்களை நியாயமாக தில்லை வாழ் அந்தணர்கள் பாதுகாத்திருக்க வேண்டும் அல்லவா? ஆனால் பாதுகாக்கவில்லை! இறைவனைவிட கரையான் மேல் பற்று அதிகம்போல் தெரிகிறது. தேவாரப் பாடல்களை அறையில் பத்திரமாகப் பூட்டி வைத்து கரையானுக்கு ‘அமுது’ செய்தனர்.

அந்தக் காலங்களில் எழுத்துக்கள் எல்லாம் வடிக்கப்படுவது ஓலைச் சுவடிகளில் தானே? ஓலைச் சுவடிகள் மலிவுப் பதிப்பும் அல்ல சந்தையில் கிடைக்கக் கூடியதும் அல்ல. கோயில்களிலும், மடங் களிலும் மற்றும் முக்கிய சைவ நெறிப் பற்றாளர் களிடம் மட்டுமே கிடைக்கக் கூடியவையாகும். அவை முழுமையாகக் கிடைப்பது முற்றிலும் அரிது. தேவாரப் பாடல்களின் ஓலைச் சுவடிகள் எல்லாம் சிதம்பரம் கோயிலில் இருந்தன. ஆனால் தில்லைவாழ் அந்தணர்கள் அவற்றை யாருக்கும் கொடுப்பதில்லை. தேவாரப் பாடல்களைக் கேட்டு ரசித்த ராஜராஜ சோழன் அப்பாடல்களைத் திருமுறைகளாகத் தொகுக்கும் பொறுப்பை நம்பியாண்டார் நம்பியிடம் ஒப்படைத்தான். எல்லாப் பாடல்களும் சிதம்பரம் கோயிலில் முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்த சோழ மன்னன் தில்லைவாழ் அந்தணர்களை தேவாரப் பாடல்களை விடுவிக்கு மாறு கேட்டான். தில்லை வாழ் அந்தணர்கள் மறுத்துவிட்டனர். சம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் வந்து கேட்டால்தான் கொடுக்க முடியும் என்று ஆளும் மன்னனுக்கே போக்குக் காட்டினர். ராஜராஜன் தில்லைவாழ் அந்தணர்கள் செய்யும் தந்திரங்களைப் புரிந்து கொண்டான். சம்பந்தர், அப்பர், சுந்தரர் போல் சிலைகள் செய்து, தில்லைவாழ் அந்தணர்கள் முன் நிறுத்தி தேவாரப் பாடல்களைக் கேட்டான். “இவை எல்லாம் சிலை தானே” என்றார்கள் கோயில் அந்தணர்கள். ராஜராஜசோழன் பதில் சொன்னான். “நடராசரும் சிலை தானே?” பிறகு என்ன, அவன் அரசனாக நடந்து கொண்டான். தேவாரப் பாடல்கள் வைக்கப்பட்டிருக்கும் அறையை உடைத்தான். பாடல்களை வெளிக் கொணர்ந்தான்.

தில்லைவாழ் அந்தணர்களுக்கு என்ன ஆணவம் இருந்திருக்க வேண்டும்? ஆளும் அரசனின் கிரீடத்திற்கு மேலே தில்லை வாழ் அந்தணர்களின் ஆன்மிகக் கொடி பறந்திருக்க வேண்டும் அல்லவா?

அன்று ராஜராஜசோழன் கரையான் உண்டது போக எஞ்சிய தேவாரப் பாடல்களை மீட்கவில்லை என்றால், கோயில்களில் பாடுவதற்குக்கூட தமிழ் இல்லாது போயிருக்கும்!

## இங்கே தமிழ்த் திருமுறைகள் தீட்டு மொழி!

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள குமுடி மூலை என்ற சிற்றூரைச் சேர்ந்தவர் ஆறுமுகசாமி என்ற ஓதுவார். இவருக்கு வயது 73. தில்லை நடராசர் கோயிலில் சிற்றம்பல மேடையில் திருவாசகம் உள்ளிட்ட சிவபுராணப் பாடல்களை அவர் பாட விரும்பினார். “பாடக் கூடாது” என்று தீட்சிதர்கள் தடுத்தனர். தடுத்தது மட்டும் அல்ல தாக்கியும் இருக்கிறார்கள். ‘அன்பே சிவம்’ என்ன ஆயிற்று? வயதுக்கு உரிய மரியாதை எங்கே போயிற்று?

ஆறுமுகசாமிக்கு ஆதரவாகப் போராட்டம் வெடித்தது! தீட்சிதர்கள் ரொம்ப சாமர்த்தியசாலிகள். அவர்கள் தேவாரம், திருவாசகம் பாடுவதை எதிர்க்கவில்லையாம். பாடுகின்ற இடம் சிற்றம்பல மேடையாக இருக்கக் கூடாதாம். அதாவது சிற்றம்பல மேடை என்பது மூலவர் (நடராசர்) சந்நிதியாம் அங்கு வடமொழி வேதங்கள் ஒலிக்கலாமாம். அந்தணர்கள் மட்டுமே அதைச் செய்வார்களாம். மூலவர் சந்நிதியில் திருவாசகம் ஒலித்தால் தீட்டுபட்டு விடுமாம்!

என்ன, நாம் இருப்பது இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டா?

தமிழ் செம்மொழி ஆகிவிட்டதாம்! மத்தியிலும் தமிழ் வேண்டுமாம்! உயர்நீதிமன்றத்திலும் தமிழ் உட்கார வேண்டுமாம்! திருக்குறள் தேசிய நூலாக வேண்டுமாம். ஆனால் தில்லைக் கோயிலில் திருமுறை தீட்டு மொழியாம். தமிழுக்கு இட ஒதுக்கீடு உண்டாம். இடம் சிற்றம்பல மேடைக்குக் கீழே.

சிதம்பரம் கோயில் தீட்சிதர்கள் அத்தோடு நிற்கவில்லை. நீதிமன்றத்திற்கும் சென்றார்கள். சிதம்பரம் நகரில் உள்ள மாவட்ட உரிமையியல் (Munsif court) நீதிமன்றத்தில் ஆறுமுக சாமிக்கு எதிராக கோயில் பொது தீட்சிதர்கள் சார்பில் அதன் செயலாளர் நவமணி தீட்சிதர் வழக்கு தாக்கல் செய்தார். ஆறுமுக சாமியோ அவருடைய ஆட்களோ நடராஜர் ஆலயத்தின் உள்ளே கருவறைக்கு முன்பு உள்ள அர்த்த மண்டபத்தில், அதாவது சிற்றம்பல மேடையில் தேவாரம் மற்றும் திருவாசகம் போன்ற சிவபுராணங்களை பாடக் கூடாது என்று உறுத்துக் கட்டளையை (Injunction) அவ்வழக்கில் கேட்டார். தீட்சிதர்களின் “வைதீக சாஸ்திரங்களிலோ மதச் சடங்குகளிலோ, உரிமைகளிலோ இந்தப் பிரதிவாதி (ஆறுமுகசாமி) தலையிட உரிமை இல்லை. இந்து அறநிலையத் துறையின் மயிலாடுதுறை உதவி ஆணையர் 12.12.2004-லேயே ஆறுமுகசாமியோ அல்லது வேறு வழிபாடு செய்ய விரும்பும் யார் வேண்டுமானாலும் தேவாரம், திருவாசகம் போன்றவற்றைக் கருவறைக்கு முன்புள்ள கீழ்ப்பகுதியில் நின்று பாடலாம். அதாவது

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 15.01.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# இடஒதுக்கீடுகளை புறந்தள்ளும் தமிழக அரசைக் கண்டித்து ஜன.25இல் ஆர்ப்பாட்டங்களை நடத்துவீர்!

**தமிழக அரசே!**

- **ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர் நியமனங்களை ரத்து செய்!**
- **‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ என்ற பெயரைப் பயன்படுத்தி, இட ஒதுக்கீட்டு உரிமைகளைப் பறிக்காதே!**

ஓமந்தூர் ராமசாமி தோட்டத்தில் புதிய தலைமைச் செயலக கட்டிடத்தை மருத்துவமனையாக்கும் தமிழக அரசு மருத்துவர் தேர்வில் இடஒதுக்கீடுகள் பின்பற்றப்பட மாட்டாது என்று அறிவித்திருக்கிறது.

ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்கள் தேர்வு செய்யப்படுவதால் இடஒதுக்கீட்டை அமுலாக்க முடியாது என்கிறார் முதல்வர் ஜெயலலிதா! ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்துவிட்டு பிறகு நிரந்தர மாக்கப்படுவதே இதில் அடங்கியுள்ள சதி.

எனவே ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர் தேர்வு முறையை ரத்து செய்ய வேண்டும். அதற்கு பதிலாக தமிழ்நாடு முழுதும் -

- மருத்துவக் கல்லூரிகளில் பணியாற்றும் தகுதி வாய்ந்த மருத்துவர்களை இந்த மருத்துவமனையில் பணியமர்த்தம் செய்ய முடியும்.
- ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ மருத்துவ மனைகளுக்கு இடஒதுக்கீடு கூடாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்கிறார், முதல்வர் ஜெயலலிதா. ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ என்ற பெயரை மாற்றி வேறு பெயரை ஏன் சூட்டக் கூடாது?
- தமிழ்நாடு மருத்துவ வாரியத்தை தனது ஆட்சியில் தொடங்கி இட ஒதுக்கீடு வழியாக பதவிகள் நிரப்பப்பட்டன என்கிறார் முதல்வர் ஜெயலலிதா. ஆனால், இந்த மருத்துவமனையை தமிழ்நாடு அரசே, தனது நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து ‘கார்ப்பரேட்’ மருத்துவமனையாக்க திட்டமிடுகிறது. அதற்கேற்பவே ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு, இட ஒதுக்கீடுகளும் ஒழிக்கப்படுகின்றன.

தனியார் நடத்தும் ‘அப்பல்லோ’ போன்ற அதி நவீன மருத்துவமனை களுக்கே மருத்துவ ஆலோசகர்களாக தமிழக அரசு மருத்துவர்கள் இருக்கும் போது அவர்கள் ‘தகுதியற்றவர்கள்’ என்பதுபோல அரசு கருதுவது பார்ப்பனியப் பார்வையேயாகும்!

ஆசிரியர் தேர்வுக்கு குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களைக் குறைக்க மறுக்கிறது தமிழக அரசு (பிற மாநிலங்களில் குறைக்கப்பட்டிருக் கின்றன) தேர்வு நிலையிலேயே தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரை வெளியே தள்ளி விட்டு தேர்வு பெற்றவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவதாகக் கூறுவது மக்களை ஏமாற்றும் நாடகம்!

இடஒதுக்கீட்டை அமுல்படுத்தாமல் இருப்பதற்கான குறுக்கு வழிகளைத் தேடத் தொடங்கி விட்டது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சி.

சமூக நீதியின் தலைநகர் என்ற பெருமைக்குரிய தமிழ் நாட்டில் இடஒதுக் கீடுகள் குழிதோண்டி புதைக்கப்படும் ஆபத்துகள் தொடங்கி விட்டன.

சமூகநீதியை மீட்டெடுக்கப் போராடுவோம்!

ஜனவரி 25 ஆம் தேதி ஒத்த கருத்துள்ள அமைப்புகளை இணைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**– பொதுச் செயலாளர்**
**தலைமைக் கழகம்**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

---

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிற்றம்பலத்தில் பாட முடியாது. (திருச்சிற்றம்பல மேடை என்றாலும், கனகசபை என்றாலும், அர்த்தமண்டபம் என்றாலும் எல்லாமும் ஒன்றுதான்) பூஜை நேரத்தில் தீட்சிதர்கள் தேவாரம் பாடுவார்கள். மற்றவர்கள் பாடக் கூடாது. தொன்று தொட்டுவரும் வழக்கத்திலும், வழக்காற்றிலும் குறுக்கிட யாருக்கும் உரிமை இல்லை. ஆறுமுகசாமிக்கு மயிலாடுதுறை உதவி ஆணையர் உத்தரவின் பேரில் எந்த மேல்முறையீடு செய்ததற்கும் எந்த ஆதாரமும் இல்லை. **அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலியோர்கூட கருவறைக்குக் கீழ் இருந்த பகுதியில் இருந்துதான் பாடினார்கள்.** இதை மீறினால் கோயிலின் புனிதம் கெட்டுவிடும். தில்லைவாழ் தீட்சிதர்கள் தமிழர்கள், சிதம்பரம் கோயில் தில்லைவாழ் தீட்சிதர்களின் நிர்வாகத்திற்கே உட்பட்டது” - இவை எல்லாம் தீட்சிதர்களின் வாதங்கள்.

ஆறுமுகசாமி ஓதுவார் வாதம் என்ன தெரியுமா?

தீட்சிதர்கள் தங்களுக்கு ஆதரவாக இந்து சமய அறநிலையத் துறை மயிலாடு துறை உதவி ஆணையர் போட்ட உத்தரவைக் காட்டுகிறார்கள். இது தங்கள் கோயில் என்றும் இந்து சமய அறநிலையத் துறை இதில் தலையிட முடியாது என்றும் சொல்பவர்கள், இந்து அறநிலையத் துறை அதிகாரியின் உத்தரவைக் காட்டுவது வேடிக்கையாக உள்ளது. அந்த அதிகாரியின் உத்தரவு இறுதியானது அல்ல. அரசியல் சட்டத்திற்கு விரோதமாக எந்தப் பழக்க வழக்கமும் இருக்க முடியாது. சிவபுராணம் பாடும் உரிமை சாதி அடிப்படையில் மறுக்கப்படுகிறது. இந்த வழக்கில் இந்து சமய அறநிலையத் துறையையும் ஒரு தரப்பாகச் சேர்த்திருக்க வேண்டும். இது ஒரு சட்டத் தவறு. தீட்சிதர்கள் தேவாரம் பாடலாம்; ஆனால் அதே இடத்திலிருந்து ஓதுவார் பாடக் கூடாது என்பது சாதி அடிப்படையிலான வாதமாகும். அனைத்து சாதியினரும் அர்ச்சகராக அரசு சட்டம் கொண்டுவந்த பின்னர் தீட்சிதர்கள் தனி உரிமை கொண்டாட முடியாது என்பது ஆறுமுக சாமியின் வாதம்.

## சைவ–வைணவ மோதல் களம்

சிதம்பரம் கோயில் எப்படி ஏற்பட்டது, நடராசர் எப்படி எழுந்தருளினார் என்பதே பிரச்சினைக்குரியதாகத்தான் இருக்கிறது. இவை குறித்து சரியான வரலாறு இல்லை. புராணக் கதைகளே முன் வைக்கப்படுகின்றன. புராணக் கதைகள் பக்தர்களுக்கு இனிக்கலாம். வரலாற்று மாணவனுக்கு உண்மைதான் இனிக்கும். புராணக் கூற்றின்படி சிம்மவர்மன் என்ற கவுட நாட்டு மன்னன் தன்னுடைய உடல் குறை காரணமாக முடிசூட்டிக் கொள்ள மறுத்துவிட்டு, காடாக இருந்த சிதம்பரத்திற்கு வந்து, அங்கிருந்த சிவகங்கை குளத்தில் நீராடிவிட்டு எழுந்தபோது, நடராஜர் அவன்முன் தோன்றினாராம். சிம்மவர்மன் என்ற தன்னுடைய பெயரை இரண்யவர்மன் என்று மாற்றிக்கொண்டு, தன் முன் தோன்றிய நடராசனுக்கு அவன் அங்கு கோயில் கட்டினானாம். சிதம்பரம் கோயில் இப்படித்தான் தோன்றியதாம். கங்கைக் கரையிலிருந்து தீட்சிதர்களை அழைத்து வந்தானாம்.

சிதம்பரம் கோயில் வளாகத்தில் இப்போதும் ஒரு பெருமாள் கோயில் உண்டு. இது குறித்து சைவர்கள் பேசுவதில்லை. வைணர்கள் ஒரு தகவல் சொல்கிறார்கள். ஒரு காலத்தில் பெருமாள் கோயில் அங்கு இருந்தது என்றும், அது ‘சித்ரக் கூடம்’ என்று அழைக்கப்பட்டது என்றும், அப்போது நடராஜர் கோயில் சிறிய கோயிலாக இருந்தது என்றும், அதனால்தான் நடராஜர் வீற்றிருக்கும் சந்நிதி “சிற்றம்பலம்” என்று அழைக்கப்படுகிறது என்றும் கூறுகிறார்கள். பல ஆழ்வார்கள் சிதம்பரம் பெருமாளைப் பாடியிருக்கிறார்கள். இப்படிப் புராணக் கதைகளிலும் சைவ வைணவர்களுக்கிடையே சிதம்பரம் கோயில் ஒரு பிரச்சினைக்குரிய கோயிலாகவே இருந்திருக்கிறது. சிதம்பரம் கோயில் வளாகத்தில் பெருமாள் கோயில் வந்தது எப்படி? பல்லவர் ஆட்சியில் கிட்டத்தட்ட எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்ம பல்லவ மன்னன் நடராஜர் ஆலயத்தில் பெருமாளை பிரதிஷ்டை செய்திருக்கிறான் என்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள். அதாவது தேவாரம் பாடிய மூவர் காலத்திற்குப் பிறகு என்கிறார்கள்.


இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில், இராஜேந்திர சோழன் கட்டிய கங்கை கொண்ட சோழபுரம், இன்னும் இதுபோன்ற கோயில்கள் போல், கட்டப்படும்போதே பிரம்மாண்டமாய்க் கட்டப்பட்ட கோயில் அல்ல சிதம்பரம் நடராஜர் கோயில். அக்கோயில் பல்வேறு அரசர்களால், பல்வேறு காலங்களில் பெரிதாக்கப்பட்டிருக்கிறது. பிற்காலச் சோழர்களால் பெரிதும் போற்றப்பட்ட கோயில் சிதம்பரம் கோயில். சைவ சமய மன்னர்கள் மட்டும் அல்ல, வைணவ சமய மன்னர்களும், இக்கோயில் வளாகத்தில் தங்கள் ஆட்சியின் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இப்படிச் சைவ மன்னர்களும், வைணவ மன்னர்களும் தங்கள் ஆட்சியின் இருப்பை இத் தில்லை வளாகத்தில் காட்டியதால் தானோ என்னவோ, பிரச்சினைகளின் திருத்தலமாக இக்கோயில் தொடர்ந்து இருந்திருக்கிறது.

நடராசர் கோயில் வளாகத்தில் உள்ள திருச்சித்ரகூடம் திருமால் (வைணவக் கடவுள்) வீற்றிருக்கும் கூடம். ஆழ்வார்களின் பாடல் பெற்ற கோயில். இந்தக் கோயிலுக்கு பன்னிரெண்டாம் நூற்றாண்டில் சோதனை ஏற்பட்டது. தில்லை நடராசன் வளாகத்தில் திருமால் கோயிலா? கொதித்து எழுந்தான் இரண்டாம் குலோத்துங்கன். சித்ர கூடத்தை அழித்தான். கோவிந்தராஜ பெருமாள் சிலையை கடலில் வீசினான். நானூறு ஆண்டுகள் ஓடின. தில்லைக் கோயிலுக்கு உரியவர் நடராசர்தான் என்று மாற்றினார்கள்! பிற்காலச் சோழர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் விஜயநகர வேந்தனான அச்சுததேவ மகாராயர் என்னும் மன்னன் கோவிந்தராஜ பெருமாளை ‘புனப்பிரதிஷ்டை’ செய்திருக்கிறான். இந்த மன்னன் ஆந்திரத்தின் புகழ் பெற்ற அரசனான கிருஷ்ண தேவராயனின் இளவலாகும். இதன் பின்னர் நடராஜர் கோயிலின் முதல் பிராகாரத்திலேயே கோவிந்தராஜ பெருமாள் தனிக் கோயில் அமைக்கும் முயற்சி நடந்து, அதை எதிர்த்து தில்லை வாழ் அந்தணர்கள் கோயில் கோபுரத்தில் ஏறி, இருபதுக்கும் மேற்பட்டோர் தற்கொலையம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**நன்றி : ச. செந்தல்நாதன் எழுதிய “சிதம்பரம் கோயில்: சில உண்மைகள்” நூலிலிருந்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 17th January 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஜனவரி 23, 2014 | புரட்சி 13 | முழக்கம் 02 | விலை: ரூ.3.00


## 125 ஆவது பிறந்த நாள் நினைவாக

# சரித்திரம் படைத்த சர். ஏ.டி. பன்னீர்செல்வம்

*சர்.ஏ.டி. பன்னீர்செல்வம், தமிழ்நாடு தனி நாடாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர். பெரியாரின் நம்பிக்கைக்கு உரியவர். இந்தியாவுக்கான பிரிட்டிஷ் அமைச்சரின் செயலாளராக தேர்வு பெற்று லண்டன் பயணமானபோது தமிழ்நாடு விடுதலைக்கான முயற்சிகளைத் தொடங்கி விடுவார் என்ற எதிர்பார்ப்புடன் வழியனுப்பி வைக்கப்பட்டார். ஆனால், நடந்ததோ வேறு. சர். ஏ.டி. பன்னீர் செல்வத்தின் 125 ஆவது பிறந்த நாள் நினைவாக அவரது வரலாற்றுச் சுருக்கம் வெளியிடப்படுகிறது.*

சர். ஏ.டி. பன்னீர்செல்வம், அய்ம்பத்தி இரண்டு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து, தென்னகத்தின் அரசியல் வரலாற்றில் ஓர் உன்னதமான இடத்தைப் பெற்றவர். கடைசியாக இவருக்குக் கிடைத்த இந்தியா மந்திரியின் ஆலோசனையாளர் பதவியினை இவர் ஏற்றுத் தாயகம் திரும்பியிருப்பாரேயானால் தென்னகத்தின் - திராவிடத்தின் - தமிழகத்தின் அரசியலே வெகுவாக மாறியிருக்கும். ஆனால், என்ன செய்வது? இயற்கையும் தமிழர்க்குப் பகையாயிற்று. ஆம்! தமிழர்களை வஞ்சித்துவிட்டது!

யார் - இந்த பன்னீர்செல்வம்?

திருவாரூர் - நன்னிலம் பாதையில் செல்வபுரம் என்ற ஊர், பெயருக்கேற்றபடி இன்றும் திகழக் காணலாம். இவ்வூரில் 1888 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாள் சர். செல்வம் பிறந்தார். இவர் பார்க்கவ குலம் - உடையார் வகுப்பைச் சேர்ந்த இந்தியக் கிறித்தவர். இவர் தந்தையார் பெயர் தாமரைச் செல்வம். இவருடைய நெருங்கிய உறவினர்கள் இன்னமும் இந்துக்களாகச் - சைவப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். சர். செல்வத்தினுடைய நெருங்கிய உறவினர்கள் தீபங்குடி, பெரும் பண்ணையூர், செல்வபுரம், சென்னை போன்ற ஊர்களில் வாழ்கின்றனர்.



சர். செல்வம், திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் கல்வி பயின்றவர். பின்னர் இலண்டன் சென்று கிரேஸ்கின் நிலையத்தில் பார் - அட் - லா பட்டம் பெற்றார். 1912 ஆம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து தாயகம் திரும்பினார். தஞ்சைப் பெரும் பண்ணையூர்ப் பெருநிலக்கிழார் முத்துசாமி உடையாரின் மகளை சர். செல்வம் திருமணம் செய்து கொண்டார். தஞ்சை மாவட்டத்தில் வழக்கறிஞர் தொழிலில் சர். செல்வம் ஈடுபடலானார்.

நீதிக்கட்சியால் கவரப்பட்டு அதில் பங்கு கொண்டு உழைக்கலானார். அவரின் கட்சி ஈடுபாடு தொடங்கப்பட்ட நாள் முதல் அவர் இறக்கும் வரையும் நீதிக்கட்சிக்காரராகவே வாழ்ந்து, பணியாற்றி மறைந்தார். அந்நாள்களில் தஞ்சை மாவட்டத்தில் நீதிக்கட்சி மாநாடுகளானாலும், பார்ப்பனரல்லாதார் மாநாடுகளானாலும், தமிழர் மாநாடுகளானாலும் சர். செல்வம் இன்றி நடைபெற்றதில்லை.

1918 ஆம் ஆண்டு தஞ்சையில் ஒரு மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டிற்குப் பிட்டி தியாகராயரும், டாக்டர் நாயரும் வந்திருந்தனர். மாநாடு முடிந்து மறுநாள் சர். தியாகராயர் தஞ்சையைச் சுற்றிப் பார்க்க விரும்பினார். சர். செல்வம் தியாகராயரை கோச் வண்டியில் ஏற்றிக் கொண்டு நகரைச் சுற்றிக் காண்பித்துக் கொண்டே வந்தார். ஓரிடத்தில் சக்கரம் பள்ளத்தில் புதையுண்டு போயிற்று. சர். செல்வம் கீழே இறங்கிப் புதையுண்ட சக்கரத்தைத் தம் தோள்களால் தாங்கிக் ‘கோச்சை’ ஓடச் செய்தார். இதனைக் கண்ட பிட்டி தியாகராயர், சர். செல்வத்தின் பண்பைக் கண்டு வியந்து பாராட்டி வாழ்த்தினார். அவருடைய வாழ்த்துதல் வீண் போகவில்லை. பதவிகள் அவரைத் தேடித் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தன.

இந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மதுரைத் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது நல்ல தொடக்கமாக விளங்கியது. அதனைத் தொடர்ந்து தோற்றுவிக்கப்பட்ட கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் சர். செல்வம் வாழ்நாள் உறுப்பினராகத் தம்மை இணைத்துக் கொண்டார். உமா மகேசுவரனாரோடு இணைந்து தஞ்சை மாவட்டத்தில் பல பணிகளை அவர் செய்தார். அவற்றில் முதன்மையானது திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ்மொழிக்கு இடம் கிடைக்கச் செய்தது ஆகும்.

திருவையாற்றில், காவிரியின் வடகரையில் ஒரு பெரிய மூன்று மாடிக் கட்டடத்தை அமைத்து, அங்கே சமஸ்கிருதம் மட்டும் கற்பிக்கும் பாடசாலையை நடத்தி வந்தனர். இப்பாடசாலையால் பார்ப்பனர்கள் மட்டுமே பயன் அடைந்து வந்தனர். இதனால் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான பார்ப்பன மாணவர்கள் சமஸ்கிருத இலக்கண, தருக்க நூல்களைக் கற்றுக்கொண்டு வந்தனர். அரசர் கல்லூரியில் சமற்கிருதம் மட்டும் போதிக்கப்பட ஏதாவது ஆதாரம் உள்ளதா என்று ஆராய்ந்தபோது (சரபோஜி) அரசர் வடமொழியில் எழுதிய சாசனத்தில் வடமொழி மட்டுமே கற்பிக்கப்பட வேண்டும் என எழுதியுள்ளதாகப் பார்ப்பனர் சாதித்து வந்தனர்.

தமிழவேள் உமா மகேசுவரன் அவர்கள், சாசனத்தை ஞானியாரிடம் காட்ட அவர், “கல்வி நலனுக்கென்று” எழுதப்பட்டிருப்பதாகக் கூற, அதன் பிறகே உமாமகேசுவரன் அவர்கள், தி. செல்வகேசவராய முதலியார் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து ஆறாவது விழாவின்போது, ‘வடமொழிக் கல்லூரியில் தமிழையும் முதன்மைப் பாடமாக வைத்து நடத்த ஆட்சியருக்கும், மாவட்டக் குழுவுக்கும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினார்.

இத் தீர்மானத்தைச் செயல்படுத்த மாவட்டக் குழுத் தலைவராக சர். செல்வம் இருந்தார். திருவையாற்றுக் கல்லூரியில் சமஸ்கிருதத்தோடு தமிழும் கற்பிக்கப்படலாயிற்று. இதனால் பலத்த எதிர்ப்புகள் ஏற்பட்டன.

***( மீதி அடுத்த இதழில் )***

## வினாக்கள்... விடைகள்...!

+ தேர்தலை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும்; அதீத நம்பிக்கையுடன் இருக்கக் கூடாது. **–மோடிக்கு அத்வானி அறிவுரை**

  ஆமாம்! ‘ராமபிரான்’ அனுமார் படையுடன் வெற்றியை காலடியில் கொண்டுவந்து சேர்த்து விடுவான் என்று அதீதமாய் நம்பி ஏமாறக் கூடாது; சரிதானே!

+ மோடி – பிரதமராகவே முடியாது. தேனீர் வேண்டுமானால் விற்கலாம். **– மணி சங்கர் அய்யர்**

  அவர் தேனீர் விற்கட்டும்; நாட்டை நாங்கள்தான் விற்கவேண்டும் என்கிறீர்களா?

+ “என்னை தீவிரவாதிகள் கடத்தப் போகிறார்கள் என்றும், ஊடகங்களுக்கு இதைக் கூற வேண்டாம்” என்றும் கூறிவிட்டு, உளவுத் துறையே ஊடகங்களுக்கு செய்தி கொடுத்துவிட்டது.– **கெஜ்ரிவால்**

  ஆமாம்! தீவிரவாதிகள் உளவுத் துறைக்கு தகவல் தருவார்கள். உளவுத் துறை பத்திரிகைகளுக்கு தகவல் தரும்.

+ உறவு முறையில் திருமணம் செய்வதால்தான் காது கோளாறுகள் ஏற்படுகின்றன.– **‘தினமணி’ செய்தி**

  ஜாதி வெறி பேசும் தலைவர்களே, காதில் விழுகிறதா?

+ மத்திய அரசைக் கண்டித்து, ரிசர்வ் வங்கி முன் விவசாயிகள் சட்டை அணியாமல் ‘நாமம்’ போட்டுப் போராட்டம். **– செய்தி**

  ‘வைணவர்’களாக மாறிப் போராடுகிறார்கள் என்று கவுரவமாக சொல்லுங்கள்.

+ கலப்பு திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு ‘காந்தி ஜாதி’ என்று பெயர் சூட்டக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு. **– செய்தி**

  நல்லாத்தான் இருக்கு. ஆனால், கோட்சே ஜாதிக் காரங்க கலவரம் செய்யாமல் கண்காணிக்கணும்.

+ விஷ ஊசித் தட்டுப்பாடு, அதன் விலை உயர்வு காரணமாக, அமெரிக்காவில் மரணதண்டனை நிறைவேற்றம் குறைகிறது. **– செய்தி**

  எங்களால் உயிரைக் காக்கவும் முடியும் என்று அரசுகளுக்கு உணர்த்திய விஷ ஊசிகளே! நன்றி, நன்றி!

+ கொசுத் தொல்லையிலிருந்து தமிழக மக்களைக் காப்பாற்ற தமிழகம் முழுதும் கொசுவலைகளை வழங்க வேண்டும். **– தா. பாண்டியன்**

  அப்படி கொசுவலைகளை வழங்க முடியாவிட்டால், கொசுக்களை தேச விரோதிகளாக அறிவித்து, தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்வது குறித்தும் முதல்வர் பரிசீலிக்கலாம்.

+ ‘பிராமணர்கள்’ முன்னேற்றத்துக்கு பெரிதும் தேவை, உழைப்பா, தியாகமா என்று ‘பிராமணர்’ இளைஞர் மாநாட்டில் பட்டிமன்றம் நடந்தது. **– தினமலர் செய்தி**

  உழைப்பும் இல்லை; தியாகமும் இல்லை; ‘உழைப்பை தியாகம்’ செய்ததே முன்னேற்றத்துக்கான காரணம்! இதுதான் இந்த நாட்டாமையின் தீர்ப்பு!

+ பம்பையிலேயே அய்யப்ப பக்தர்களை முடக்கி வைத்து கேரள போலீசார், கூண்டுக்குள் அடைக்கிறார்கள். நெரிசலில் சிக்கிய பக்தர்கள் ‘சாமியே சரணம் அய்யப்பா’ என்று முழக்கமிட முடியாமல், ‘அய்யோ... அம்மா’ என அலற வேண்டியிருந்தது. **– தமிழ் ‘இந்து’ செய்தி**

  ‘அய்யோ அம்மாதான்’ இயல்பான அபயக்குரல் என்பதை, இப்போதாவது புரிஞ்சுக்குங்க சாமி!

## கழகத் தலைவர் மீதான வழக்கு பிப். 3க்கு தள்ளி வைப்பு

கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீதான தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரும் வழக்கு, ஜனவரி 20 ஆம் தேதி உயர்நீதிமன்ற நீதிபதிகள் ராஜேசுவரன், டி.என். பிரகாசு முன் விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் கால அவகாசம் கேட்டார். வழக்கை உடனடியாக விசாரணைக்கு ஏற்க வேண்டும் என்றும், வழக்கு பொய்யானது என்றும் கழக வழக்கறிஞர் திருமூர்த்தி வாதிட்டார். விசாரணையை பிப். 3 ஆம் தேதிக்கு நீதிபதி தள்ளி வைத்தார்.

# பன்னீர்செல்வமே! காலம் சென்று விட்டாயா?

## பெரியார்

**(பன்னீர்செல்வம் முடிவுக்கு எழுதிய இரங்கல்)**

*நமது உண்மைத் தோழரும், உற்ற துணைவரும், உள்ளும் புறமும் ஒன்றாய் உள்ளவரும், தமிழர் இயக்கத்தில் உறுதியான பற்றுக் கொண்டு அல்லும் பகலும் உழைத்து வந்தவரும், நம்மிடத்தில் களங்கமற்ற அன்பும் பற்றுதலும் விசுவாசமும் கொண்டிருந்தவரும், நினைத்தால் திடுக்கிடும்படி எதிரிகள் நெஞ்சில் எப்பொழுதும் திகிலை உண்டாக்கிக் கொண்டிருந்தவருமான அருமை பன்னீர் செல்வம் அவர்களை, இன்று, காலம் சென்ற பன்னீர் செல்வம் என்று எழுத நேரிட்டதற்கு மனம் பதைக்கிறது! நெஞ்சு திக்கு திக்கென்று அடித்துக் கொள்கிறது! மெய் நடுங்குகிறது! எழுதக் கையோடவில்லை; கண் கலங்கி மறைக்கிறது; கண்ணீர் எழுத்துக்களை அழிக்கிறது!*

*பன்னீர்செல்வத்திற்குப் பாழும் உத்தி யோகம் வந்ததும் போதும்; அது அவரது உயிருக்கே உலையாய் இருந்ததும் போதும்! தமிழர்களைப் பரிதவிக்கவிட்டுவிட்டு மறைந்து விட்டார். இந்த உத்தியோகம் ஏன் வந்ததென்றே ஒவ்வொரு வினாடியும் தோன்றுகிறது. அவருக்கடுத்தாற்போல் - யார், யார் என்று மனம் ஏங்குகிறது; தேடுகிறது; தேடித் தேடி ஏமாற்றமடைகிறது!*

*என் மனைவி முடிவெய்தியபோதும் நான் சிறிதும் மனம் கலங்கவில்லை; ஒரு சொட்டுக் கண்ணீர் வடிக்கவில்லை.*

*என் தாயார் இறந்தபோதும் - இயற்கை தானே, 95 வயதுக்கு மேலும் மக்கள் வாழவில்லையே என்று கருதலாமா? இது பேராசை அல்லவா என்று கருதினேன்!*

*10 வயதிலேயே லண்டனுக்கு அனுப்பிப் படிக்க வைத்த ஒரே அண்ணன் மகன், படித்துவிட்டு இந்தியா வந்து சேர்ந்து சரியாக 20 வயதில் இறந்து போனதற்காகவும் பதறவில்லை; சிதறவில்லை!*

*பன்னீர்செல்வத்தின் மறைவு மனத்தை வாட்டுகிறது.*

*தமிழர்களைக் காணுந்தோறும் காணுந் தோறும் - தமிழர் நிலையை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் நெஞ்சம் பகீரென்கிறது!*

*காரணம், முன் சொல்லப்பட்ட மனைவி, தாயார், குழந்தை ஆகியவர்கள் மறைவு என் தனிப்பட்ட சுக துக்கத்தைப் பொறுத்தது; தன்னலம் மறையும்போது அவர்களது மறைவின் நினைவும் மறந்துபோகும். பன்னீர் செல்வத்தின் மறைவு பொது நலத்தைப் பொறுத்தது; தமிழர்களின் நிலையைப் பொறுத்தது. எனவே தமிழர்களைக் காணுந் தோறும் - நினைக்குந்தோறும் பன்னீர் செல்வம் ஞாபகத்துக்கு வருகிறார்! இது என்று மறைவது? இவருக்குப் பிறகு யார் என்றே திகைக்கிறது! பாழாய்ப்போன உத்தியோகம் - சர்க்கரை பூசின நஞ்சுருண்டை குத்திய தூண்டில் முள்ளாக இருந்து விட்டது! அம் முள்ளில்பட்ட மீனாக ஆகிவிட்டார் செல்வம்!*

*இனி என் செய்வது? தமிழர் இயக்கமானது தோன்றிய நாள் முதல் இப்படியே பல 'தத்துக்களுக்கு' ஆளாகி வந்திருக்கிறது என்றாலும் - நாளுக்கு நாள் முன்னேறியே வந்திருக்கிற அனுபவந்தான் நமக்கும் தமிழ் மக்களுக்கும் சிறிது ஆறுதலளிக்கும் என்று கருதுகிறேன்.*

*காலம் சென்ற பன்னீர்செல்வமே! காலம் சென்று விட்டாயா? நிஜமாகவா? கனவா? தமிழர் சாந்தி பெறுவாராக!*

**- பெரியார், 'குடிஅரசு', 17.3.1940**

# உன் இயக்கம் ஒரு வரலாறு

## தமிழேந்தி

**வறட்டுத்தன மாய்இங்கே நாத்தி கத்தை**
**வளர்த்திட்டாய் என்றுசிலர் குற்றம் சொல்வார்**
**முரட்டுத்தன மாய்க்கடவுள் மறுத்தாய் என்றும்**
**முணுமுணுப்பார் உள்ளுக்குள்; ஆனால் நீயோ**
**திருட்டுத்தனம் மிக்க பார்ப்ப னீயத்**
**தீமைகளை, சாதியத்தை எதிர்த்தாய் என்றே**
**அருட்தந்தை போல்உன்னைத் தமிழகத்தின்**
**அடித்தட்டு மக்களெலாம் வணக்கம் செய்தார்.**

**'புதிதாக நீஎதையும் சொல்ல வில்லை**
**புரட்சிகர செயல்எதுவும் செய்ய வில்லை**
**இதற்கு முன்பே இருந்தவைதாம்; உன்பங் கென்றே**
**எதுவுமில்லை' என்பர்சிலர்! எல்லாம் இங்கே**
**விதிவசந்தான் எனக்கிடந்த மக்கள் நெஞ்சில்**
**விசையூட்டித் தன்மான வீரம் ஊட்டி**
**நதிப்பெருக்காய், கடல்ஆர்ப்பாய் ஓர் இயக்கம்**
**நடத்தியவன் வரலாற்றில் நீயே அன்றோ?**

**'தமிழ்மொழியைச் சனியனென்றாய், தமிழைக் காட்டு**
**மிராண்டிமொழி எனச்சொன்னாய்' என்றே உன்னைத்**
**தமிழ்மொழிக்குப் பகைவனெனக் குற்றம் சாட்டிச்**
**சலிக்காமல் பழிஉரைப்பார்; இந்தி யாலே**
**தமிழ்மொழிக்(கு) உற்றகேட்டைத் தடுத்த துண்டு**
**தமிழ்உணர்ச்சி உன்இயக்கம் வளர்த்த துண்டு**
**தமிழ்மொழிக்குள் 'நன்றி'என்ற சொல்லும் உண்டு**
**தமிழர்அதன் 'பொருள்'அறியும் பண்பும் உண்டு**

**'ஆடுமாடா மேய்த்திருப்பான் தமிழன்? இல்லை**
**அழிந்தவனா போயிருப்பான்? பெரியார் தொண்டைக்**
**கூடுதலாய் மிகைப்படுத்த வேண்டாம்' என்று**
**கூறிடுவார் சிலபேர்கள், பார்ப்பான் பண்ணைக்**
**காடாக இருந்தநிலம் மாற்றிக் காய்ந்த**
**கருப்பனுக்கும் முனியனுக்கும் உரிமை உள்ள**
**நாடாக மாற்றியவன் நீயே! ஏற்ற**
**நாற்காலி தந்தவனும் நீயே! நீயே!**

- புரட்சிப் பெரியார் முழக்கம், பெரியார் ஜாதி ஒழிப்பு மலர்-2014

# அடைக்கலம் தேடி வந்த தமிழர்களை இலங்கைக்கு அனுப்பும் ஆஸ்திரேலியாவுக்கு கண்டனம்

*அடைக்கலம் தேடி வந்த ஈழத் தமிழர்களை அகதிகளாக அங்கீகரிக்காமல், அவர்களை மீண்டும் இலங்கைக்கே திருப்பி அனுப்பி வருகிறது ஆஸ்திரேலிய அரசு. உயிருக்கு உறுதியில்லாமல் ஈழத் தமிழர்கள் அச்சத்தால் பரிதவிக்கிறார்கள். அடைக் கலம் தேடி ஆஸ்திரேலியா வந்த 46 தமிழர்களை சிறையிலடைத்துள்ள ஆஸ்திரேலிய அரசு, இப்போது, அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப ஏற்பாடுகளை செய்து வருகிறது. இந்திய அரசு, இதில் தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் என்று உலகம் முழுதும் தமிழர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.*

*இந்த ஈழத் தமிழர்கள் 5 ஆண்டுகளாக ஆஸ்திரேலிய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிறையில் அடைபட்டுள்ள ஈழத் தமிழர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகி, கடுமையாக உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, ஒருவர் சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டார். சிலர் மனைவி, குழந்தைகளுடன் நான்கு ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட் டுள்ளனர்.*

*கொழும்பில் நடந்த காமன்வெல்த் மாநாட்டில் இராஜபக்சேவை தீவிரமாக ஆதரித்துப் பேசிவர் ஆஸ்திரேலிய பிரதமர் என்பது குறிப்பிடத்தக்கது. சில சூழ்நிலைகளில் சித்திரவதைகள் நடப்பது தவிர்க்க முடியாது என்று கூறினார். அடுத்த நாளே, இலங்கைக்கு ஆஸ்திரேலியாவிடமிருந்து இரண்டு கப்பல்கள் வாங்குவதற்கான ஒப்பந்தம் போய்விட்டது. கடந்த சில ஆண்டுகளாக அடைக்கலம் தேடி வந்த ஆயிரக்கணக்கான தமிழர்களை அகதிகளாக அங்கீகரிக்காமல் திருப்பி அனுப்பி வருகிறது, ஆஸ்திரேலியா! சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.*

# திராவிடர் கழகம் வரலாற்றை திரிக்க வேண்டாம்!

*பெரியார் - தமிழ்நாடு தனி நாடாக வேண்டும் என்று கூறியது குறித்து வாசகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு தி.க. தலைவர் கி.வீரமணி 'உண்மை' இதழில் (ஜன.1-15) கீழ்க்கண்ட பதிலை அளித்துள்ளார்.*

*"சமூக இழிவு ஒழிப்பு மாநாடுதான் அவர் கடைசியாக நடத்தியது;* **பேசியது.** *அதற்காக விடுத்த அறிக்கையில் 'நானே பிரிவினை கேட்கவில்லையே!' என்று அறிக்கையை விடுத்தார். அது விடுதலை நாளிதழில் வெளி வந்துள்ளது. 'விடுதலை'க்கான தேவை அவசியம் வேறு - கழகம் விடுதலை கேட்டது என்ற நிலை வேறு' என்று பதிலளித்துள்ளார். பெரியார் தமிழ்நாடு தனிநாடாக பிரிய வேண்டும் என்று வலியுறுத்தியது உண்மை. தி.க. தலைவர், அதை ஏற்கிறாரா? இல்லையா என்பது, அவரது கொள்கை. அதற்காக பெரியார் கருத்தை மறைக்க முயல்வது வரலாற்றுத் துரோகம்.*

*தி.க. தலைவர் கூறுவதுபோல் பெரியார் கடைசியாக பேசியது சமூக இழிவு ஒழிப்பு மாநாடு அல்ல.*

*பெரியார் சமூக இழிவு ஒழிப்பு மாநாடு நடத்தியது 1973 டிசம்பர் 8, 9 தேதிகளில்! அதுவே அவரது கடைசிப் பேச்சு அல்ல. கடைசி உரை நிகழ்த்தியது சென்னை தியாகராயர் நகரில் 19.12.1973இல்! இறுதிப் பேருரையில், சூத்திர இழிவு, ஒழிப்புப் போராட்டத்துக்கு பெரியார் அறைகூவல் விடுத்தார். அப்போது இவ்வாறு கூறினார்: "நான் என்ன செய்கிறேன். இந்தச் சாக்கிலேயே நம்நாடு நம்முடையதாக ஆகிவிடாதா? அவ்வளவுதான்!" என்று தான் முழங்கினார். எவ்வளவோ முறை எடுத்துக் கூறியும் தி.க. தலைவர் வீரமணியோ, மீண்டும் மீண்டும் 'பொய்'யையே எழுதுகிறார்.*

*இதே 'உண்மை' இதழில், 'பஞ்ச கவ்யம்; கங்காஜலம்' என்ற கட்டுரை ஒன்று வெளி வந்துள்ளது. 2.11.1946இல் 'காலி மணி பர்ஸ்' என்ற புனைப் பெயரில் 'குடிஅரசில்' பெரியார் எழுதிய கட்டுரை என்று 'உண்மை' வெளியிட்டுள்ளது.*

*அது உண்மையல்ல. 'காலி மணிபர்ஸ்' என்ற தலைப்பில் 'கிண்டல்' கட்டுரைகளை 'குடிஅரசு' ஏட்டில் எழுதியவர் குத்தூசி குருசாமி. குருவிக்கரம்பை வேலு எழுதிய குத்தூசி குருசாமி வரலாற்றிலும் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுரை நடையைப் படித்த எவருக்குமே அதை எழுதியது குத்தூசி என்பது புரிந்துவிடும். ஆனால், 'உண்மை'யோ தந்தை பெரியார் எழுதியதாக பதிவு செய்கிறது.*

*'குடிஅரசு' தொகுப்புகளை கழகம் வெளியிட முன்வந்தபோது அதை எதிர்த்து வழக்குத் தொடுத்த திராவிடர் கழகம், வரலாற்றுத் தவறுகள் நிகழ்ந்து விடும் என்று கூறியது. தங்களால் மட்டுமே சரியான வரலாற்றுத் தகவல்களைக் கூற முடியும் என்று மார்தட்டியது.*

*ஆனால், குத்தூசி குருசாமி எழுதியதை பெரியார் எழுதியதாக எழுதுவதும், பெரியார் கடைசி பேச்சு - பெரியார் திடலில் நடந்த சமூக இழிவு ஒழிப்பு மாநாடுதான் என்று எழுதுவதும், பெரியார் தனிநாடு கேட்கவில்லை என்பதும் தான் வரலாற்றை பிழையில்லாமல் எழுதுவதா?*

# நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புகள் என்ன?

# கோயில் பார்ப்பனர்களின் உடைமையா?

***கோயில்களின் நிர்வாகத்தில் தலையிடும் உரிமை அரசுக்கு உண்டு என்பதை வலியுறுத்தி, கடந்த காலங்களில் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்து வந்துள்ளன.***

தீட்சதர்கள் - இந்து மதத்துக்குள்ளேயே தனிப் பிரிவினர். இவர்களின் உரிமைகளை அரசியலமைப்புச் சட்டத்தின் 26 பிரிவு உறுதி செய்கிறது. எனவே, தீட்சதர்கள், தில்லை நடராசன் கோயிலை நிர்வகிக்கும் உரிமையில் அரசு தலையிட முடியாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அரசியல் சட்டத்தின் 26 ஆவது பிரிவு, பார்ப்பனர்களுக்கான பாதுகாப்பு ஆயுதமாக இருந்து வருகிறது. பெரியார் நடத்திய அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் எரிக்கப்பட்ட பிரிவுகளில் இதுவும் ஒன்று. சமணர்கள் தனிப் பிரிவாக இருந்தாலும்கூட, சமணக் கோயில்கள், இந்து சட்டத்தின் கீழ்தான் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதை நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டுள்ளது. தீட்சதப் பார்ப்பனர்கள் 'முன் குடுமி' ஒன்றைத் தவிர, ஏனைய ஸ்மார்த்தப் பார்ப்பனர்களைப் போன்ற கலாச்சாரத்தையே பின்பற்றுகின்றனர். தீட்சதப் பார்ப்பனர்கள் பூணூல் அணிந்து, தங்களை "பிராமணர்கள்" என்றுதான் அறிவித்துக் கொள்கிறார்கள். கோயிலுக்குள் 'ஓதுவார்' சூத்திரர்கள் தேவாரம் பாடினால் தீட்டாகிவிடும் என்று பார்ப்பன புரோகிதர்கள் கூறுவதைத்தான் பின்பற்றுகிறார்கள். ஆனால், இவர்கள் 'தனிப் பிரிவினர்' என்று வாதாடுவதை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொள்வதுதான் வியப்புக் குரியது. ஒரு அடிப்படையான கேள்வி எழுந்துள்ளது. பொது மக்கள், பக்தர்கள் வழிபடக்கூடிய கோயில் எப்படி ஒரு தனிப்பட்ட பிரிவினருக்கு பிறப்பின் அடிப்படையில் சொந்தமாக்கப்படுகிறது என்பதுதான் அந்தக் கேள்வி! 'உறவுக் கலப்பு' எதுவும் நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காக இப்போதும் தீட்சதர்கள் தங்கள் குடும்பங்களுக்குள்ளேயே "பால்ய விவாகங்களை" - அதாவது குழந்தைத் திருமணங்களை நடத்தி வருகிறார்கள். சட்டம் இந்த குற்றங்களைத் தடுப்பதில்லை.

கோயில்கள் கலாச்சாரத்துக்கான பொதுவிடம் என்றும், பாரம்பர்ய சின்னம் என்றும் பெருமை பேசும் பார்ப்பனர்கள், இந்தக் கோயில்களை தனிமைப்படுத்துவதும், சீர்திருத்த நடவடிக்கைகளிலிருந்து ஒதுக்கி வைப்பதும் எப்படி நியாயமாகும்?

கோயில்கள் அரசு கட்டுப்பாட்டின் கீழ் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுதுமே உள்ளன. எனவே, தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளின் நாத்திக ஆட்சி கோயில் நிர்வாகத்தில் குறுக்கிடுவதாக இராமகோபாலன், சுப்பிரமணியசாமி போன்ற பார்ப்பனர்கள் அலறுகிறார்கள். தில்லை நடராசன் கோயிலைக் கட்டியது தீட்சதர்கள் அல்ல; ஆனால், கோயில் வழிபாட்டு உரிமை, நிர்வாக உரிமை இரண்டும் தீட்சதப் பார்ப்பனர்களிடமே இருக்க வேண்டும் என்று பதறுகிறார்கள். தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சியும் இதற்குத் துணைப் போகிறது.

தமிழ்நாட்டில் டி.எஸ்.எஸ். ராஜன் என்ற பார்ப்பனர், ஆச்சாரியார் அமைச்சரவையில் இருந்தவர். நேரு பிரதமராக இருந்தபோது, கோயில்கள் அனைத்தும் அரசு நிர்வாகத்தின் கீழ்தான் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியதை டி.எஸ்.எஸ். ராஜன் பார்ப்பனரும் வலியுறுத்தினார்.

1817 ஆம் ஆண்டு முதன்முதலாக கோயில்களில் நடக்கும் முறைகேடுகள், கொள்ளைகளைத் தடுக்கும் நோக்கத்தோடு சட்டம் இயற்றப்பட்டது. கோயில்களை நிர்வகிக்கும் அறக்கட்டளைகளில் அரசு தலையிட்டு நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்தும் உரிமை அரசுக்கு உண்டு என்ற நோக்கில் அறநிலையத் துறை சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்போதே, பார்ப்பனர் தரப்பில் கடும் எதிர்ப்புகள் வரத் தொடங்கிவிட்டன.1888 இல் அதாவது சட்டம் வந்து 11 ஆண்டுகளுக்குப் பிறகு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர, 6 'இந்து'க்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. டி. முத்துசாமி அய்யர், வி.பாஷ்யம் அய்யங்கார் உள்ளிட்ட வைதீகப் பார்ப்பனர்களைக் கொண்டிருந்த அந்தக் குழு, கோயில்களில் நடக்கும் முறைகேடுகளைத் தடுக்க, அரசின் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் அவசியம் என்று கருத்து தெரிவித்தது. அப்போது பார்ப்பனர்களின் குரலாக வெளிப்படையாக ஒலித்து வந்த 'இந்து' நாளேடும் கோயில் முறைகேடுகளைத் தடுக்க, அரசின் தலையீடு தேவை என்றே வலியுறுத்தியதோடு, அரசின் தலையீட்டை எதிர்ப்பவர்களை திருடர்களுடன் ஒப்பிட்டு எழுதியது.

"குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவதை திருடர்கள் எதிர்ப்பதுபோல்தான். கோயில் முறைகேடுகளைத் தடுக்கும் சட்டங்களை எதிர்ப்பவர்களும் ஆவார்கள்" என்று எழுதியது 'இந்து' ஏடு. அப்போதே தில்லை தீட்சதப் பார்ப்பனர்கள் தில்லை நடராசர் கோயில் தனியாருக்கு உரிமையானது என்று அறிவிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். கோயில் நிர்வாகத்தில் அரசு தலையிடுவது அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் மதச் சுதந்திரத்துக்கு எதிரானது என்று வாதிட்டனர். (பிரிவு 25, 26 - இதுவும் பெரியார் எரிக்கச் சொன்ன அரசியல் சட்டப் பிரிவுகளாகும்).

உச்சநீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த கஜேந்திர கட்கர், பல முற்போக்கான தீர்ப்புகளை கோயில் வழக்குகளில் வழங்கியவர். "ஒரு குடிமகனின் மதச் சார்பற்ற உரிமைகளிலும், சமூக பொருளாதார அமைப்புகளை மாற்றியமைக்கக் கூடிய அரசுக்கான அதிகாரங்களிலும் எதிர்மறையான விளைவுகளை உருவாக்கும் மதத்தின் தலையீட்டை அனுமதிக்க முடியாது. அரசு தலையிட உரிமை உண்டு" என்று தீர்ப்பளித்தார்.

1962 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தின் அரசியல் சட்ட அமர்வும், மத நடவடிக்கைகளையும் நிர்வாக நடவடிக்கைகளையும் பிரித்துப் பார்க்க வேண்டும் என்று கூறியது. அப்படிப் பிரித்துப் பார்க்காவிட்டால் மதத்தோடு தொடர்பில்லாத மதச்சார்பற்ற செயல்பாடுகளுக்கும் மதச் சாயம் பூசப்பட்டு விடலாம் என்றும் எச்சரித்தது.

2009 இல் சென்னை உயர்நீதிமன்றம் தில்லை நடராசன் கோயில் நிர்வாகத்தில் அரசு தலையிடுவதை ஏற்று தீர்ப்பளித்தது கோயிலுக்கு உரிமையான 400 ஏக்கர் நிலத்தையும் பக்தர்கள் காணிக்கையாக தரும் நிதியையும் அரசு தலையிட்டு சரி செய்வது தவறாகாது என்றும் உயர்நீதிமன்றம் கூறியது.

கோயிலுக்குள் தீண்டப்படாத மக்கள் நுழையவே அனுமதி மறுத்ததை எதிர்த்து சுயமரியாதை இயக்கம்தான் முதன்முதலில் கோயில் நுழைவுப் போராட்டங்களை 19 ஆம் நூற்றாண்டில் தொடங்கி நடத்தியது 1939 ஆம் ஆண்டில் மதுரையில் நடந்த கோயில் நுழைவுப் போராட்டத்துக்குப் பிறகு கோயில் கதவுகள் சட்டரீதியாக தீண்டப்படாத மக்களுக்கு திறந்து விடப்பட்டன. ஆனால் கோயில் நுழைவு உரிமைகளையே பார்ப்பன புரோகிதர்கள் எதிர்த்தார்கள். அப்போது அவர்கள் முன் வைத்த வாதம் கோயில் பிரச்சினையில் அரசு தலையீடு கூடாது என்பதுதான்.

கருநாடகத்தில் மூல்க்கி பெட்டா எனுமிடத்திலுள்ள வெங்கட்ராமன் கோயில் உள்ளிட்ட பல கோயில்களில் பார்ப்பனர்கள், தாங்கள் "தனிப் பிரிவினர்" என்ற அடிப்படையில் கோயிலுக்குள் தீண்டப்படாத மக்களை அனுமதிக்க மறுப்பது தங்களுக்கு அரசியல் சட்டத்தின் 26 ஆவது பிரிவு வழங்கியுள்ள உரிமை என்று வாதிட்டனர். நீதிமன்றம் இதை ஏற்க மறுத்துவிட்டது.

அனைத்து சாதியினரும் உரிய பயிற்சிப் பெற்று, அர்ச்சகராக முடியும் என்ற தமிழக அரசின் சட்டத்தை பார்ப்பனர்கள் எதிர்த்து நீதிமன்றம் சென்று தடைப்படுத்திவிட்டனர். 1987 இல் ஆந்திர உயர்நீதிமன்றம் அர்ச்சகர் வேலைக்கு பரம்பரை உரிமை கோர முடியாது என்று தீர்ப்பளித்ததோடு, திருமலை திருப்பதி கோயிலில் பரம்பரை அர்ச்சகர் உரிமையை நிறுத்துமாறு உத்தரவிட்டது. திருப்பதி ஏழுமலையான் கோயில் அர்ச்சகப் பார்ப்பனர்கள் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றம் போனார்கள். "நாங்கள் வைகாச ஆகமப் பிரிவைச் சார்ந்தவர்கள். திருப்பதி திருமலை கோயிலில் காலங்காலமாக பின்பற்றப்படும் ஆகமமுறை இதுதான். அத்தகைய பூஜை முறை எங்களுக்கு மட்டுமே உரித்தானது. நாங்கள் கோயிலில் அர்ச்சகராக பதவி காரணமாக இருப்பவர்கள் அல்ல. மதப் பழக்கத்திலிருந்து பிரிக்க முடியாமல் மதத்தோடு இணைந்து நிற்பவர்கள்" என்று வாதிட்டனர். உச்சநீதிமன்றம் இந்த வாதத்தை ஏற்கவில்லை. கோயில் சடங்குகள்தான் மதத்தோடு தொடர்புடையதே தவிர, சடங்குகளை நடத்துகிற நபர்கள் மதத்தோடு, பிரிக்க முடியாமல், பிணைந்து கிடப்பவர்கள் அல்ல என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது. உரிய தகுதி உள்ள எவரும் திருப்பதியில் அர்ச்சகராகலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தமிழ்நாடு அரசு அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகருக்கான பயிற்சி அளித்து, அவர்களை அர்ச்சகர்களாக நியமிக்க முடிவு செய்து 2006 ஆம் ஆண்டு பிறப்பித்த நிர்வாக ஆணையை பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் சென்று தடையாணை வாங்கிவிட்டார்கள்.

பார்ப்பனரல்லாத சைவர்கள், தில்லை கோயிலில் கர்ப்பக்கிரகம் அருகே நின்று தேவாரம் பாடுவதை தீட்சதர்கள் அனுமதிப்பதில்லை. இதற்கு தீட்சதப் பார்ப்பனர்கள் நீதிமன்றத்தின் வழியாக தடையாணை பெற்றனர். அரசு தலையிட்டு நடவடிக்கை எடுத்தது. 2008 இல் ஓதுவார்கள், தேவாரம் ஓத அரசு ஆணையிட்டும் தீட்சதர்கள் அதை ஏற்க எதிர்ப்பு தெரிவித்தனர்.

1960 ஆம் ஆண்டு மத்திய அரசால் உருவாக்கப்பட்ட இந்து அறநிலையத்துறைக்கான ஆணையம், தென்னாட்டில் கோயில்கள் அரசு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பிறகு தான் சிறப்பாக செயல்பட்டு வருவதாக பாராட்டியதோடு முறைகேடுகள் தடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியது.

ஏற்கனவே பின்பற்றப்பட்டுவரும் மதப் பழக்க வழக்கங்களில் சட்டங்கள் தலையிடவே கூடாது என்பது அல்ல. சீர்திருத்தங்கள் எங்கெங்கு தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் அரசு தலையிட முடியும். இந்தச் சூழலில் அரசியல் சட்டத்தின் 26 பிரிவும் மாற்றத்துக்குரியதே என்று கூறியிருக்கிறது.

கோயில்களின் சிலைகளுக்கே மந்திரத்தால் சக்தியைத் தரும் உரிமை தங்களுக்கே என்று கூறிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் கோயில்களின் நிர்வாகத்தில் அரசு குறுக்கிடவே கூடாது. அது தங்களுக்கான தனிச் சொத்து என்று கூறுவதும், அதை உச்சநீதிமன்றங்கள் ஏற்பதும்தான் - இப்போதும் தொடரும் நிலை. எத்தனை சட்டங்கள் வந்தாலும் பார்ப்பனர்கள் 'செரிமானம்' செய்து ஏப்பம் விடும் சமூகத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பார்ப்பனர்கள் ஆதிக்கம் எங்கே இருக்கிறது என்று கேட்பவர்கள் சிந்திக்க வேண்டும்.

– **இரா**

## மேட்டூரில் கழகத்தினரின் மக்கள் சந்திப்பு இயக்கம்

*4.1.2014 அன்று மேட்டூர் பேருந்து நிலையத்தில் கழக மண்டல செயலாளர் அ.சக்திவேல் தலைமையில் மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது. மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழு பறை இசை முழங்க, கழகக் கொள்கைத் திட்டங்கள் குறித்து துண்டறிக்கைகள் பொது மக்களிடையே வினியோகம் செய்யப்பட்டது. ஏராளமான பொது மக்கள் கழகத்துக்கு வளர்ச்சி நிதியளித்தார்கள். காலை 10 மணிக்கு துவங்கி மாலை 6 மணி வரை மக்கள் சந்திப்புப் பணி தொய்வின்றி நடைபெற்றது.*



DATE OF PUBLICATION 22.01.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776


# வெளி வந்துவிட்டது!



- ஜாதி ஒழிப்பு – மனுசாஸ்திர எதிர்ப்புக் கட்டுரைகள்.
- கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டி – கட்டுரைகள்.
- முன்னாள் நீதிபதி சந்துரு – பேராசிரியர் அன்புச் செல்வன் – தொல். திருமாவளவன் – பத்திரிகை யாளர் ஜெயராணி – சிந்தனை யாளர்கள் எஸ்.வி. இராஜதுரை, அருணன் – க.பொ. அகத்தியலிங்கன் – பேராசிரியர் சிவசுப்பிரமணியன் – ஆர். நல்லக்கண்ணு – வே. ஆனை முத்து – கருத்தாழமிக்க கட்டுரைகள்.
- பெரியார் முழக்கத்தில் வெளிவந்த முக்கிய பதிவுகள்.
- திராவிடர் விடுதலைக் கழகத்தின் போராட்டக் களங்கள் – செயல்பாடுகள்.
- அறிவு ஆசான் பெரியார் சிந்தனைகள்.
- பக்கத்துக்கு பக்கம் அரிய தகவல்கள்

கருத்துக் கருவூலமாக மலர்ந்துள்ளது.

மலர் ஒன்றின் விலை ரூ.150/- மட்டுமே!

தொடர்புக்கு :

**தலைமைக் கழகம்**

**95 டாக்டர் நடேசன் சாலை, மயிலாப்பூர், சென்னை–600004.**

**பேசி: 044–2498 0745 கைபேசி : 9941613535**


# உச்சநீதிமன்றத்தின் மீது பழி போட்டு தப்பிக்கும், ஜெயலலிதா

'சூப்பர் ஸ்பெஷாலிட்டி' மருத்துவமனை இடஒதுக்கீடு குறித்து தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கை:

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்டு வரும் சூப்பர் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கான மருத்துவர் நியமனத்தில் இடஒதுக்கீடு பின்பற்றப்படாததற்கு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புதான் காரணம் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஆனால், உச்சநீதிமன்றம், இட ஒதுக்கீட்டை பின்பற்றுவது மத்திய அரசின் முடிவாகும் என்று திட்டவட்டமாகத் தனது தீர்ப்பில் தெரிவித்துவிட்டது.

எனவே, தமிழகத்தில் உச்சநீதிமன்றத் தீர்ப்புக் காரணமாகத்தான், இடஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை என்று ஜெயலலிதா கூறியிருக்கும் காரணம், மக்களை ஏமாற்றுவதற்கும், சமூக நீதியைக் குழிதோண்டி புதைப்பதற்குமான ஒன்றே தவிர வேறல்ல.

உச்சநீதிமன்றம் 18.7.2013 அன்று தீர்ப்பளித்த பிறகு, ஜூலை 31 ஆம் தேதி புதுவை ஜிப்மர் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரியில் 114 மருத்துவ அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பு வெளி வந்தது. அப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பைக் காரணம் காட்டி இடஒதுக்கீடு கிடையாது என்று மத்திய அரசு கூறவில்லை. இடஒதுக்கீட்டின்படி பிற்படுத்தப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் இடஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும் டெல்லி எய்ம்ஸ் மருத்துவக் கல்வி நிறுவனத்திலேயே இடஒதுக்கீடு தொடர்கிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக, சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், இடஒதுக்கீட்டைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தும்படி, மத்திய சுகாதாரத் துறை கூறியதன் அடிப்படையில் 148 உதவி மருத்துவப் பேராசிரியர் பணியிடங்கள் இடஒதுக்கீட்டைக் கடைப்பிடித்துத்தான் நிரப்பப்பட்டுள்ளன.

உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும், மத்திய அரசின் நிறுவனங்களில் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், தமிழக அரசு அதனை அமுல்படுத்தாது, உச்சநீதிமன்றத்தின் மீதும், மத்திய அரசின் மீதும் பழி போடுவது என்பது எத்தகைய மோசடி வித்தை என்பதை இங்குள்ள தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# என் ஒரே தலைவர் பெரியார் தான் : நடிகவேள் எம்.ஆர்.ராதா

***தமிழ்த் திரைப்பட உலகில் ஏராளமான திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதி புகழ் பெற்ற ஆரூர்தாஸ், 'தினத்தந்தி' நாளேட்டில் தனது கலை உலக அனுபவங்களை தொடராக எழுதி வருகிறார். அதில் நடிகவேள் எம்.ஆர். ராதாவுக்கும் தனக்கும் நிகழ்ந்த உரையாடலை (4.1.2014) பதிவு செய்துள்ளார். பெரியார் மீது நடிகவேள் எவ்வளவு உறுதியான பற்றுக் கொண்டிருந்தார் என்பதை நடிகவேளே விளக்கும் பகுதி இது.***

ஒரு காலத்துல நடிகர்கள் எல்லாரும் ஒரே குடும்பமா ஒண்ணா, தான் இருந்தோம். இடையில இந்த அரசியல் - கட்சி - அது இதுன்னு வந்து நடிகன்களைப் பிரிச்சி ஒற்றுமை இல்லாமல் ஆக்கித் தனித்தனியா பண்ணிடுச்சி.

எம்.கே. தியாகராஜ பாகவதரும், பி.யு.சின்னப்பாவும் சினிமாவுல ஓகோன்னு இருந்த அந்தக் காலத்துல அரசியலும் சினிமாவும் ஒண்ணுக்கொண்ணு சம்பந்தமே இல்லாம தனித்தனியா இருந்துச்சு. அவுங்கவுங்க அவுங்கவுங்க வேலையை பாத்தாங்க.

நாட்டை அரசியல்வாதிங்க கவனிச்சிட்டாங்க. கலையை நடிகருங்க, மத்தக் கலைஞருங்க பார்த்துக்கிட்டாங்க. அதனால்தான் அப்போ எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இருந்தது. எல்லாரும் அண்ணன் தம்பிகளாக ஒற்றுமையாக இருந்தோம்.

அந்த நிலைமை அடியோடு மாறி, இப்போ சினிமாவுக்குள்ளே அரசியலும், அரசியலுக்குள்ளே சினிமாவும் பூந்து ஒண்ணோட ஒண்ணா கலந்திடுச்சி. அதுல பழைய அண்ணன் தம்பிங்க உறவு, பந்த பாசமெல்லாம் அநியாயத்துக்குப் பாழாப் போயிடுச்சு.

இவன் இந்தக் கட்சியில் இருக்கிறான். அவன் அந்தக் கட்சியில் இருக்கிறான். இவனை அவனுக்கு ஆகாது. அவனை இவனுக்குப் பிடிக்காது. இப்படி சினிமாவை வச்சித்தான் நம்ம நாட்டு அரசியல்னு ஆயிடுச்சி.

ஆளுக்கொரு பக்கமாக சினிமாவுல பூந்து, அதை இதை எழுதி, மக்களை மயக்கி கட்சியை வளர்த்திட்டாங்க. இதுக்கு இடையில பெரியாரோட திராவிடர் கழகத்துக்குன்னு இருக்கிற ஒரே நடிகர் நான் மட்டும்தான். மத்த எழுத்தாளனுங்க, பேச்சாளனுங்க ஒட்டு மொத்தமா எல்லாரும் புதுக்கட்சிக்குப் போயிட்டானுங்க.

கணேசன் மட்டும் (சிவாஜி) காமராஜரோடு சேர்ந்திட்டான். சொல்லிக்கிறாப் போல கலைஞர்ங்க யாருமே இல்லாம இருந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜரும் இதான் சரியான சமயம் என்று கணேசனை சேர்த்துக்கிட்டாரு. உடனே கணேசன் கதர் வேட்டி கட்டி, கதர் சட்டை, கதர் துண்டு போட்டுக்கிட்டான். என்ன பிரயோஜனம்?

பெரியார் சும்மாவா சொன்னாரு? 'தமிழனுக்கு எதிரி தமிழன்தான்!' திராவிடக் கட்சி தோத்துப் போயிடுச்சின்னா, அதுக்கு தமிழனுங்கதான் காரணமாக இருப்பான்னு, இப்போ அரசியல்லே பூந்து பட்டம் பதவி மேல ஆசைப்பட்டு பல திராவிடனுங்க பெரியார் கொள்கைக்கு விரோதமாக கோவிலுக்குப் போயி சாமி கும்பிட ஆரம்பிச்சி, நெத்தியில விபூதி, குங்கும 'மார்க்' போட்டுக்கிறானுங்க.

பெரியார் பேசுன பேச்சு, இந்தத் தள்ளாத வயசுலேயும், ஊர் ஊரா சுத்தி மீட்டிங் போட்டு சொல்லிச் சொல்லி அவர் பட்டபாடெல்லாம் வீணாப் போயிடுச்சி. பட்டம், பதவி, பணம்னு அரசியல்வாதிங்க அலைய ஆரம்பிச்சிட்டானுங்க. இது எதுல போயி முடியும்னு தெரியல!

என்னைப் பொறுத்தவரைக்கும் ஒண்ணு மட்டும் உறுதி. என் உயிரையே விட்டாலும் விடுவேனே தவிர, பெரியாரை மட்டும் விடவே மாட்டேன். என் அறிவுக் கண்ணைத் திறந்து வச்சு, என்னை ஒரு மனுஷனாக்குனதே அவர்தான். அவர் மட்டும் இல்லேன்னா, படிப்பறிவே இல்லாத வெறும் நாடக நடிகனான இந்த ராதா, பக்கா ரவுடி ஆயிருப்பேன்.

பெரியார் மீட்டிங் எங்கே நடந்தாலும் தவறாமல் போவேன். மத்தவங்க மாதிரி இல்லாம, அவர் பேசுன பேச்சு மட்டும் எனக்குப் புதுசா இருந்துச்சு. அதைக் கேட்டுக் கேட்டுப் பிடிச்சுப் போயி, அப்பவே அவரை என் தலைவரா ஏத்துக்கிட்டேன். இந்த நிமிஷம் வரைக்கும், ஏன் நான் சாகிற வரைக்கும் தந்தை பெரியார்தான் என் ஒரே தலைவர். கேவலம் சல்லிக்காசுக்காக சந்தர்ப்பவாதியாக மாட்டேன்."

இப்படியெல்லாம் எம்.ஆர். ராதா என்னிடம் பேசி, அரசியல், சமூக, மற்றும் கலைத்துறைகளை அலசி ஆராயக்கூடிய 'இயற்கை அறிவு' உள்ளவராக ராதாண்ணன் விளங்கினார். முரட்டுக் குணமும் கொண்டிருந்த அவர், 'முள்ளில் ரோஜா'வாகவும் மணம் வீசினார் என்று எழுதியுள்ளார் ஆரூர்தாஸ்.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"


**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 23rd January 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2044 ஜனவரி 30, 2014 புரட்சி 13 முழக்கம் 03 விலை: ரூ.3.00


## தமிழக அரசைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டங்கள்

# இடஒதுக்கீட்டைப் புறக்கணிக்காதே!

‘தமிழக அரசே; இடஒதுக்கீட்டைப் புறந் தள்ளாதே!’ என்ற முழக்கத்தை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகம் ஜன.25 ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக மாற்றப் போவதாக அறிவித்தார் முதலமைச்சர் ஜெயலலிதா. அதற்கான மருத்துவர்கள் தேர்வுக்கான அரசு அறிவிப்பில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படாது என்று அறிவிக்கப்பட்டிருந்தது. மருத்துவர்கள் ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுவதால் இட ஒதுக்கீட்டைப் பின்பற்ற முடியாது என்றும், ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ மருத்துவ மனையில் இடஒதுக்கீடு பின்பற்றுவதை உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா விளக்கம் அளித்தார். எனவே ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர் தேர்வு முறையை ரத்து செய்யக் கோரியும், ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ என்ற பெயரை மாற்றி, இடஒதுக்கீட்டைப் பின்பற்றக் கோரியும் கழகம் ஆர்ப்பாட்டங்களில் வலியுறுத்தியது.

தமிழ்நாட்டில் ஆசிரியர் காலியிடங்களுக்கான தேர்வில் மத்திய ஆசிரியர் தேர்வாணையம் நிர்ணயித்த தகுதி மதிப்பெண் அளவை தமிழக அரசு குறைக்க விரும்பாததால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்கள் தகுதித் தேர்விலேயே வடிகட்டப்பட்டுவிட்டனர். இதனால், காலியாக உள்ள இடங்களுக்கேற்ப விண்ணப்பதாரர்கள் கிடைக்கவில்லை. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண் அளவை குறைத்துக் கொண்டு, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மேலும் அதிகமாக தகுதித் தேர்வு வழியாக தேர்ந்தெடுக்கப்படும் உரிமையை மாநில ஆட்சிகளுக்கு மத்திய தேர்வு வாரியம் வழங்கியிருந்தும் ஜெயலலிதா ஆட்சி அதை ஏற்கவில்லை. பல்வேறு மாநில ஆட்சிகள் இப்படி தகுதித் தேர்வுக்கான மதிப்பெண் அளவைக் குறைத்துள்ளன. இப்படி தொடர்ந்து தமிழ்நாட்டில் இடஒதுக்கீடுகளைப் புறந்தள்ளக் கூடிய போக்கைக் கண்டித்து, இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**சென்னையில்:** சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே ஜனவரி 25 ஆம் தேதி முற்பகல் 11.30 மணியளவில் ஆர்ப்பாட்டம் தொடங்கி, ஒரு மணி வரை நீடித்தது. ஆர்ப்பாட்டத்துக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசிய அவர்,

“சமூகநீதியின் தலைநகர் என்று வி.பி.சிங் அவர்களால் புகழப்பட்ட தமிழ்நாட்டில், இட ஒதுக்கீடு புறந்தள்ளப்படுவது மிகப் பெரும் அவலம். இந்த ஆபத்தை முறியடிக்க வேண்டும் என்றார். சட்டங்களின் தடைகளைத் தகர்த்து, இடஒதுக்கீடுகளை அமுல்படுத்துவதற்கான வழிமுறைகளைத் தேடி நிறைவேற்றப்பட்ட தமிழகத்தில் இடஒதுக்கீடுகளைக் கைவிடுவதற்கான வழிமுறைகளை ஜெயலலிதா ஆட்சி தேடிக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் ‘நேர்முகத் தேர்வு’ என்ற முறை இருந்தபோது, பின்தங்கிய சமூகப் பின்னணியில் வரும் மாணவர்களுக்கு தேர்வு மதிப்பெண்களோடு, சமூகப் பின்னணிக்கான மதிப்புகளை வழங்கி, அவர்களுக்கான வாய்ப்புக் கதவுகள் திறந்து விடப்பட்டன. இதை சூழ்ச்சிகரமாக முறியடிக்க, ராஜ கோபாலாச்சாரி முதல்வராக இருந்தபோது, நேர்முகத் தேர்வுக்கான மதிப்பெண்ணை குறைத்தார். தொடர்ந்து ஆட்சிக்கு வந்த காமராசர், அந்த மதிப்பெண் அளவை மீண்டும் உயர்த்தினார். பத்திரிகையாளர்கள் கேட்டபோது, எந்த காரணங்களுக்காக ராஜாஜி மதிப்பெண் எண்ணிக்கையைக் குறைத்தாரோ, அதே காரணங்களுக்காக அதிகரித்துள்ளதாகக் கூறினார். இதுதான் தமிழ்நாட்டின் வரலாறு.

69 சதவீத இடஒதுக்கீட்டுக்கு நீதிமன்றத்தால் நெருக்கடி வந்தபோது முதலமைச்சர் ஜெயலலிதா, அரசியல் சட்டத்தின் 31(சி) பிரிவின் கீழ், இட ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தார். இதன் மூலம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கும் உரிமை தடுக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனாலும், உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணை வந்தபோது, ஜெயலலிதா ஆட்சி 31(சி) பிரிவின் கீழ் 69 சதவீத இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வரப்பட்டதை உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்காமலேயே துரோகம் செய்தது. தமிழ்நாட்டில் சமூகநீதிக்கு எதிரான எந்த ஆட்சியும் மக்களால் தூக்கி எறியப்பட்டதே வரலாறு” என்று விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார்.

சமூகநீதிக்கான மருத்துவர் சங்கத்தின் அமைப்பாளர் மருத்துவர் ஜி.ஆர். இரவீந்தர்நாத், இது குறித்து விரிவான விளக்கங்களை முன் வைத்தார். தமிழக அரசு ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர் தேர்வை கைவிட வேண்டும் என்ற சரியான கோரிக்கையை திராவிடர் விடுதலைக் கழகம் முன் வைத்திருப்பதை அவர் பாராட்டினார். தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் விண்ணப்பதாரர்கள் மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்திருக்கத் தேவை இல்லை என்று குறிப்பிட்டிருப்பதால் பிற மாநிலத்திலிருந்து மருத்துவர்கள் தேர்வு செய்யப்படக்கூடிய வாய்ப்புகளையும் அரசு உருவாக்கியிருக்கிறது; இது தமிழ்நாட்டுக்கு செய்யும் துரோகம்.

‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’க்கான மருத்துவ உயர்கல்வியில் இடஒதுக்கீடே வழங்கக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு, 2003 இல் தீர்ப்பு வழங்கியது. இதனால் தகுதி போய்விடும் என்று உச்சநீதிமன்றம் கூறியது. மருத்துவர்கள் நியமனத்தில் இடஒதுக்கீடு பின்பற்றப்படும்போது, ஏன், படிப்பில் தரக்கூடாது? பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள், அருந்ததியினருக்கு தனி இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டாலும், அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மதிப்பெண் அளவை எட்ட முடியாத காரணத்தால் இந்த சமூகத்தினருக்கான இடங்கள் பூர்த்தி செய்யப்படுவது இல்லை. அருந்ததியினர், முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு குறைந்தபட்ச மதிப்பெண்ணை குறைத்தால் தான், அவர்கள் உள்ளே நுழைய முடியும். வாளியை ஓட்டையாக வைத்துக் கொண்டு, அதில் தண்ணீர் நிரப்புவதுபோல, அரசின் செயல்பாடுகள் இருக்கின்றன. அதே நேரத்தில் மத்திய அரசு உருவாக்கியுள்ள டி.என்.பி. என்ற அமைப்பின் வழியாக குறைந்தபட்ச மதிப்பெண் நிர்ணயம் இல்லாமலே குறுக்கு வழியில் மாணவர்களை சேர்க்கிறார்கள்” என்று சுட்டிக்காட்டினார். டாக்டர் இரவீந்திரநாத், தனியார் மருத்துவமனையைவிட அரசு மருத்துவமனை மருத்துவர்கள் மிகச் சிறப்பான மருத்துவ சாதனைகளை செய்து வருவதை குறிப்பிட்ட அவர், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை முதன்முதலில் செய்ததே ஸ்டான்லி அரசு மருத்துவமனையில்தான் என்றார். அரசு மருத்துவமனையிலிருந்தே மூத்த அனுபவம் நிறைந்த மருத்துவர்களை ஏன், இந்த ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ மருத்துவமனையில் நியமிக்கக் கூடாது என்ற கேள்வியை எழுப்பினார்.

தி.மு.க. 2004 தேர்தல் அறிக்கையில் ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர் நியமனங்களை செய்ய மாட்டோம் என்று கூறியது. பதவிக்கு வந்தவுடன் அதை அமுல்படுத்தவும் செய்தது. அதற்காக நன்றி தெரிவித்தோம். ஆனால், அதற்குப் பிறகு எய்ட்ஸ் நோய் ஒழிப்பு, காசநோய் ஒழிப்புத் திட்டங்களுக்கு மருத்துவர்களை ஒப்பந்த அடிப்படையில்தான் தி.மு.க. ஆட்சியும் தேர்வு செய்தது என்றார், மருத்துவர் ரவீந்தர் நாத்.

**தியாகு :** தமிழ்த் தேச விடுதலை இயக்கத்தின் சார்பில் பேசிய தியாகு, “சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் பங்கேற்பை உறுதி செய்வதுதான் சமூக நீதி. சோவியத் ஒன்றியத்தில் லெனின், ஸ்டாலின் போன்ற தலைவர்கள், இதைத்தான் செய்தார்கள். அமெரிக்காவின் மைக்ரோ சாப்ட் நிறுவன அதிபர் பில்கேட்ஸ், தனது நிறுவனத்தின் வெற்றிக்கு கறுப்பர்களுக்கும் பெண்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கியதே காரணம்” என்று கூறினார். இப்போது தலைமைச் செயலகம் அமைந்துள்ள இடம், இந்திய இராணுவத்துக்கு சொந்தமானது. இந்திய இராணுவத்தின் அனுமதி பெற்றுத்தான் கோட்டையில் புல்லைக்கூட வெட்ட வேண்டும் என்றும் முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதி சொன்னார். தமிழக அரசுக்கு சொந்தமான ஒரு இடத்தில் தலைமைச் செயலகத்தை உருவாக்கினார், முதல்வர் ஜெயலலிதா. ஆனால், இராணுவத்துக்குரிய இடத்திலேயே தலைமைச் செயலகத்தைத் தொடர விரும்புகிறார்.


இடஒதுக்கீட்டுக்கான முழு உரிமை மாநில அரசுகளுக்கே இருத்தல் வேண்டும். மத்திய அரசு, மாநில அரசின் இடஒதுக்கீடு அடிப்படையில் செயல்பட வேண்டும். ஆனால், உயர் தனித்திறன் மருத்துவமனைகளில் இடஒதுக்கீடு கொள்கைகளை மத்திய அரசு உருவாக்குவதும் உச்சநீதிமன்றம், இட ஒதுக்கீட்டை மறுப்பதும் கண்டிக்கத்தக்கது. இட ஒதுக்கீடே பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டும் என்று ஒரு காலத்தில் பேசியவர்தான் ஜெயலலிதா. பிறகு தமிழ்நாட்டில் இது எடுபடாது என்று தனது கருத்தை மாற்றிக் கொண்டார், என்றார் தியாகு.

அருண பாரதி (தமிழ்த் தேச பொதுவுடைமைக் கட்சி), அருண் சோரி (தமிழ்நாடு மக்கள் கட்சி), சைதை சிவா (தமிழக வாழ்வுரிமைக் கட்சி), வழக்கறிஞர் அருண், வழக்கறிஞர் திருமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கூடங்குளம் போராட்டத்தில் போடப்பட்ட பொய் வழக்குகளை திரும்பப் பெற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியது. மக்கள் நலப் பணியாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியது. இந்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளை மதிக்காத ஜெயலலிதா, இந்த மருத்துவமனையில் இடஒதுக்கீடு செய்வதற்கு மட்டும் உச்சநீதிமன்றத் தீர்ப்பை எடுத்துக் காட்டுகிறார் என்ற முரண்பாட்டை சுட்டிக் காட்டினார் வழக்கறிஞர் அருண். பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டு ஆணையை முதன்முதலாக கொண்டுவந்தவர் முதல்வராக இருந்த ஓமந்தூர்

(4 ஆம் பக்கம்)

## சேலம் சிறையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி: தலைவர்கள், வழக்கறிஞர்கள் சந்தித்தனர்



தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, சேலம் சிறையில் நவம்பர் 2 ஆம் தேதி முதல் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், 3 தோழர்களும் அடைக்கப்பட்டுள்ளனர். சென்னை புழல் சிறையில் அக்.30 ஆம் தேதி முதல் கழகத் தோழர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். வழக்கு விசாரணை பிப்.3 ஆம் தேதி உயர்நீதிமன்றத்தில் வரவிருக்கிறது.

சேலம் சிறையில் தோழர் கொளத்தூர் மணியை முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி, அவரது துணைவர் ஜெகதீசன், தொல். திருமாவளவன், பழ. நெடுமாறன், மணியரசன், பி.யு.சி.எல், தமிழ் மாநில செயலாளர் பால முருகன், துணைத் தலைவர் கண. குறிஞ்சி, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத் தோழர் நிலவன், வழக்கறிஞர் அங்கயற்கன்னி (கயல்), வழக்கறிஞர் ரத்தினம், ரஜினி, அரிபாபு உள்ளிட்டத் தோழர்கள் சிறையில் சந்தித்தனர்.

**தலையங்கம்**

# தூக்குத் தண்டனை ஒழிப்பில் மேலும் ஒரு மைல் கல்!

*தூக்குத் தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை உலகம் முழுதும் வலிமைப் பெற்றுவரும் சூழலில் உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு நம்பிக்கை ஒளியைத் தருகிறது. கருணை மனுவுக்கு விண்ணப்பித்து நீண்டகாலம் கிடப்பில் போடப்பட்டுக் கிடந்த 15 தூக்குத் தண்டனை கைதிகளின் தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனையாகக் குறைத்து உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது. மனித உரிமை வரலாற்றில் ஒரு மைல் கல் என்றே சொல்ல வேண்டும். தலைமை நீதிபதி பி.சதாசிவம், நீதிபதிகள் ரஞ்சன் கோகாய், சிவகீர்த்திசிங் ஆகியோரடங்கிய அமர்வு வழங்கியுள்ள இந்த தீர்ப்பு, தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதில் நிலவிய குழப்பங்களை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.*

*வீரப்பனுக்கு உதவியதாகக் குற்றம்சாட்டப்பட்டு, தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியிருந்த சைமன், மாதையன், பிலவேந்திரன், ஞானப்பிரகாசம் ஆகியோர், இந்தத் தீர்ப்பின் வழியாக தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது ஆறுதலைத் தருகிறது. 8 ஆண்டுகள் 6 மாத சிறைவாசத்துக்குப் பிறகு, 'தடா' நீதிமன்றத்தில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, அத்தண்டயைக் குறைக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தவர்கள் இவர்கள். உச்சநீதிமன்றம் தண்டனையை நீக்கலாம் அல்லது உறுதிப்படுத்தலாம். ஆனால், வழமைக்கு மாறாக அரசு தரப்பில் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்காமலே உச்சநீதிமன்றமே தன்னிச்சையாக தலையிட்டு தூக்கு தண்டனை விதித்தது!*

*நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் வலிமையான ஆதாரங்கள் இன்றி, உளவுத் துறையால் பொய்யாக வழக்கில் சேர்க்கப்பட்ட சரணடைந்த போராளி அப்சல்குரு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு 8 ஆண்டுகாலத்துக்குப் பிறகு தூக்கிலிடப்பட்டார். கருணை மனுவுக்கு விண்ணப்பித்த ஒரு கைதி, இரண்டு ஆண்டுகாலம் காத்திருந்தாலே தூக்குத் தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனையாக குறைத்திட வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஓ.சின்னப்ப ரெட்டி, ஆர்.பி. மிஸ்ரா, 1983இல் அளித்த தீர்ப்பை (டி.வி.வேதீஸ்வரன் எதிர் தமிழ்நாடு அரசு) புறந்தள்ளி விட்டு, இந்தக் கருத்து தீவிரவாதிகளுக்கு பொருந்தாது என்று உச்சநீதிமன்றம் கூறியது. பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன சக்திகள், அப்சல் குருவை தூக்கிலிட்டே தீரவேண்டும் என்று தொடர்ந்து இயக்கங்களை நடத்தின. அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் அமைச்சரவையும் பச்சைக்கொடி காட்டியது. அதிலும் குறிப்பாக உள்துறை அமைச்சர் ஷிண்டே தூக்கிலிடுவதில் உறுதியாக இருந்தார். குடும்ப உறுப்பினருக்கு முறையான அறிவிப்பு தராமல், மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதையும் கருத்தில் கொள்ளாமல், 'இந்திய மக்களின் கூட்டு மனசாட்சியை'த் திருப்திப்படுத்துவதற்காக நீதிமன்றம் அளித்த தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.*

*ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன சக்திகள், அப்சல்குருவை தூக்கிலிடத் துடித்ததுபோல், காங்கிரஸ் ஆட்சி, ராஜிவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, 23 ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பிறகு, பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை தூக்கிலிடத்துடித்தது. தூக்கில் போட நாளும் குறிக்கப்பட்டது. இப்படி விருப்பு வெறுப்பின் அடிப்படையில் தூக்குத் தண்டனையைப் பயன்படுத்திக் கொள்ள முனைந்த அரசியல் மதவாத சக்திகளுக்கு கடிவாளம் போட்டிருக்கிறது, இப்போது வெளிவந்துள்ள உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு.*

*உச்சநீதிமன்றம் தூக்கிலிடப்படுவதற்கான வழிகாட்டு நெறி முறைகளை வகுத்துத் தந்திருக்கிறது.*

1. *கருணை மனுவை குடியரசுத் தலைவர் தள்ளுபடி செய்வதற்கு முன்பே, தூக்குத் தண்டனை கைதிகளை தனிமை சிறையில் அடைப்பது சட்டவிரோதமானது.*
2. *கருணை மனு தள்ளுபடி செய்யப்பட்டதற்குப் பிறகு, தூக்கு கைதிக்கு சட்ட உதவிகள் வழங்குவது குறித்து சிறை விதிகளில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒரு கைதிக்கு கடைசி மூச்சு இருக்கும் வரை உயிர் வாழும் உரிமை அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையாகும். எனவே, கருணை மனு தள்ளுபடி செய்யப்பட்டப் பிறகும், ஒரு கைதிக்கு கிடைக்க வேண்டிய சட்ட உதவிகளை கிடைக்கச் செய்ய வேண்டும்.*
3. *வழக்கு தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகள் வழக்கு ஆவணங்களை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவில் சேகரித்து, உள்துறை அமைச்சகத்துக்கு மாநில அரசு அனுப்பி வைக்க வேண்டும். உள்துறை அமைச்சகம் குடியரசுத் தலைவருக்கு கருணை மனுவை அனுப்பிய பிறகு, குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து எந்தத் தகவலும் வராவிடில், உள்துறை அமைச்சகம் நினைவூட்டுதலை செய்து கொண்டிருக்க வேண்டும்.*
4. *ஒரு ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ, கருணை மீது முடிவெடுக்க வேண்டியது, அரசியல் சட்ட ரீதியாக நிறைவேற்ற வேண்டிய கடமையே தவிர, அவர்களின் விருப்பப்படி செயல்படக் கூடிய ஒன்றல்ல.*
5. *கருணை மனு தள்ளுபடி செய்யப்பட்டவுடன், அத்தகவல் கைதியின் குடும்பத்துக்கு எழுத்துப்பூர்வமாக கிடைக்கச் செய்ய வேண்டும். அதற்குத் தேவையான தகவல் தொடர்பு வசதிகளைப் பயன்படுத்திட வேண்டும்.*
6. *தூக்கிலிடப்படுவதற்கு 14 நாள்களுக்கு முன்பு தேதி குறிக்கப்பட வேண்டும். அப்போதுதான் கைதி மன ரீதியாக தன்னை தயார்படுத்தி அமைதியாக்கிக் கொள்ள முடியும். குடும்ப உறுப்பினர்களை கடைசியாக சந்திக்க அனுமதிக்க வேண்டும். குடும்பத்தினருக்கு தகவல் போய்ச் சேர்ந்ததா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டியது சிறை அதிகாரியின் பொறுப்பு.*
7. *தூக்கிலிடப்படும்போது ஒரு கைதி சரியான மனநிலையில் இல்லாதிருந்தால், சிறை அதிகாரி தூக்கிலிடுவதை நிறுத்தி, மருத்துவக் குழுவின் முன் கைதியை நிறுத்தி சோதனைக்கும் ஆய்வுக்கும் உள்ளாக்க வேண்டும்.*
8. *தூக்குக் கொட்டடியில் நிறுத்தப்படும் கைதிகளில் பெரும்பாலோர் வறிய நிலையில் வாழும் ஏழைகள் தான். நீதிமன்றத் தீர்ப்புகள் உள்ளிட்ட ஆவணங்களைப் பெற முடியாத நிலையில் உள்ளவர்கள். அவர்களுக்கு ஒரு வாரத்தில் நீதிமன்ற ஆவணங்களைக் கிடைக்கச் செய்ய வேண்டியது சிறை அதிகாரிகளின் பொறுப்பு. குடும்பத்துடனான சந்திப்புக் குறித்து சிறை விதிகள் ஒரே சீராக இல்லை; சில மாநிலங்களுக்கான சிறை விதிகளில் இது பற்றிய குறிப்புகளே இல்லை. மனித நேயத்துக்கும் சட்டத்துக்கும் உகந்த சிறைச்சாலை விதிகள் அவசியமாகும்.*

*– என்று உச்சநீதிமன்றம் விதிமுறைகளை வகுத்துத் தந்துள்ளது. கருணை மனு தள்ளுபடி செய்யப்பட்டப் பிறகு நீண்டகாலம் தூக்கிலிடப்படாத கைதியின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்திய உச்சநீதிமன்றம், 'பயங்கரவாதிகள்', 'பெரும் எண்ணிக்கையில் கொலை செய்தவர்கள்' என்ற அடிப்படையில் பிரித்துப் பார்க்கவும் கூடாது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டது. (அப்சல் குருவுக்கு உச்சநீதிமன்றம் தூக்குத் தண்டனையை உறுதி செயதது – அவர் ஒரு பயங்கரவாதி என்ற அடிப்படையிலும், 'காலதாமதம்' என்ற வாதம் – பயங்கரவாதிக்குப் பொருந்தாது என்ற அடிப்படையிலும்தான்)*

*கருணை மனு மீது ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ முடிவெடுத்துவிட்டால், பிறகு நீதிமன்றம் தலையிடவே முடியாது என்ற கருத்தை ஏற்காத உச்சநீதிமன்றம், அதில் தலையிட்டு பரிசீலிக்க, நீதிமன்றத்துக்கு உரிமை உண்டு என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது.*

*கொலை செய்தால் தூக்கு மட்டுமே தண்டனை என்று 1860 இல் இந்திய தண்டனைச் சட்டம் கூறியது. அதற்குப் பிறகு, 1956 இல் கொலை குற்றங்களுக்கு மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கலாம் என்று நீதிமன்றம் கூறியது. அதன் பிறகு 1973இல் கொலைக் குற்றங்களுக்கு ஆயுள் தண்டனைதான் வழங்க வேண்டும்; விதிவிலக்காக மரண தண்டனை வழங்கலாம் என்று நீதிமன்றம் கூறியது. அதற்குப் பிறகு, 1980ல் பச்சான்சிங் வழக்கில், அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டும், அதுவும் அதன் சிறப்புத் தன்மையைப் பதிவு செய்துவிட்டுத்தான் மரணதண்டனை வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற முழு அமர்வு தீர்ப்பளித்தது. அதன் நீட்சியாக, கடந்த ஜனவரி 21 ஆம் தேதி கருணை மனுக்கள் நீண்டகால கிடப்பில் போடப்பட்டால், தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக்கிட வேண்டும் என்று உறுதிப்படுத்தி, தூக்குத் தண்டனை நிறைவேற்றம் குறித்த வழிகாட்டு முறைகளையும் தெளிவாக உச்சநீதிமன்றம் வகுத்துள்ளது. தூக்குத் தண்டனை ஒழிப்பு நோக்கிய பயணத்தின் படிநிலை வளர்ச்சி நிலைகளாகவே இந்தத் தீர்ப்பையும் கருதி வரவேற்கிறோம்.*

## வினாக்கள்... விடைகள்...!

+ *மனிதர்களைக் கொன்ற புலியை வனத்துறையினர் சுட்டுக் கொன்றனர்.* **– செய்தி**

*அப்பாடா! தமிழ்நாட்டில் உண்மையான ஒரு 'என்கவுண்டர்' இப்போதுதான் நடந்திருக்குது.*

+ *தி.மு.க.விலிருந்து அழகிரி நீக்கம்; தி.க. தலைவர் கி.வீரமணி சதி; அழகிரி தாக்கு.* **– செய்தி**

*இது அபாண்டம்! உண்மையில் கி.வீரமணிக்கு இதில் தொடர்பிருந்தால் "அழகிரியுடன் – கழத்தினரோ, கழகக் குடும்பத்தினரோ எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது" என்ற வாசகம் – அறிக்கையில் கட்டாயம் இடம் பெற்றிருக்கும்!*

+ *காஞ்சி ஜெயேந்திரன், தில்லை நடராசன் கோயிலின் உள் பிரகாரத்துக்குள்ளே காரில் வந்து தரிசனம்; கோயில் வரலாற்றில் இப்படி நடப்பது இதுவே முதல் முறை.* **– 'தமிழ் இந்து' செய்தி**

*அடுத்த முறை தரிசனத்துக்கு 'நட ராஜனையே' காரில் ஏற்றி காஞ்சி புரத்திற்கு அனுப்புவாங்க பாருங்க! நிர்வாக அதிகாரம் முழுமை யாக தீட்சதர்களிடமே வந்துடுச்சே!*

+ *போக்குவரத்துக்கு இடையூறு! சிவாஜி சிலையை அகற்ற உயர்நீதிமன்றம் உத்தரவு.* **– செய்தி**

*அதே இடத்தில் ஒரு கோயிலைக் கட்டி, அதில் சிவாஜி சிலையை வைத்திருந் தால், இப்படி ஒரு விபரீதம் நடந் திருக்குமா? இராமகோபாலனே தெருவில் வந்து போராடியிருப்பாரே!*

+ *பணத்துக்காக வாக்குகளை விற்கக் கூடாது!* **– தேர்தல் ஆணையம்**

*சரி; அப்ப அமெரிக்க டாலராகவாவது தரச் சொல்லுங்கள்!*

+ *நீங்கள் எனக்கு 60 மாதங்களைக் கொடுங்கள்; நான் உங்களின் வாழ்வை மாற்றிக் காட்டுகிறேன்.* **– மோடி உ.பி.யில் பேச்சு**

*5 வருடம் ஆட்சியிலிருந்த வாஜ்பாயை இப்படி எல்லாம் மோடி அவமானப் படுத்தலாமா? என்னங்க நியாயம்?*

+ *கச்சத் தீவில் மீன் பிடிக்க தமிழக மீனவர் களுக்கு உரிமையே கிடையாது.* **– மத்திய அரசு உயர்நீதிமன்றத்தில் மனு**

*போச்சு! மீனவர் உரிமையும் போச்சு; மீனவர்களுக்கு உண்மையில் பாடுபடு வது காங்கிரஸ்தான் என்று பேசி வந்த தமிழக காங்கிரஸ் தலைவர்களின் பேச்சுரிமையும் சேர்ந்து போச்சு!*

+ *உ.பி.யை குஜராத்போல் மாற்ற முலாயம் சிங்கால் முடியாது. அதைச் செய்ய 56 அங்குல மார்பு உள்ளவர்களால்தான் முடியும்.* **– மோடி பேச்சு**

*விதியை தளர்த்துங்க மோடி ஜி; 55 அல்லது 54 அங்குலம் இருந்தாலும் பரவா யில்லைன்னு கொஞ்சம் சலுகைக் காட்டக் கூடாதா? உங்களுக்குத் தெரியாத அரசியலா?*

+ *குடியரசு தினவிழா; அரசு அலுவலகங் களில் உற்சாகக் கொண்டாட்டம்.* **– 'தமிழ் இந்து' செய்தி**

*அரசு அலுவலகத்துல தான் கொண்டாடு வாங்க; மக்களா கொண்டாடப் போறாங்க?*

## பெரியார் பெருந்தொண்டர் கொளத்தூர் குமாரசாமி முடிவெய்தினார்

*பெரியார் பெருந்தொண்டரும், திராவிடர் விடுதலைக் கழகத் தோழருமான கொளத்தூர் குமாரசாமி, 21.1.2014 செவ்வாய்க் கிழமை அன்று முடிவெய்தினார். அன்று மாலை 3 மணி அளவில் உடல் அடக்கம் செய்யப் பட்டது. கழகத் தோழர்கள் உறவினர்கள் பங்கேற்றனர்.*

# 125 ஆவது பிறந்த நாள் நினைவாக (2)

# சர். ஏ.டி. பன்னீர்செல்வம் சென்ற விமானம் கடலில் வீழ்ந்தது!

*125 ஆவது பிறந்த நாள் நினைவாக சர். ஏ.டி. பன்னீர் செல்வம் குறித்த வாழ்க்கைக் குறிப்பின் கடந்த வாரத் தொடர்ச்சி.*

திருவையாறு கல்லூரியில் சமஸ்கிருதம் மட்டுமே கற்றுத் தரப்பட்டதை மாற்றி தமிழ்க் கற்பிக்கவும் ஏற்பாடு செய்த சர். செல்வத்துக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியது. எதிர்ப்பு எதனையும் சர்.செல்வம் பொருட் படுத்தவில்லை. விடுதியிலும் தமிழ் படிப்பவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டன. மேலும் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவதற்கு வழி வகைகள் செய்யப் பட்டன. 'சமஸ்கிருத காலேஜ்' எனும் பெயர் 'ராஜாஸ் காலேஜ்' என்றும், 'அரசர் கல்லூரி' என்றும் அழைக்கப்படலாயிற்று. அதாவது பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள ராஜா சத்திரங்களில் பார்ப்பனர்களுக்கு மட்டும் உணவளிக்கப்பட்டு வந்தது. அதனை மாற்றி சர். செல்வம் எல்லா வகுப்பினருக்கும் உணவளிக்கும்படி ஏற்பாடு செய்தார்.

சர். செல்வம், மாவட்டக் கழகக் கல்வித் துறையை நன்றாக முடுக்கி விட்டார். திருவையாறு, உரத்தநாடு, ராஜாமடம் போன்ற இடங்களில் முதற்கட்டக் கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. திருவாரூர், பாபநாசம் போன்ற ஊர்களில் உள்ள பள்ளிகளை மாவட்டக் கழகம் (ஜில்லா போர்டு) தனது நிர்வாகத்தில் இணைத்துக் கொண்டது. முத்துப்பேட்டை, கூத்தாநல்லூர் ஆகிய ஊர்களில் நடுநிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. கல்வி நீரோடை தங்கு தடையின்றிப் பாய்ச்சப்பட்டது.

சர். செல்வம், தஞ்சையில் ஆதி திராவிடர்களுக்காக ஒரு விடுதி ஏற்படுத்தினார். இப்போதும் அவ்விடுதி இயங்கி வருகிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் உத்தியோக நியமனங்களில் ஒவ்வொரு வகுப்பினருக்கும் தாராளமாகப் பங்கு கிடைக்கும்படி செய்து வந்தார்.

சர். செல்வம், மாவட்டக் கழகத் தலைவராகப் பதவி வகித்ததற்குப் பிறகு, தஞ்சைக் கூட்டுறவு வங்கியின் தலைவராகவும், 1930களில் சில ஆண்டுகள் அரசு வழக்கறிஞராகவும் பொறுப்பில் இருந்தார்.

சர். பன்னீர்செல்வம், தொடக்கம் முதல் இறுதி வரை பார்ப்பனரல்லாத மக்களுக்கு உழைத்த பெருந்தலைவர் ஆவார். அதனால்தான், திராவிடர் இயக்கத் தோழர்கள் அவர்கள் இல்லங்களிலே பிறக்கும் குழந்தைகளுக்குப் பன்னீர்செல்வம் என்று பெயர் வைத்து மகிழ்ந்தார்கள். கலைஞர் மு. கருணாநிதி, திரைக்கதை, உரையாடல் அமைத்த 'பராசக்தி' திரைப்படத்தில் கல்யாணிக்குப் பிறக்கும் குழந்தைக்கு 'பன்னீர்செல்வம்' என்றே பெயரிடப்படுகிறது. சர். செல்வம் அவர்களின் தன்னலம் கருதாப் பணிகளுக்குக் கிடைத்த வரவேற்புகளே அவை.

அது மட்டுமன்று, செங்கற்பட்டில் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மாநாட்டில் (1929) இளைஞர் மாநாட்டிற்கு சர். செல்வம் தலைமை வகித்துப் பேசினார்.

சர். செல்வம் அவர்கள், கத்தோலிக்க மதத்தில் பற்றுடையவராக வாழ்ந்தார். கத்தோலிக்க கோயில்களில் வழிபாட்டுக்கு வருகின்றவர்களிடத்திலே உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற பாகுபாட்டினைக் காட்டுவதை அறவே அவர் வெறுத்தார். இதற்காகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சமத்துவம் வழங்க வேண்டிக் கோயில் மதக் குருமார்களிடம் அவர் வாதாடினார். தாழ்த்தப்பட்டவர்களை ஆதரித்து அவர்கள் பக்கமே சர். செல்வம் நின்றார். அதுமட்டுமல்லாமல், கிறித்துவ மதத்தில் சாதி வித்தியாசம் பாராட்டுவதை, அம்மதத்தின் அடிப்படைக் கொள்கைக்கே விரோதம் என அவர் கூறி வந்தார்.

சுயமரியாதை இயக்கத்தின் சமூகச் சீர்திருத்தக் கொள்கையைச் - சமய சீர்திருத்தக் கொள்கையைத் - தமது கொள்கையாக இவர்வரித்துக் கொண்டார். அதனால், கிறித்துவ மாநாடுகளில் பங்கு கொண்டு சமத்துவக் கொள்கையை வற்புறுத்தி வந்தார். இவரது பேச்சுக் கும், செயற்பாடுகளுக்கும் அனைத்து மட்டத்திலும் நல்ல வரவேற்பு இருந்தது.



முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் முன்னின்று நடத்திய முதல் தமிழர் மாநாடு 1937 டிசம்பரில் திருச்சியில் நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு வழக்கறிஞர் கா.சு.பிள்ளை தலைமை தாங்கினார். செந்தமிழ்ப் புரவலர் த.வே.உமா மகேசுவரன் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். நாவலர் சோமசுந்தர பாரதியார் வரவேற்புரை நிகழ்த்தினார். ஈ.வெ.இராமசாமிப் பெரியார் சிறப்புரையாற்றினார். கட்டாய இந்தியை எதிர்த்துப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மாநாட்டில்தான், 'தமிழ்நாடு தனியாகப் பிரிக்கப்பட வேண்டும்' என்கிற தீர்மானம் முதன்முதலில் நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாடு திருச்சியில் கூட்ட ஏற்பாடுகள் நடந்த சமயம், சர். செல்வம் காலில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு செல்வபுரத்தில் தங்கியிருந்தார். சற்று உடல்நலக் குறைவுடனேயே இம்மாநாட்டிற்கு அவர் நொண்டிக் கொண்டே வந்தார் என அவரைப் பற்றிய பதிவுகள் கூறுகின்றன.

இதற்கு அடுத்த ஆண்டு - அதாவது 27.12.1938இல் நடைபெற்ற தமிழர் மாநாட்டிற்கு சர். செல்வம் தலைமை தாங்கி அரியதொரு உரையை நிகழ்த்தினார். இவ்வுரை அனைவரையும் கவர்ந்தது.

சர். செல்வத்தின் குரல் நாட்டுப் பிரிவினை இயக்கமாக வடிவெடுத்து, அதுவே பின்னாளில் 'திராவிட நாடு திராவிடருக்கே' என வளர்ச்சியடைந்தது. முதலாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது சர். செல்வம், தந்தை பெரியாருக்குப் பெருந்துணையாக இருந்தார். பெரியார் பெல்லாரிச் சிறையில் அடைக்கப்பட்டபோது சென்று பார்த்தார். சட்டமன்றத்தில் அடிக்கடி பெரியாரைப் பற்றிக் கேள்விகள் கேட்டார்.

முதலாவது இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாகப் போராட்ட வீரர்களுக்குக் கடுந் தண்டனைகள் வழங்கப்பட்டன. இக்கொடுமையை எதிர்த்துச் சட்டமன்றத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சட்டமன்றத்தில் சர். ஏ.டி. பன்னீர்செல்வம், ராஜா சர். முத்தையா செட்டியார், திவான்பகதூர் அப்பாதுரை பிள்ளை ஆகிய எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் முதலமைச்சர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாருக்கும் கடும் வாக்குவாதம் நடைபெற்றது.

சர். செல்வத்திற்கு 1929 ஆம் ஆண்டு இராவ்பகதூர் பட்டம் வழங்கப்பட்டது. 1930-31 ஆம் ஆண்டுகளில் இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டிற்குச் சர். செல்வம் நீதிக்கட்சி மற்றும் இந்திய கிறித்தவர்களின் சார்பில் சென்றார்.

1930 முதல் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். சட்டமன்றத்தில் முக்கியத் தீர்மானங்கள் வருகிறபோதும், வரவு செலவுத் திட்டத்தின் போதும், சர். செல்வத்தின் பேச்சு அரசின் கவனத்தைக் கவரக்கூடியதாக இருக்கும். சர். முகமது உஸ்மான், உள்நாட்டு அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகியதும், சர். செல்வம் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். செல்வத்திற்கு எதிராக காங்கிரஸ்காரர்கள் ஜான் ஜோசப் என்வரைப் பரிந்துரைத்தனர். சர். செல்வத்தைத் தோற்கடிக்கப் பலமான முயற்சிகள் அனைத்தும் பலனளிக்காமல் ஆகிவிட்டன.

சர். செல்வம், காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் வெற்றி பெற்றுப் பதவியேற்றுக் கொள்ளாமல் சில நிபந்தனைகளைக் கேட்டுக் கொண்டிருந்த இடைக் காலத்தில் ஏற்பட்ட சர். கே.வி.ரெட்டி அமைச்சரவையில் மூன்றரை மாதம் அமைச்சராக இருந்தார்.

சர். செல்வம், இந்தியா மந்திரியின் ஆலோசனையாளராக பதவியை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு 1940 பிப்ரவரி 25இல் தமது சொந்த ஊரான செல்வபுரத்திலிருந்து சென்னைக்குப் பயணமானார்.

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து ரெயில் கிளம்பியபோது இருந்த சூழ்நிலையை, "நகரத் தூதன்" ஆசிரியர் மணவை திருமலைசாமி குறிப்பிடுகையில், "விற்குடி ஸ்டேஷனின் சம்பவம் இரும்பு நெஞ்சையும் இளக்கிற்று. செல்வம் செல்லும் வண்டியைச் சுற்றிச் சூழ்ந்து நின்றனர் தமிழர் பலர்! பெரியார் நிற்கிறார்; செல்வன் ஜார்ஜும் (சர். செல்வம் அவர்களின் மூத்த மகன் - இவர் தற்போது செல்வபுரத்தில் வாழ்கிறார்) நிற்கிறார். அவரது ஆத்ம தோழர் சாமியப்பாவும் அருகில் நிற்கிறார். எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டார் சர். பன்னீர்செல்வம். வண்டியில் ஏறி வாசற்படியில் நின்றார்; பார்த்தார்; புத்திரனை பரபரப்போடு இறங்கி இரு கரங்களாலும், செல்வனைச் சேர்த்து அணைத்து உச்சியிலும் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டுவிட்டுப் பெரியாரை நோக்கினார்... பெரியாரும் செல்வமும் ஒருவருக்கொருவர் பேச முடியாது தத்தளித்தனர்.

இவ்வாறு கண்ணீர் மழைக்கிடையே சர். செல்வம் பம்பாய் சென்றார். அங்கிருந்து விமானத்தில் பறந்து கராச்சி சென்றார். வைசிராய் அனுப்பி வைத்திருந்த விமானம் சர். செல்வத்திற்காகக் கராச்சியில் காத்துக் கிடந்தது.

1940 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள் அதிகாலை 4.30 மணிக்கு 'ஹனிபால்' என்ற விமானம் சர். செல்வத்தை ஏற்றிக் கொண்டு கிளம்பியது.

ஆனால், அன்று மாலையே பத்திரிகைகளில் 'சர். பன்னீர்செல்வம் சென்ற விமானம் எங்கே?' எனும் தலைப்பு உண்மைத் தமிழர்களின் நெஞ்சத்தைத் துணுக்குறச் செய்தது. அவருடன் சென்ற மூன்று இராணுவ அதிகாரிகள், விமானத்தை நடத்திச் சென்ற விமான ஓட்டிகள் உட்பட 'ஓமான் கடலிலே' மூழ்கி இருக்க வேண்டுமென அரசு தீர்மானித்தது. தமிழர்கள் கண்ணீர்க் கடலில் மூழ்கினர்.

**நன்றி: க. திருநாவுக்கரசு தொகுத்து திராவிட 'இயக்க வேர்கள்' நூலிலிருந்து**

## கோவை புறநகர்ப் பகுதியி மக்க சந்திப்பு இயக்கத்தி தோழர்க

ஒவ்வொருவரிடமும் ரூ.10 நன்கொடை திரட்டும் மக்கள் சந்திப்புத் திட்டத்தை கோவை புறநகர் மாவட்டத்தில் தோழர்கள் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். புறநகர் மாவட்ட துணைத் தலைவர், கிணத்துக்கடவு நா.வே.நிர்மல் குமார் தரும் தகவல்.

மக்கள் சந்திப்பு இயக்கம் கோவை புறநகர் பகுதிகளில் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றது. ஓய்வு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் பொது மக்களைச் சந்தித்து, இயக்கப் பணிகளைப் பற்றியும் பெரியார் இயக்கத்தால் மக்கள் அடைந்த பயன்களைப் பற்றியும் விளக்கிப் பேசினார். துண்டறிக்கையைப் படித்துவிட்டு பொது மக்கள் ரூ.10 நன்கொடை வழங்குகிறார்கள்.

டிசம்பர் 13 அன்று கோவில்பாளையத்தில் தோழர்கள் நா.வே. நிர்மல் குமார், மு.மாரிமுத்து, மா.கோமதி ஆகியோர் மக்களை சந்தித்து துண்டறிக்கைகளை வழங்கினர்.

டிசம்பர் 15 அன்று சுந்தராபுரத்தில் நா.வே. நிர்மல் குமார், ப. இராமகிருஷ்ணன், மு. மாரிமுத்து ஆகிய தோழர்களும்,

டிசம்பர் 21 ஆம் தேதி பொள்ளாச்சியில் விஜய ராகவன், நா.வே. நிர்மல் குமார் ஆகியோரும்,

டிசம்பர் 22 அன்று குனியமுத்தூரில் மு. மாரிமுத்து, நா.வே. நிர்மல் குமார் ஆகியோரும் மக்களைச் சந்தித்து துண்டறிக்கைகளை வழங்கினர். ஒவ்வொருவரிடமும் ரூ.10 நன்கொடையாகத் திரட்டப்பட்டது. மக்கள் ரூ.6,330 நன்கொடை வழங்கினர்.

DATE OF PUBLICATION 29.01.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# தோழமை அமைப்புகளும் பங்கேற்ற ஆர்ப்பாட்டம்

முதல் பக்கத் தொடர்ச்சி

ராமசாமி ரெட்டியார், அவர் பெயரால் அமைந் துள்ள வளாகத்தில் உள்ள மருத்துவமனையில் இடஒதுக்கீடு மறுக்கப் படுவதை சுட்டிக்காட்டினார் வழக்கறிஞர் திருமூர்த்தி, இளைய தலைமுறையும் மூத்த தலைமுறையும் இணைந்து, இந்தப் போராட்டத்தை நடத்துகிறது என்றார். தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மாவட்ட தலைவர் ஜான் நன்றி கூறினார்.

**பழனியில் :** சென்னை பல்நோக்கு மருத்துவமனையில் மருத்துவப் பணியாளர்கள் நியமனத்தில் இடஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்க வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் திண்டுக்கல் மாவட்டம் பழனி நகரத்தில் நடைபெற்றது.




காலை 11 மணிக்குத் துவங்கிய ஆர்ப்பாட்டத்திற்குப் பழனி நகரச் செயலாளர் பெரியார் பத்மநாபன் தலைமை தாங்கினார். வழக்கறிஞர் செல்லத்துரை, ஒட்டன் சத்திரம் நகரச் செயலாளர் ப.மூர்த்தி, பழனி ஒன்றிய அமைப்பாளர் சி.கருப்புச்சாமி ஆகியோர் வகித்தனர். அரசுக்கு எதிராகவும் இடஒதுக்கீட்டிற்கு ஆதரவாகவும் முழக்கங்களை எழுப்பினர்.

பொன். அன்பழகன் (வி.சி.க.), நாகராஜன் (புரட்சி பாரதம்), இடஒதுக்கீட்டிற்கு எதிரான அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும் தி.வி.க. எடுக்கும் போராட்டங்களுக்கு ஆதரவாகவும் உரையாற்றினர். திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் நல்லதம்பி உரையில் இடஒதுக்கீட்டிற்கான முதல் சட்டத் திருத்தம் பெரியாரின் போராட்டத்தால் கொண்டுவரப்பட்ட வரலாற்றைப் பதிவு செய்தார். தமிழக அரசு தன் நிலையை மாற்றிக் கொள்ளாவிட்டால் கழகம் கடுமையான போராட்டங்களை முன்னெடுக்கும் என எச்சரித்தார்.

மாவட்டத் தலைவர் பெரியார் நம்பி தனது உரையில், இடஒதுக்கீட்டு வரலாற்றை முழுமையாகப் பதிவு செய்தார் ரூ9000 வருமான உச்சவரம்பு கொண்டு வந்ததால் எம்.ஜி.ஆர்.க்கு தமிழகத்தில் வந்த எதிர்ப்பை நினைவுகூர்ந்து ஜெயலலிதா இடஒதுக்கீட்டிற்கு எதிரான நிலையை மாற்றிக் கொள்ளாவிட்டால் தமிழகம் புறக்கணிக்கும்” என எச்சரித்தார்.

மதுரை மண்டல அமைப்புச் செயலாளர் இராவணன் தனது உரையில், “ஜெயலலிதாவின் அறிக்கைக்கு மறுப்பாக நீதிமன்றத் தீர்ப்புகளை ஆதாரமாகக் காட்டி எய்ம்ஸ் நிறுவனங்களில் இடஒதுக்கீடு கடைபிடிக்கப்படுவதை ஆதாரத்தோடு சுட்டிக்காட்டி உரையாற்றினார். மேலும் ஜெயலலிதாவின் பார்ப்பனச் சார்பு போக்கைக் கண்டித்தும், கழகத் தலைவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் உரையாற்றினார். பழனி ஒன்றிய தலைவர் முருகன் நன்றி கூறினார்.

நிகழ்வில் மதுரை மாவட்டத் தலைவர் முருகேசன், மாவட்ட செயலாளர் பாண்டியன், தேனி மாவட்ட செயலாளர் குமரேசன், தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் உதயசங்கர், தமிழ்நாடு அறிவியல் மன்ற திண்டுக்கல் மாவட்ட பொறுப்பாளர் முருகானந்தம், இளங்கோ (ஒன்றிய அமைப்பாளர் பழனி), தங்கவேலு (ஒட்டன் சத்திரம் ஒன்றிய தலைவர்), சுரேசு (ஒன்றிய செயலாளர்), வடிவேலு (ஒன்றிய செயலாளர், ரெட்டியார் சத்திரம்), சின்னசாமி (ஒட்டன் சத்திரம் நகரத் தலைவர்), முருகேசன், கடத்தூர் காந்தி (மடத்துக்குளம் நகர அமைப்பாளர்), ஜெயப்பாண்டி (வத்தலக் குண்டு ஒன்றிய அமைப்பாளர்) மற்றும் திண்டுக்கல், தேனி மாவட்டத்தைச் சார்ந்த 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சேலத்தில்:** சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் 25.1.2014 அன்று காலை 11 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகம் சார்பாக ஒருங்கிணைக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார். சமூக அறிவியல் கல்வி இயக்கம் ராஜலிங்கம், விடுதலை சிறுத்தைகள் மாவட்டச் செயலாளர் இரா. நாவரசன், வழக்குரைஞர் மாணவர் கூட்டமைப்பு இரா. பார்த்திபன், அருந்ததியர் மக்கள் இயக்கம் ஜெ. பிரதாபன், மனித உரிமை பாதுகாப்பு மையம் மாயன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் இளமாறன், ஏற்காடு தேவதாஸ், தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கம் பூமொழி, மண்ணின் மைந்தர்கள் சார்பாக முரளி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சேக் முகமது, தமிழ்நாடு மக்கள் கட்சி மாரியப்பன், சி.பி.எம்.எல். மணிமாறன், ம.தி.மு.க. வழக்குரைஞர் அனந்தராஜ், தி.வி.க. மண்டல அமைப்புச் செயலாளர் சக்தி, த.பெ.தி.க. மாவட்ட செயலாளர் கு. தங்கராஜ் ஆகியோர் உரையாற்றினர். கழக மாநகர செயலாளர் மூனாங்காடு சரவணன் நன்றி கூறினார்.



# திருப்பூரில் கழகம் நடத்திய தமிழ்ப் புத்தாண்டு விழா – தமிழர் திருநாள் விழா




*14.1.2014* செவ்வாய் கிழமை காலை 8 மணி முதல் இரவு பத்து மணி வரை திருப்பூர் வீரபாண்டி பாரதி நகர் பெரியார் திடலில் கழகத்தின் சார்பாக பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. விழாவினை பகுதி கழகத்தினரும், தமிழ்நாடு மாணவர் கழகமும் இணைந்து நடத்தினர். தொடக்க நிகழ்வாக பறை இசைக்கப்பட்டது. திராவிடர் கலைக் குழுவினரின் மேடை நாடகம் கருத்துச் செறிவுடன் நடத்தப்பட்டது. மக்களை வெகுவாக கவர்ந்தது. இறுதியாக விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பரிசுப் பெற்றவர்களுக்கு மாநில செயலவைத் தலைவர் சு.துரைசாமி, மாநில அறிவியல் மன்ற அமைப்பாளர் வீ.சி சாமி, மாநகர ஒன்றிய பொருப்பாளர்கள் அமுதம் கணேசு, ஆடிட்டர் இரமேசு மற்றும் சுசிலா, பரமேஸ்வரி பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். தோழர்கள் அனைவருக்கும் கழக நாள்காட்டி நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது. நிகழ்வினை, தோழர்கள் வ.தமிழ்ச்செல்வன், வெ.அரவிந்த், வி.விசயன், மு.கார்த்திக், க. ஹரிஸ், சி. இராமன், சா.சாமுவேல், வி.ஆனந்தன், வி.விக்னேசு, சி. இலட்சுமணன் உள்ளிட்ட தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

*19.1.2014* ஞாயிறு காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக திருப்பூர் மாஸ்கோ நகர் பகுதியில் 5 ஆம் ஆண்டு பொங்கல் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குழந்தைகள், பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடந்தன. இந்த நிகழ்வுகளை தோழர்கள் பாலு, அகிலன், சண்முகம், மாதவன் மற்றும் மாணவர் கழகத் தோழர்கள் சி.நாகராசு, சி.முருகன், இரா. மோகன், வினோத், பா.முத்து, கி. கணபதி, மா. விஜய், மு.ராகுல், ரா. சங்கர், மா.சிவா, பூமி, அ. குணா, சா.வெற்றி, ப.மணிகண்டன், சு.நந்தகுமார், ம.ராம்கி ஆகியோர் இணைந்து நடத்தினர். பெரியவர் இராமசாமி அரசியலிலிருந்து ஒதுங்கி கழகத்தில் இணைந்து பணியாற்ற முன் வந்தார். திராவிடர் கலைக் குழுத் தோழர்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். 2 மணி நேரம் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தன. அது மக்களை பெரிதும் கவர்ந்தது. செயலவைத் தலைவர் சு. துரைசாமி, அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் ஆசிரியர் வீ. சிவகாமி, மாவட்ட அமைப்பாளர் கிளாகுளம் செந்தில், மாநகர செயலாளர் இரா.குமார், சு.க.ப.க. மாவட்ட அமைப்பாளர் பரமேசுவரி, முகில் இராசு, நீதியரசன் உள்ளிட்ட தோழர்கள் வருகை தந்து சிறப்பித்தனர். மாலை நடந்த பரிசளிப்பு விழாவில் கழக அமைப்புச் செயலாளர் தாமரை கண்ணன், மண்டல செயலாளர் விசயன், சு.க.ப.க. கோவை மாவட்ட அமைப்பாளர் அ.ப.சிவா, மதுரை மண்டல செயலாளர் இராவணன் ஆகியோர் பங்கேற்றனர். விழாவின் வெற்றிக்கு ஒரு மாத காலமாக உழைத்த தோழர்களுக்கு நினைவுப் பரிசாக தாமரைக் கண்ணன் பெரியாரின் குடிஅரசு புத்தகங்களை வழங்கினார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஓரிரு தோழர்களோடு ஏற்பாடு செய்து நடத்திய பொங்கல் விழா நிகழ்வு, வளர்ச்சிப் பெற்று 20க்கும் மேற்பட்டத் தோழர்கள் கழகத்தில் புதிதாக இணைந்து, விழாவை சிறப்பாக நடத்தியது குறிப்பிடத்தக்கது. கலைக் குழுவில் கலந்து கொண்ட தோழர்கள்: அர்சுணன், மேட்டூர் குமரேசன், சேலம் பிரபு, திருப்பூர் நகுலன், பிரசாத், வடிவேலு, மணிகண்டன், குட்டிமணி, இரா. குமார், பல்லடம் மணிகண்டன்.

**ஈரோட்டில் :** இடஒதுக்கீட்டைப் புறந்தள்ளும் தமிழக அரசைக் கண்டித்து கழகம் சார்பாக ஈரோடு வீரப்பன் சத்திரம் பேருந்து நிறுத்தம் அருகே 25.1.2014 சனிக்கிழமை அன்று காலை 11 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு ஈரோடு மண்டல செயலாளர் இராம. இளங்கோவன் தலைமை தாங்கினார். ஈரோடு ம.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கணேச மூர்த்தி, கழகப் பொருளாளர் இரத்தினசாமி, வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திக சோதி ஆகியோர் முன்னிலை வகித்து கண்டன உரையாற்றினர். தமிழ்த் தேசம் மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் நிலவன், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஈரோடு மாநகர செயலாளர் வினாயகமூர்த்தி, ஆதித் தமிழர் பேரவை தமிழ் இன்பன், வீரமுருகன், தமிழ்த் தேசம் குடியரசு இயக்கத்தைச் சேர்ந்த மார்க்கெட் சண்முகம், தமிழக ஒடுக்கப்பட்ட இயக்க மாவட்ட செயலாளர் கலைவேந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழக வடக்கு மாவட்ட செயலாளர் நிவாசு, தெற்கு மாவட்ட செயலாளர் சண்முக பிரியன், மாவட்ட பொருளாளர் சுகுணா, நாமக்கல் மாவட்ட கழகத் தலைவர் சாமிநாதன், ஈரோடு மண்டல செயலாளர் வெங்கட் உள்பட 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக ஈரோடு நகர செயலாளர் சிவானந்தன் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 30th January 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN